

முச்சதம் அடித்து சாதனை

பக்கம் 18

# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

சுடர்: 29 கதிர்: 325 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 31, வெள்ளி 17.10.2014

stay connected with: uthayan.print uthayanprint *Uthayan - A lively National Tamil Daily*


# புலித் தடையை நீக்க நேற்று அதிரடித் தீர்ப்பு

## பயங்கரவாதப் பட்டியலில் இயக்கத்தை சேர்க்கக் கையாண்ட வழிமுறை தவறு என ஐரோப்பிய பொது நீதிமன்றம் தெரிவிப்பு




கொழும்பு, ஒக். 17

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது ஐரோப்பிய நாடுகளில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அமைப்பு மீது தடை விதிப்பதற்கு ஐரோப்பிய சபை (யுரோப்பியன் கவுன்சில்) கடைப்பிடித்த வழிமுறை – நடைமுறை – தவறானது என்பதால் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்க சபை எடுத்த முடிவை நீக்கி உத்தரவிடுவதாக ஐரோப்பிய பொது நீதிமன்றம் (ஹேக் நீதிமன்றம்) நேற்றுத் தீர்ப்பளித்தது. இதனை அடுத்து புலிகள் மீதான தடை நீங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எனினும் இந்தத் தடை நீக்கம் உடனடியாக நடைமுறைக்கு வராது. மூன்று மாத காலத்துக்குள் ஐரோப்பிய சபை புலிகள் மீதான தடையை நீடிப்பதற்கு ஏற்புடையதான வழிமுறையை முன்வைக்காவிட்டால் இந்தத் தடை நீக்கம் முழுமையாக நடைமுறைக்கு வரும். அதுவரையில் பயங்கரவாத இயக்கம் என்ற ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிதிகளை முடக்குவதற்காக ஏற்கன்வே விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தற்காலிகமாக எதிர்காலத்திலும்

22 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை அரசு கவலை

கொழும்பு, ஒக்.17

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை குறித்த வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு தொடர்பில் இலங்கை அரசு கரிசனை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், "ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் உத்தரவானது அனைத்துத் தரப்பினரதும் ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்த விடயமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் உள்விவகாரமாகக் காணப்படுவதால், உள்ளக இறைமையைப் பேணுதலை அடிப்படையாகக் கொண்டு அதன் சட்டக் கட்டமைப்புக்கு அமைவானதான ஐரோப்பிய ஆணையக் குழுவும், ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை தொடர்பில் சிறந்த தீர்மானம் ஒன்றை மேற்கொள்வர் என்று நம்புகின்றோம்."- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் தீர்ப்பானது, ஐரோப்பிய ஒன்றியத்தில் வாழ்கின்ற பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர்கள் மற்றும் இலங்கையைப் பூர்வீகமாகக்கொண்ட ஐரோப்பிய பிரஜைகளின் பாதுகாப்பு விடயத்தில் தாக்கம் செலுத்தக் கூடும் என்றும் இலங்கை அரசு எச்சரிக்கை செய்துள்ளது. (ற)

## இருண்ட வானில் ஒளிக்கீற்று – வை.கோ.

கொழும்பு, ஒக். 17

விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை குறித்து ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் வழங்கியுள்ள உத்தரவானது இருண்ட வானில் தோன்றும் ஒளிக்கீற்றுப் போன்றுள்ளது. ஏனைய நாடுகளும் இதனையே பின்பற்றும் என்பது உறுதி - இவ்வாறு தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இந்தியா உள்ளிட்ட உலகின் 40 க்கும் மேற்பட்ட நாடுகள், இலங்கை அரசு நடத்திய போருக்குத் துணைபோனதும், நிதி மற்றும் இராணுவ உதவிகளை வாரி வழங்கியதும் சர்வதேச சட்ட நியதிகளுக்கும், உலக நீதிக்கும் எதிரானது. நெதர்லாந்து ஹேக் மாவட்ட நீதிமன்றம் 2011 ஒக்ரோபர் 21 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் அல்ல என்று தீர்ப்பளித்தது. அதற்கு பின்பு 2013 ஜூன் 23 இல் நேபிள்ஸ் நீதிமன்றம் புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க



யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களால் நேற்று உலக கை கழுவல் தினம் கொண்டாடப்பட்டது. மாணவர்கள் விழிப்புணர்வுப் பதாகைகளை ஏந்திய வண்ணம் ஊர்வலமாகச் சென்றனர். மாணவர்களுடன் பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் இணைந்து கொண்டனர். (ற-21)

## கஞ்சா பொதிகளுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.17

பதினெட்டு கஞ்சாப் பொதிகளை வைத்திருந்த நபர் ஒருவர் நேற்று யாழ்ப்பாணத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து எடுக்கப்பட்ட நடவடிக்கையிலே குருநகர் சின்னக்கடை பகுதியில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த நபரின் வீட்டில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை

19 ஆம் பக்கம் பார்க்க

## முதியவர்களுக்கு தனியான வைத்தியசாலை அவசியம்

### பல்வேறு தரப்புகளும் பரிந்துரைத்துள்ளன என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17

"இலங்கையில் முதியவர்களுக்கு தனியாக வைத்தியசாலை இதுவரை அமைக்கப்படவில்லை. ஆனால் வைத்தியசாலை அமைப்பது தொடர்

19 ஆம் பக்கம் பார்க்க



## கிணறுகளில் 'ஒயில்' நீதிமன்றம் அக்கறை

யாழ்ப்பாணம், ஒக்.17



சுன்னாகத்தில் உள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ள விடயம் தொடர்பில் மல்லாகம் நீதி மன்று பிரதேச சபை, பிரதேச செயலகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றிலிருந்து அறிக்கைகளைக் கோரியுள்ளது. அந்தப் பகுதியில் சுமார் 250க்கும் மேற்பட்ட கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளது. தற்போது மல்லாகம் நீதிமன்றக் கிணறு உட்பட அதனை அண்மித்த பகுதிகளிலும் அதன் தாக்கம் உணரப்பட்டுள்ளது. சுன்னாகம் மின்சார சபையின் நடவடிக்கை காரணமாகவே அந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அதையடுத்து இவ் விடயம் குறித்து மல்லாகம் நீதிமன்றம் கவனம் செலுத்தியுள்ளது. இது குறித்து ஏற்கனவே சில அறிக்கைகள் பெறப்பட்டுள்ள நிலையில், நேற்றுமுன்தினமும் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களிடமும் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. தற்போது குறித்த அதிகாரிகளிடமிருந்தும் அறிக்கைகளை நீதிமன்று கோரியுள்ளது. அந்தப் பகுதிக் கிணறுகளில் கழிவு ஒயில் கலக்கின்றமை மேலும் மேலும் அதிகரித்து வருகின்றது என்று அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். (ற-4,86)

## நீதிமன்றில் சந்தேகநபர் நேற்று மயங்கிச் சரிவு

### பொலிஸார் தாக்கியதால் மன்னாரில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

மன்னார் நீதிமன்றில் வழக்கு நடந்து கொண்டிருந்தபோது சந்தேகநபர் மயக்கமுற்று விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் சிறிது நேரம் தாமதமாகின. சந்தேகநபரை சிகிச்சைக்குச் சேர்ப்பித்த பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகள் மீண்டும் வழமைக்குத் திரும்பின. வைத்தியசாலையின் அதி தீவிரப் பிரிவில் சேர்க்கப்பட்ட சந்தேக நபர் பின்னர் சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்டார்.

பொலிஸாரினால் கடுமையாக தாக்கப்பட்டதனாலேயே சந்தேக நபர் மயங்கிச் சரிந்தார் என்று நீதிமன்றில் குற்றஞ் சாட்டது. சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த மொன்பேட் என்ற சந்தேகநபரின் வீட்டுக்கு நேற்று முன்தினம் இரவு தலைமன்

19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் வாக்கு கொள்ளை நடத்துவதற்கு அரசு திட்டம்

## அதற்காகவே வெளிநாட்டவர்களுக்குத் தடை

## லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.17
அரசு வாக்குக் கொள்ளையில் ஈடுபட முயற்சிக்கின்றது. அதனாலேயே வெளிநாட்டவர்கள் வடக்குக்குச் செல்வதைத் தடுக்கும் முயற்சிகளை ஆரம்பித்துள்ளது என்று ஐக்கிய் தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றஞ்சாட்டியுள்ளார்.
சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்கே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களின் வாக்குகளைக் கொள்ளையிடும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுவருகின்றது. அதன் காரணமாகவே வடக்குக்குப் பயணம் செய்யும் வெளிநாட்டவர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் பக்கச்சார்பற்ற வகையில் கண்காணிப்பு மேற்கொள்வதற்கு அரசு இடமளிக்காது. கண்காணிப்பாளர்கள் வடக்குக்குச் செல்வதைத் தடுத்து வாக்குக் கொள்ளையில் ஈடுபடுவதற்கே அரசு திட்டமிட்டுச் செயற்படுகின்றது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## தோல்வியை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது

-சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.17
அரசு பகிரங்கமாக ஒப்புக் கொள்ளாவிட்டாலும் தோல்வியை ஏற்கனவே ஏற்றுக் கொண்டு விட்டது என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது,
"அதன் காரணமாகவே அவசரமான ஜனாதிபதித் தேர்தலுக்கு அரசு தயாராகி வருகிறது. எனினும் அரசமைப்புச் சட்டத்துக்கு அமைய மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது முறையாக போட்டியிட முடியுமா என்ற சட்டச் சிக்கல் காணப்படுகிறது.
அதனால், அரசு தனது விருப்பத்திற்கு அமைய ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால், முடிவுகளை அவர்களே அனுபவிக்கும் நிலை ஏற்படும்"- என்று குறிப்பிட்டுள்ளார். (ற)



சட்டமா அதிபர் பாலித பெர்னான்டோ எழுதிய சட்டத்துறை சம்பந்தமான சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலான இரண்டு நூல்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அலரி மாளிகையில் வைத்துக் கையளிக்கப்பட்டன. சட்டமா அதிபர் பாலித பெர்னான்டோ நேற்று முதல் தனது பதவிலிருந்து ஓய்வு பெற்றார். அதனை முன்னிட்டே அவர் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார். (ற)

## விபத்துகள்

திருகோணமலை

### மின்கம்பத்துடன் பவுஸர் மோதி விபத்து



எரிபொருள் நிரப்பும் பவுஸர் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பங்களுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் திருகோணமலை அபயபுர சுற்றுவட்டத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றுள்ளது. விபத்தில் வாகனத்தின் முன்பகுதி கடுமையாகச் சேதமானதுடன், 3க்கும் அதிகமான மின்கம்பங்கள் மற்றும் வீதி சமிக்ஞை, விளம்பரப் பதாகைகள் என்பன உடைந்து சேதமாகியுள்ளன. (ற)

மட்டக்களப்பு

### கீழே விழுந்து சிறைக் கைதி சாவு

நீதிமன்றத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த கைதி ஒருவர் கூரையிலிருந்து தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். சிறு குற்றவாளியான இவர் மட்டக்களப்பு சிறைச்சாலை கைதியாவார்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த பரமானந்த மூர்த்தி சண்முகநாதன் (வயது-45) என்பவரே உயிரிழந்துள்ளார்.
படுகாயமடைந்த கைதி உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# வடக்கு மாகாணத்தை அரசு தனிநாடாக கையாள்கிறதா?

## நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக்.17
இந்த நாட்டில் 9 மாகாணங்கள் உள்ளன. அவற்றில் 8 மாகாணங்களுக்கு இல்லாத நடைமுறை வடக்கு மாகாணத்துக்கு மாத்திரம் கொண்டு வரப்படுவதற்கான காரணம் என்ன? வடக்கு மாகாணம் இந்த நாட்டில் உள்ளடக்கப்படவில்லையா? அப்படியாயின் அரசு வடக்கு மாகாணத்தை தனி ஒரு நாடாகப் பிரகடனப்படுத்தியுள்ளது என்றே கொள்ள வேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.
வடக்கு மாகாணத்துக்குப் பயணம் செய்யும் வெளிநாட்டவர்கள், பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெற வேண்டும் என்ற நடைமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.
"ஒரே நாடு ஒரே தேசம் என்று கூறுபவர்கள் ஏன் வடக்கு மாகாணத்தை மாத்திரம் புறந்தள்ளுகின்றார்கள். இங்கு வாழ்பவர்கள் வேறு நாட்டுப் பிரஜைகள் என்றா அவர்களது நடவடிக்கைகள் இருக்கின்றது. வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் வடக்கு மாகாணத்துக்குச் சென்றால், எங்கு செல்கின்றனர்?, தங்கும்இடம்எது? போன்ற விடயங்களைப் பாதுகாப்பு அமைச்சிடம் அறிவிக்க வேண்டும் என்பது ஜனநாயமற்ற செயலாகும். நாட்டில் எந்தப் பாகத்துக்கும் யாரும் செல்லமுடியும் என்று தம்பட்டம் அடித்த அரசு இன்று வட மாகாணத்திற்கு மாத்திரம் தடை விதிப்பதன் காரணம் என்ன?. அங்கு இராணுவ ஆட்சி தற்போதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதற்கு இந்தத் தடை சிறந்த உதாரணமாகும்.'
அண்மையில் இந்த நாட்டின் ஜனாதிபதி வடக்கு மாகாணத்துக்கு 3 நாள் பயணத்தை மேற்கொண்டு வந்ததன் பின்னர் இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இப்படியான நடவடிக்கைகள் இலங்கையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாகவே கூறிவருகின்றது.
இந்த நாட்டிலே சமாதானம் நிலவுகின்றது என்று சர்வதேசத்துக்குப் போலிப் பரப்புரை செய்யும்இந்தஅரசின்உண்மை முகத்தை இனியாவது புரிந்து செயற்பட்டு எமது மக்களுக்கான இறுதியானதும், நிரந்தரத் தீர்வானதும் பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேசம் விரைந்து செயற்பட வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# அல்-குவைதா சந்தேக நபர் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்

## தற்போது அவர் பயங்கரவாதப் புலனாய்வு வசம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.17
மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்ட அல்-குவைதா அமைப்பின் உறுப்பினர் என்று கூறப்படும் இலங்கை பிரஜையான மொஹமட் உசைன் மொஹமட் சுலைமான், நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.
இந்தியாவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட குற்றஞ்சாட்டின் பேரிலேயே அவர், மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டுள்ள நிலையில் தற்போது, மேலதிக விசாரணைகளை நடத்துவதற்காகப் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.
இந்தியாவில் ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இலங்கையரான ஷாகீர் உசைன் வழங்கிய தகவல்களுக்கு அமையவே சுலைமான், கோலாலம்பூரில் வைத்து கடந்த மே மாதம் கைதுசெய்யப்பட்டார். இலங்கைப் பிரஜையான மொஹமட் உசைன் மொஹமட் சுலைமானிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவரைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோரியிருந்தது. ஆயினும் அதனை மறுத்த மலேசியா, அவரை இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளது. தென்னிந்தியாவிலுள்ள தூதரகங்களின் மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்கு முயற்சித்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ற)

# வடக்குக்கு தன்னாட்சி கிடைத்தால் உலகம் வியக்குமளவு அபிவிருத்தி

## • வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17
வடக்குக்குத் தன்னாட்சி அதிகாரம் கிடைத்தால் உலகமே வியக்கும் வண்ணம் பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும். ஆனால் கொழும்பு அரசு அத்தகைய அதிகாரங்களைத் தன்னிடம் வைத்துக் கொண்டு, அதிகாரிகளைப் பார்வையாளர்களாக மாற்றியுள்ளது. - இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.
வடக்கு மாகாண நீரியல் ஆய்வு மையத்தின் திறப்பு விழா மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் தொண்டமானாறில் நடைபெற்றது. அதில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"காலம் பிந்திய போதும் வடக்கு மாகாண விவசாய அமைச்சு சார்ந்த நீர்ப்பாசனத் திணைக்களம் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. வடக்கின் நீர்வளம் தொடர்பாக பல்வேறுபட்ட விமர்சனங்களும் ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. நிலத்தடி நீரில் நைத்திரேட், நன்னீர் உவர் நீராக மாறுதல், குளிர் பானங்களில் மலக் கிருமிகள், கடும் வரட்சியால் பயிரழிவுகள் என்று நீர் தொடர்பில் அச்சமூட்டக் கூடிய செய்திகள் உலாவுகின்றன.
இந்தநிலையில், நாங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மிகவும் பொருத்தமான, தொண்டமானாற்றுப் பகுதியில் வடக்கு மாகாண நீரியல் ஆய்வுமையம் திறந்து வைக்கப்படுகிறது. வித்தியாசமான காலநிலையைக் கொண்டிருக்கக் கூடிய வடக்கு மாகாணத்தில் தனியான நீரியல் கொள்கைகளைவகுக்கவேண்டியுள்ளது.
அரச அமைப்பே வர்த்தக நிறுவனங்களின் நீர்ப் போத்தல்களை விற்பனை செய்யும் வாகனங்களாக இருக்க முடியாது. அரச திணைக்களங்கள் பன்னாட்டு நிறுவனங்களின் வலைப் பின்னல்களுக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீரிலும் அரசியல் கலந்துள்ளதால் பாதிப்பு இல்லாமல் தெளிவாகச் செயற்பட வேண்டியுள்ளது .
2015 இல் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் இயந்திரங்கள் கொண்டுவரப்படும் போதிய நிதி ஒதுக்கீடுகள் இல்லாததால் இத்தகைய திட்டங்களை முன்னெடுக்க முடியாது உள்ளது. அரசு சொல்வதைப் போன்று அபிவிருத்திக்குப் பின்னிற்பவர்கள் நாம் அல்ல. தன்னாட்சி அதிகாரம் கிடைத்தால் அவற்றை நிறைவேற்றுவோம்"- என்று தெரிவித்தார்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நீரியல் ஆய்வு மையத்தை திறந்து வைத்தார். அத்துடன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாகக் கோழிக் குஞ்சுகளையும் வழங்கினார்.
நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சு சார்ந்த அதிகாரிகள் எனப்பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-14)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 31 வெள்ளி (17.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 325

# வடக்கில் கொடூர இராணுவ ஆட்சி

# பயணக் கட்டுப்பாடு இதற்குச் சான்று

## மாவை எம்.பி. காட்டம்



கொழும்பு, ஒக்ரோபர் 17

**"வெளிநாட்டவர்கள் இனிமேல் வடக்கு மாகாணத்துக்குச் செல்ல வேண்டுமாயின் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெற வேண்டும் என்று இராணுவப் பேச்சாளர் கூறியிருக்கின்றமை வடக்கில் கொடூர இராணுவ ஆட்சி நிலவுகின்றது என்பதற்கும், அங்குள்ள மக்கள் திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்டுள்ளனர் என்பதற்கும் சிறந்த உதாரணங்களாகும்."**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா நேற்று தெரிவித்தார்.

"வடக்கில் உள்ள தமிழ் மக்களை மேலும் அடக்குமுறைக்குள்ளும், ஒடுக்குமுறைக்குள்ளும் வைத்திருக்கும் நோக்குடன் அரசு கொண்டுவந்துள்ள இந்த நடைமுறையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தொடர்பில் சர்வதேச அமைப்புகளிடம் முறையிடவுள்ளோம். அத்துடன், இதனை நாடாளுமன்றிலும் எடுத்துரைக்கவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பயணத்துக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெறவேண்டும் என்ற நடைமுறை இனிமேல் வடக்கின் உண்மை நிலையை அறிய அங்கு செல்லும் சர்வதேச முக்கியஸ்தர்கள், வெளிநாட்டு இராஜதந்திரி

(22ஆம் பக்கம் பார்க்க)

## தினமும் நான்கு ரயில் சேவைகள்

### யாழ்ப்பாணத்தில் இருந்து

யாழ்ப்பாணம். ஒக்.17

யாழ்.ரயில் நிலையத்தில் இருந்து தினமும் 4 சேவைகள் இடம்பெறும். அத்துடன் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் விசேட ரயில் சேவை ஒன்று மேலதிகமாகச் சேவையில் ஈடுபடும் என்று யாழ். ரயில் நிலையம் அறிவித்துள்ளது.

இதற்கமைவாக யாழ். தேவி கடுகதி காலை 7.25 மணிக்கும், நகர் சேர் கடுகதி முற்பகல் 11 மணிக்கும், குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி பிற்பகல்1.45 மணிக்கும், இரவு தபால் ரயில் இரவு 7.05 மணிக்கும் யாழ்.ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும்.

யாழ்.ரயில் நிலையத்தில் இருந்து ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் சேவைகள் இடம்பெறும்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாண வருமான வரி திணைக்களம் விரைவில்

யாழ்ப்பாணம், ஒக். 17

வடக்கு மாகாண வருமான வரி திணைக்களத்தை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. அதற்கு முன்னோடியாக, வடக்கு மாகாண நிதி நியதிச் சட்டத்தை வர்த்த மானியில் பிரசுரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை கடந்த வருடம் பதவியேற்ற பின்னர், நிதி நியதிச் சட்டம் மற்றும் முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றியுள்ளன. இதற்கு வடக்கு மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றி

(22ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு அரச ஊழியரின் ஆங்கில மொழி விருத்திக்குப் பிரிட்டன் உதவவேண்டும்

### அந்த நாட்டுப் பிரதித் தூதுவரிடம் முதலமைச்சர் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஒக். 17

வடக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கு ஆங்கில மொழிக் கல்விக்குரிய பயிற்சிகள் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில், பிரிட்டன் தூதுவருடன் கலந்துரையாடியதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு முதன் முதலாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை வருகை தந்த, இலங்கைக்கான பிரிட்டனின் பிரதித் தூதுவர் லோறா டேவிட்ஸ், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்

(22ஆம் பக்கம் பார்க்க)

## பொரித்த மீனில் நெளிந்தது புழு

யாழ்ப்பாணம், ஒக். 17

திருநெல்வேலியில் உள்ள உணவகம் ஒன்றில் உணவு உண்பதற்குச் சென்ற பல்கலைக்கழக விரிவுரையாளர், மீன் சாப்பாட்டில் வைக்கப்பட்டிருந்த பொரித்த மீனில் புழு ஒன்று நெளிவதைக் கண்டதும் அவரும் நெளிந்து நிலை தடுமாறிவிட்டார்.

இந்த அருவருப்பான சம் பவத்தை அடுத்து அவர் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்துள்ளார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.-கொழும்பு பஸ் மீது நேற்று இரவும் கல் வீச்சு

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த பஸ் மீது யாழ். செம்மணியில் வைத்து இனந்தெரியாதோர் கல் வீசித் தாக்குதல் நடத்தியதால் பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடி நொருங்கியது.

ஜனாதிபதி வடக்குக்குப் பயணம் மேற்கொண்டு வழங்கிய அரச பஸ் முதல்முறையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணம் மேற்கொண்ட போதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வீதியோரம் காத்து நின்றவர்களே

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றிய புலித்தடை நீக்கம்; பேஸ்புக்கில் பலரும் மகிழ்ச்சிக் கருத்து

கொழும்பு, ஒக். 17

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடைக்கான வழிமுறையை விலக்குவதாக ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ள நிலையில், அது தொடர்பில் தமது மகிழ்ச்சியை பலரும் முகநூல் வழியாக வெளிப்படுத்தியுள்ளனர்.

தடை நீக்கப்பட்டது தொடர்பான செய்தி இணையத் தளங்களில் நேற்றுமாலை 3 மணியளவில் வெளியானது. பல்வேறு இணையத் தளங்களும் இந்தச் செய்தியைப் பிரசுரித்திருந்தன. இலங்கையிலுள்ள தமிழர்கள், புலம் பெயர்ந்த தமிழர்கள், தமிழகத்தைச் சேர்ந்த பலரும், குறித்த செய்திகளை தமது முகநூலில் பகிர்ந்துள்ளனர்.

அத்துடன் தமிழீழ (22ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் தினத்தில் அவர்களை அவதூறாக பேசினாராம் அதிபர்

யாழ்ப்பாணம், ஒக். 17

ஆசிரியர் தின நிகழ்வில் ஏற்பட்ட தவறுக்காக ஆசிரியர்களை அதிபர் அவதூறாகப் பேசிய சம்பவம் ஆசிரியர்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ். மாவட்டத்தில் உள்ள ஒரு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

நேற்றுமுன்தினம் 15ஆம் திகதி புதன்கிழமை வலிகாமம் பகுதி மகா வித்தியாலயம் ஒன்றில் மாணவர்களால் ஆசிரியர் தின நிகழ்வு கொண்டாடப்பட்டது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு குறித்து ஆய்வு

### விசேட கலந்துரையாடல் வவுனியாவில்

யாழ்ப்பாணம், ஒக்.17

வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் வடக்கின் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் குறித்த கலந்துரையாடலொன்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மினின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை மாலை 2.00 மணிக்கு வவுனியா குருமன்காட்டில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து அஸ்மின் கூறுகையில்,

வடக்கு மாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் பலதரப்பட்ட முயற்சிகள் பல்வேறு மட்டங்களிலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்களைக் கண்டுகொள்ள முடியாதுள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## 13 ஐ தாண்டி அதிகாரங்கள் பெற தமிழ்க் கூட்டமைப்பினர் முயற்சி

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் ஆதரவுடன் 13 ஆவது திருத்தத்தைச் செயற்படுத்தவும் அதனைத் தாண்டிய அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளவும் முயற்சிப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

நேற்று சௌஸ்ரீபாயவில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அதன் செயலாளர் வசந்த பண்டாரவே இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

(22ஆம் பக்கம் பார்க்க)

## சிறுமி துஷ்பிரயோகம்; மாமன் கைது

வடமராட்சி, ஒக் 17

வடமராட்சி பகுதியில் 10 வயதுச் சிறுமியை ஒரு வருடமாகத் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் சிறுமியின் மாமனைப் பருத்தித்துறை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக குறித்த சிறுமி பாடசாலை ஆசியருக்கு தெரிவித்ததை அடுத்து குறித்த

(22ஆம் பக்கம் பார்க்க)

## "மக்களை நோக்கி சேவை" வவுனியாவில்

வவுனியா, ஒக். 17

மக்களை நோக்கி சேவை" என்ற தொனிப் பொருளில் வடமாகாண முதலமைச்சரின் வழிகாட்டலின் கீழ் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள புளியங்குளத்தில் நடமாடும் சேவை இன்றும், நாளையும் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளதாக வடமாகாண

(22ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபன முல்லைத்தீவு கிளை முகாமையாளர்

**சி.சிவகுமார்**

அவர்களின் தாயாரான

திருமதி **தங்கரத்தினம் சிவராஜா**

காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவரது பிரிவால் துயருற்றிருக்கும்

(53291) (45.6.3)

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முல்லைத்தீவுகிளை ஊழியர்கள்.**

# ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்



திருமதி **காயத்திரி பாலமுரளிதரன்**

(முன்னாள் ஆசிரியர் யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி)

தோற்றம் 06.06.1970 — மறைவு 09.10.2012

திதி: அபரபக்க நவமி

ஆண்டிரண்டு ஆனதம்மா
அம்மா என்று உனை அழைத்து!
காயமது ஆறாது
எம் கண்ணிரண்டும் மூடும்வரை
பொறுமையின் பொக்கிஷமே நீங்கள் தான்
மௌனித்து மறைந்ததற்கு
காலன்தான் காரணமா?
ஈரவிழிகளுடன், இருள் சூழ்ந்த இதயத்துடன் வாழ்கின்றோம் இவ்வுலகில்
உதவுகின்ற உறவுகளுக்காய் சிரிக்கின்றோம் நாங்கள் எல்லாம்
ஈராண்டென்ன இருநூறு ஆண்டானாலும் ஆறுமோ எம் துயரம்
உத்தமியே, உங்கள் ஆன்மா சாந்திபெற வேண்டுகின்றோம்
நயினை நாகபூஷணித்தாயை

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.19, 6ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம். (53292)(12.3.6)

**குடும்பத்தினர்.**

# உங்கள் நினைவுகளில் 50 ஆண்டுகள்

திருமதி சவரியம்மா இம்மானுவல் — செல்வி அன்ரோனியா இந்திரா இம்மானுவல்

(யாழ்.ஆயரின் அன்னையும், சகோதரியும்)

இறப்பு



17.10.1964



சவரியம்மா
சதாகால காவலூர் நாயகி
சித்தம் உவந்து நம் ஆயரை ஈந்து
சந்ததம் வாழும் உன்னத அன்னை

புகையிரத விபத்தில் புத்திரி சகிதம்
இன்னுயிர் நீத்து இகபரம் சென்று
இறைவன் பாதம் இணைந்த அன்னை

நினைத்திராப் பொழுதில் நீங்கலாகி
இளமையில் சருகாகி உதிர்ந்து போன
ஆயரின் தங்கை இந்திரா நாமம்
என்றும் எங்கள் நினைவினில் நிலைக்கும்
உள்ளத்தில் உங்களை ஆழப்பதித்து
சோதி தேசத்தில் பேரின்பம் துய்த்து
உயிர்த்தீம் வாழ்வை உலகில் பெற்றிட
உன்னதர் பாதம் பணியும் இவ்வேளையில்
உள்ளங் கைகளில் உங்களை வரைந்தவர்
இருகரம் தாங்கி அணைத்தே காப்பார்........

மலர்களால் அல்ல மனதால் நினைக்கும்........

(53256)(12.3.6)

அனா லூட்ஸ் பொஞ்சின் தம்பு குடும்பத்தினர்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம்.
(யாழ் ஆயர்)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

இணுவில் இந்துக்கல்லூரி யின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக யாழ்-கிளிநொச்சி உதவித் தொழில் ஆணையாளர் ஜெ.நீலலோஜினியும், சிறப்புவிருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் தி.தர்மலிங்கமும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக இறப்பர் உற்பத்தி தொழிற்சாலை ஓய்வு பெற்ற அதிகாரி த.பராபரமும், பழைய மாணவர் சங்கத் தலைவர் ஞா.திருக்கேதீஸ்வரனும் கலந்து கொள்வர். (வ-ரி)

* * *

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் இ.விஜயகுமாரும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் ச.சிவானந்தராசாவும்கலந்துகொள்வர்.

நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்த்துவார். (வ)

## வாசிப்பு மாத நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.17

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபையின் வதிரி பொது நூலகத்தின் தேசிய சேமிப்பு மாத நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று சபையின் தவிசாளர் உ.வியாகேசு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வும் நடன நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (வ-109)

JOHN KEELLS FOUNDATION
மற்றும்
GATEWAY LANGUAGE CENTRE
GATEWAY Language Centre — இணைந்து வழங்கும் — JOHN KEELLS FOUNDATION
ஆங்கில புலமைப்பரிசில்
தெரிவுப் பரீட்சை அனுமதி அட்டை

மேற்படி கற்கை நெறிக்காக விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களில் தெரிவுப் பரீட்சைக்குத் தகுதி பெற்றவர்களின் பெயர், விவரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. மாணவர்களின் விவரங்களை அலுவலக நேரத்தில் பார்வையிட்டு அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்

பரீட்சை நடைபெறும் இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
காலம் : 18.10.2014, சனிக்கிழமை காலை 10.00 மணி

மேலதிக தகவல்களுக்கு : (சி.17036)

GATEWAY
No. 39, College Road, Neeraviady, Jaffna. 021 567 5555

IHCA
INTERNATIONAL HEALTH CARE ACADEMY

உங்களுக்கு CANADA வில் தொழில் மற்றும் குடியேறுவதற்கான ஒரு சுலபமான வழிமுறை. எங்கள் Academy யில் பராமரிப்பாளர் (Live -IN CAREGIVER PROGRAM திட்டத்தில் பதிவு செய்யுங்கள்

தகுதி: A/L Simple Pass ஆங்கிலம்

இது பற்றி ஒரு இலவச கருத்தரங்கு பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

18th October 2014 at Hotel Nelly Star
2nd Cross Street Vavuniya Srilanka
(9 am onwards)

19th October 2014 at Tilco Jaffna City Hotel
70/6, K.K.S Road, Jaffna, Srilanka.
(9 am onwards)

முன் கூட்டிய பதிவுகளுக்கு உடனடியாக அழைக்கவும்

தொலைபேசி இலக்கம்:
077 192 3430/077 192 5 727
No.3, Charlemont Road, Colombo- 6
Tel: + 94112501416
www.ihcasrilanka.com
email ihcacolombo@gmail.com
(சி/16969)(4.3.6) (சி.16976)

# மரண அறிவித்தல்

## சபாரத்தினம் சதீஸ்வரன் (நேதாஜி)



சாவகச்சேரி பெருங்குளம் சந்தியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சதீஸ்வரன் 12.10.2014 ஞாயிற்றுக் கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் -நவநீதம் தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான திருமதி சாந்தி, சிகலா (ஆசிரியை, தமிழ் மகா வித்தியாலயம் BCom பட்டதாரி கணக்கியல்) மற்றும் சாரதா (B.A., கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்-வவுனியா), சங்கீதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானேந்திரனின் அன்பு மைத்துனரும், ஜேசுதாஸ், அலோஷியஸ், சிந்து (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2014) சனிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சாரதா, கீர்த்தா
57/4, ஆதிவிநாயகர் லேன்,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
077 516 1090

த.அகத்தியர்
கற்குழி வடக்கு, சாவகச்சேரி.
077 653 9642

(53281)(7.6.3)

# விழிப்புலனற்ற முதியோருக்கு தனியான இல்லம் வேண்டும்

## யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் முதலமைச்சரிடம் கோரிக்கை

கைதடி ஒக். 17
விழிப்புலன் இழந்த முதியவர்களுக்குத் தனியான இல்லம் அமைக்கப்பட வேண்டும் என்று வட மாகாண முதலமைச்சரிடம் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.
சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் கைதடி தொழில் பூங்காவில் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். விழிப்புலனற் றோர் சங்கத்தின் தலைவர் எஸ். கனகசபை தலைமை யில் நடைபெற்றது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். இதன் போதே மேற்படி கோரிக்கை மனு அவரிடம் கையளிக்கப்பட்டது.
விழிப்புலனிழந்தோரின் வாழ்வாதாரத்துக்கு உதவு தல், ஆண்களுக்கான விடுதி, மலசலகூடம் ஆகியவற்றை தொழிற் பூங்காவில் அமைத் தல், அங்கு வழிபாட்டு மண் டபம் அமைத்தல், தனியாக விழிப்புலனிழந்த முதியோ ருக்காகத் தனியாக முதியோர் இல்லத்தை உருவாக்குதல், எமது உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்த உதவுதல், போக்குவரத்தில் எமக்கான இருக்கைகளில் விழிப்புலனிழந்தோராகிய நாம் அமர வசதி செய்தல் ஆகிய கோரிக்கைகள் அந்த மனுவில் முன் வைக்கப்பட்டிருந்தன.
தொடர்ந்து விழிப்புலனி ழந்தோர் சங்கத்துக்கான இணையத்தளமும் முதலமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
அத்துடன் விழிப்புலனிழந்தோர் சங்கத்தால் நல்லூர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டும் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது.
இறுதியில் முதலமைச்சர் பிரதம அதிதியுரை நிகழ்த் தினார். நிகழ்வில் நூற்றுக் கணக்கான விழிப்புலனிழந் தோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (வ)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



மூதூர்.ஒக்.17
இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் திருகோணமலை மாவட் டத்தில் ஸ்ரீ கோணேஸ் வரா இந்துக் கல்லூரி மாணவன் நவஜோதி வக்சன் 188 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் 3 ஆம் இடத்தையும், கல் லூரியில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார். (வ)

* * *



மன்னார், ஒக்.17
இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாந்தை மேற்கு பிரதேச சபைச் செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மன்-அந் தோனியார்புரம் அ.த.க. பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் செல்வி யூட் அல்பேட் அருள் விழி என்ற மாணவி 165 புள்ளிகளைப் பெற்று அந்தப் பாடசாலையின் வரலாற்றிலேயே முதன் முதலாக சித்தியடைந்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.
சித்தியடைந்த மாணவி யூட் அல்பேட் அருள் விழி மற்றும் கற்பித்த ஆசிரியர் செ.ஜசோதன், பாடசாலையின் அதிபர் நி.யேசு நவநீதன் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (வ-56)

## பொதுக்கூட்டம்

யாழ் பிராந்திய இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இணுவில் பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் தலைவர் ஐ.சிவலோக நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. எனவே சகல நிர்வாக சபை அங்கத்தவர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தொழில் நுட்பவியலாளர் சங்கம் அறிவித்துள்ளது. (வ-ரி)

# அரசமைப்பை மீறாத வகையில் வரவு-செலவு திட்டம் வேண்டும்

## கோருகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஒக்.17
அடுத்த வருடத்துக்கான வரவு -செலவு திட்டத்தை, அரசமைப்பை மீறாத வகையில் சமர்ப்பிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா இந்தக் கோரிக்கையை விடுத்தார். இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது,
"அரசியல் அமைப்பை மீறி வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும் போது அது நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இதன் மூலம் உத்தேச செலவினம் அரச நிறுவனங்களிடம் இருந்து வெளியில் எடுக்கப்படுகின்றன. அரச நிறுவனங்கள் சார்பில் பெற்றுக்கொள்ளப்படும் கடன்கள் கூட வரவு-செலவு திட்டத்தின் மூலம் வெளியில் எடுக்கப்படுகின்றன. எனவே பெற்றுக்கொள்ளப்படும் கடன்கள்கூட அரசமைப்புக்கு மாறாக செலவிடப்படுகின்றன"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

தென்மராட்சி,ஒக்.17
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினால் வாசிப்பைத் தூண்டக்கூடிய பல் வேறு போட்டிகள் பாடசாலை மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு இடையே எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் நடத்தப்படவுள்ளன.
எதிர்வரும் 20 ஆம் திகதி காலை முன்பள்ளிச் சிறார்களுக்காக ஆத்திசூடி மனனப் போட்டியும், மு.ப. 11 மணிக்கு ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியும். எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான ஆத்திசூடி மற்றும் கொன்றை வேந்தன் மனனப் போட்டிகளும்,
23 ஆம் திகதி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான நல்வழி மனனப் போட்டியும் பேச்சுப் போட்டியும்-
27 ஆம் திகதி வினாடி வினா போட்டியும், முன்பள்ளி மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியும் நடைபெறும் என்று நூலகர் சி. தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (வ)


## விற்றுத் தீர்த்தல்

நெல்லியடி பஸ் நிலையத்திற்கு மிக அருகில் உள்ள பிரபல்யமான மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் உள்ள உதிரிப்பாகங்கள் முழுவதுமாக விற்பனைக்கு உள்ளன. அந்த இடத்தில் தொடர்ந்து வியாபாரம் செய்வதற்கும் கடைக் கட்டடத்தை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கும் ஆவன செய்து தரப்படும்.

(சி/16889) (6.4.3)
தொடர்பு: 077 314 4895


## சமாதான நீதிவானாக நியமனம்



பஞ்சரத்தினம் மயூரன் யாழ். மாவட்ட நீதி நிர்வாக சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் யாழ். மாவட்ட நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம்செய்து கொண்டார். யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றி வருகின்றார். அத்துடன் யாழ். மொழிச்சங்கத்தின் செயலாளராகவும் சமூகப் பணியாற்றி வருகின்றார். (வ)


## யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் உற்சவகால அதிர்ஷ்ட சீட்டிழுப்பு இலக்கங்கள்

| | |
|---|---|
| முதாலம் பரிசு - 13125, | 2ஆம் பரிசு - 66106, |
| 3 ஆம் பரிசு - 60683, | 4ஆம் பரிசு - 63225, |

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 5 ஆம் பரிசு - 03938, | 6ஆம் பரிசு - 74445, |
| 7 ஆம் பரிசு - 68168, | 8ஆம் பரிசு - 45040, |
| 9 ஆம் பரிசு - 18225. | |

இந்த அதிர்ஷ்ட பொருள்களை எதிர்வரும் **30.11.2014** ஆம் திகதிக்கு முன்னர் எமது அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வழங்கப்படமாட்டாது எனவும் அறியத்தருகின்றோம்.

அலுவலக முகவரி: இல.28, முதலாம் ஒழுங்கை
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7336

(53284) (45.6.3)
செயலாளர்.

## பிள்ளையார் இன் ரெஸ்ரோறன்ட்

காலை, மதியம், இரவு நேர சாப்பாடுகள்,
உங்கள் சுவைக்கேற்ப சைவ, அசைவ உணவுகள்
எம்மால் சமைத்துத் தரப்படும்.

காலையில்
தோசை, பூரி, மசாலாத் தோசை, முட்டைத்தோசை, நெய்த்தோசை.

இரவில்
தோசை, சப்பாத்தி, பூரி, இடியப்பம், பிட்டு இவை சைவ, அசைவ உணவுகளுடன் கிடைக்கும்.

மதியம்
யாழ்ப்பாண குத்தரிசி, சம்பா இத்துடன் யாழ். மரக்கறிகளுடன் சமைத்த சுடச் சுடச் சுவையான சோறு.

காலை 7 மணி முதல் இரவு 10 மணிவரை திறந்திருக்கும்.
* பிறந்த நாள், திருமணம், பூப்புனித நீராட்டு விழா போன்ற மங்கலகரமான நிகழ்வுகளுக்கு உணவுடன் கூடிய A/C மண்டப வசதிகளும் வழங்கப்படும். ஒரே நேரத்தில் 250 பேர் அமரக்கூடிய மண்டபம் உண்டு. (53282)(7.6.3)

தொடர்புகளுக்கு :
பிள்ளையார் இன்
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(முட்டாசுக் கடை சந்திக்கருகில்)
T.P. : 021 222 2829
Fax : 021 222 4449
Email : pillaiyar.in@gmail.com


## ச.ச.நிலைய கட்டடம் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஒக்.17
வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 2014ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டத்தில் சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு உதயசூரியன் சனசமூக நிலைய கட்டடப் புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை- யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்துக்கு தளபாடங்கள் கொள்வனவுக்கென ஒதுக்கப்பட்ட நிதி சனசமூக நிலையத்தின் கட்டட புனரமைப்பு மற்றும் மின் இணைப்பு வேலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (வ-9)


## ஒரு நாடக இலக்கிய ஒப்பீடு



A Comparative Study of Dramatic Literature
527 நாடகங்கள் எழுதிய
கலாபூஷணம்
அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளையின்
29 ஆவது நூல்
30, கடைச்சாமிவீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(53252)(4.3.6)

## கடை வாடகைக்குண்டு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் ஆடியபாதம் வீதியில் 16'X70' அளவு கொண்ட (இணைந்த குளியலறை) 6 கடைகள் வாடகைக்குண்டு. முழுவதும் மாபிள் பதித்தது. (வாகனத் தரிப்பிட வசதியுண்டு.)
தொ.பே: 077 668 1547 (53279) (4.6.3)



பாராட்டி வாழ்த்துகின்றோம்
Congratulations
செல்வி
கிஷாளினி பகீரதன்
யா/நெல்லியடி
மெ.மி.த.க.பாடசாலையில்
கல்வி கற்று 2014 தரம் - 5
புலமைப் பரிசில் பரீட்சையில்
177 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்துள்ளார்.
இவர் மேன்மேலும் கல்வியில்
பல சாதனைகளைப் படைக்க
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அம்மா, அண்ணா,
அம்மம்மா, மாமன்மார், அத்தைமார்.
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
(51958)(12.3.6)

# இடிந்து விழும் நிலையில் உள்ள மண் வீடுகள்

## பழைய கற்பகபுரம் மக்கள் அவதி

வவுனியா, ஒக். 17
வவுனியா பழைய கற்பகபுரம் மக்கள் மீள்குடியேறிய போதும் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இன்றி இடிந்து வீழும் நிலையில் உள்ள மண் வீடுகளுக்குள் தாம் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின் கீழ்வரும் பம்பைமடு கிராம அலுவலர் பிரிவில் உள்ள பழைய கற்பகபுரம் கிராமத்தில் மீள்குடியேறிய நிலையில் 70 குடும்பங்கள் வாழ்கின்றன.

அடர்ந்த காடுகளாகக் காணப்பட்ட இந்தப் பிரதேசத்தை 1978 ஆம் ஆண்டு வெட்டித் துப்புரவு செய்து இங்கு மக்கள் குடியேறினார்கள்.

1990 ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்த அந்த மக்கள் இந்தியா சென்று 15 வருடங்களாக அகதி முகாமில் வாழ்ந்து வந்தனர்.

போர் முடிந்ததும் மீண்டும் இலங்கை வந்து தமது சொந்த கிராமமான பழைய கற்பக புரத்தில் குடியேற முற்பட்டனர். ஆட்லறித் தளமாக இயங்கிய பெரிய இராணுவத்தளம் இங்கு இருந்தமையால் அவர்கள் மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை.

2009 ஆம் ஆண்டு இராணுவம் இந்த முகாமை மூடி வெளியேறிய பின்னர் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டனர். இங்கிருந்து இராணுவம் வெளியேறியபோதும் இராணுவ பங்கர்களும் காவலரண்களும் 5 வருடங்கள் கடந்த நிலையிலும் அப்படியே தற்போதும் உள்ளன.

அதற்குள் இருந்து முட்கம்பிகளும் உக்கிய வயர்களும் அவ்வப்போது வெளிவருகின்றன. மக்கள் குடியிருப்புக்களுக்குள் காணப்படும் இந்த காவலரண்கள் கூட இன்னமும் அகற்றப்படவில்லை.

இதனால் தோட்டச் செய்கையில் கூட ஈடுபட முடியவில்லை. போர்வலயத்துக்குள்வாழ்வதைப் போன்றே அந்தப்பகுதி மக்கள் தற்போதும் வாழ்கின்றனர்.

1978 ஆம் ஆண்டு காடுகளை வெட்டி வீடு கட்டி வாழ்ந்த இந்த மக்களுக்குக் காணி உறுதிகள் எவையும் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் பிள்ளைகளுடன் வாழ்பவர்கள் காணிகளைப் பிரித்துக் கொடுப்பதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.



இந்த மக்கள் மீள் குடியமர்ந்தபோது ஒவ்வொரு குடும்பத்துக்கும் 16 தகரங்களும் 8 சிமெந்து பைக்கற்றுக்களும் மாத்திரமே வழங்கப்பட்டன.

அவற்றை வைத்துச் சிறிய தற்காலிக மண் கொட்டில்களை அமைத்தே அவர்கள் வாழ்கிறார்கள். பெய்யும் மழையில் ஊசலாடுகிறது வீட்டு மண் சுவர்களும் அவர்களது உயிர்களும். வெடித்துக் கரைந்து போய் உள்ள சுவர்கள் இடிந்து விழுந்தால் அவர்களது உயிர்களுக்கும் ஆபத்து.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சில குடும்பங்களுக்குத் தற்போது மலசல கூடம் வழங்கப்பட்டுள்ளது. அவற்றைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு வீட்டுத் திட்டம் தரமுடியாது என அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

மலசல கூடத்துக்குப் போய் நாம் சமைத்துச் சாப்பிட்டுக் குடும்பமா நடத்த முடியும்? இருப்பதற்கு வீடு இல்லாமல் அதை வைத்து என்ன செய்ய முடியும்?

முதலிலேயே இப்படி சொல்லியிருந்தால் நாம் வீட்டையே கேட்டிருப்போம் என்கின்றனர் அந்தப்பகுதி மக்கள்.

எனவே இராணுவ காவலரண்களுடன் போர் வலயத்துக்குள் வாழ்வது போன்று நிரந்தர வீடுகள் இன்றி தற்காலிக மண் கொட்டில்களில் வாழும் இந்த மக்களின் காணிப் பிரச்சினை, வீட்டுத் திட்டம், தொழில் நடவடிக்கை என்பவற்றுக்கான சிரமங்களுக்கு இவர்களுக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்கப் போவது யார் என்ற ஏக்கத்துடன் இந்தப் பகுதி மக்கள் வாழ்க்கையைத் தொடர்ந்து வருகின்றனர்.

(கு-421)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# புதிய தாங்கி மூலம் குடிதண்ணீரை விரைவில் எங்களுக்கு வழங்குங்கள்

## அக்கராயன் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.17
அக்கராயனில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள குடிதண்ணீர்த் திட்டத்தை விரைவாகப் பூர்த்தி செய்து தமக்கு குடிதண்ணீரை வழங்குமாறு அக்கராயன் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் அக்கராயன் பகுதியில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் குடிதண்ணீர்த் திட்டம் தொடங்கப்பட்டபோது 6 மாதத்தில் குடிதண்ணீர் வழங்குவோம் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தது.

தற்போது கடும் வறட்சியான சூழலில் குடிதண்ணீர் வழங்கல் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆயினும் குடிதண்ணீர்த் திட்டத்துக்கான வேலைகள் முழந்து விட்டன. அண்மையில் கிளி நொச்சிக்குப் பயணம் செய்த அமைச்சர் தினேஸ்குணவர்த்தன கலந்து கொண்ட கூட்டத்தில் அக்கராயனுக்குமின்சாரம் வழங்கப்பட்ட பின்னர் குடிதண்ணீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக் கப்பட்டது.

அக்கராயனில் மீள்குடியேற்றம் நடைபெற்றுத் தற்போது மின் இணைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.



அக்கராயன் குடிதண்ணீர்த் திட்ட வேலைகள் முடிந்துவிட்டன.நல்லதொரு திட்டத்துக் காக எவ்வளவு காலம் காத்திருப்பது என அந்தப் பகுதி மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

அக்கராயன் மத்தி, கெங்காதரன் குடியிருப்பு, அக்கராயன் மேற்கு மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் பெரிதும் துன்பப்படுகின்றனர். எனவே குடிதண்ணீர் வழங்கலைத் துரிதப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(கு-18)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/இரணைப்பாலை றோ.க.ம.வி
பிரதீபா பிரபா விருது-2014
இவ் வருடம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 06.10.2014 அன்று வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சிறந்த அதிபருக்கான பிரதீபாபிரபா விருதினைப் பெற்ற எமது பாடசாலை அதிபர்
ஞா.ஜெபநேசன் (J.P) (S.L.P.S-2-II, B.Ed, Dip.in School managment, P.G.D.E.M)
அவர்கள் எந்நாளும் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

புலமைப்பரிசில் பரீட்சை-2014
இவ் வருடம் நடைபெற்ற தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையில் தோற்றி சித்தியடைந்த



ஆசிரியர் செ.மதனருபன் | ம.தில்ஷாந் 169 | பி.டிலைக்சியன் 167 | த.டில்சான் 164 | ஞா.ரெரன்ஸ் 160

ஆகிய மாணவர்களையும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற த.கிஷானி, கி.கயல்விழி, மோ.டனுஸ்ரலா, ச.மலர்நிலா, கி.ஸ்ரெபான், ந.மித்திரன் ஆகியோரையும் கற்பித்த ஆசிரியர் செ.மதனருபன் அவர்களையும் அதிபர் ஞா.ஜெபநேசன் அவர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.



வடமாகாணத்தில் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் விருதான வீரசூரி விருதினையும் தேசிய மெய்வல்லுனர் தொழில்நுட்ப அலுவலர தரம்-1 இந்த பதவி நிலையைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர் க.சசிகுமார் (BA, P.G.D.E, Dip.in phy Edu, SP.Trd phy Ed, Dip.in Counsiling) அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிசங்கம்,
மு/இரணைப்பாலை றோ.க.ம.வி.
(சி/17033) (4.3.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தில்
2014 தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான



K.கிருசாந் - 185 | ஜெ.கீர்த்திகா - 172 | க.சஞ்சித்காந் - 169 | அ.கிசானினி - 168

ஆகியோருடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மணவர்களான

| | | |
|---|---|---|
| 01) ந.ஆருசன் - 152 | 06) க.சாதனா - 143 | 11) ஜெ.கஸ்வின் - 123 |
| 02) சி.கிருத்திகா - 151 | 07) த.ஜீவினா - 139 | 12) ற.வினோஜன் - 123 |
| 03) ஜெ.லேதுஜா - 146 | 08) ற.திலக்சன் - 139 | 13) சி.மயூரன் - 118 |
| 04) க.பிறின்சிகா - 144 | 09) [illegible] - 137 | 14) பா.ஆரணன் - 102 |
| 05) பி.சாகிராம் - 144 | 10) ர.அஸ்வினி - 136 | |

இவர்களையும் இவர்களுக்கு கற்பித்த [illegible] அவர்களையும், அவர்களுக்கு உதவியாக விளங்கிய அதிபர், உப அதிபர், ஏனைய ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி முத்துகுமாரசாமி மகா வித்தியாலயம், கைதடி.

## மீசாலை, சங்கத்தானை தரிப்புகளில் பயணிகளை ஏற்றிச் செல்லாத ரயில்



தென்மராட்சி, ஒக் 17

யாழ்ப்பாணம், கொழும்பு ரயில்கள் மீசாலை, சங்கத்தானை ரயில் நிலையங்களில் தரித்துச் செல்கின்றன. ஆயினும் இந்த ரயில் நிலையங்களில் இருந்து பயணிகள் ஏற முடியாத நிலை தொடர்கின்றது. இது குறித்துப் பயணிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த ரயில் நிலையங்களுக்குரிய கட்டட வேலைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு அதற்கான தளபாடங்களும் வந்து சேர்ந்துள்ளன.

இந்த நிலையங்களில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்காதமையால் அனைத்துப் பொருள்களும் அறைகளில் வைத்துப் பூட்டப்பட்டுள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

முன்னைய காலத்தில் இந்த ரயில் நிலையங்களில் நிலைய முகவர்கள் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந்த ரயில் நிலையங்களில் தற்போது ரயில்கள் தரித்துச் செல்கின்றபோதிலும் அப்பகுதி மக்கள் சாவகச்சேரி, கொடிகாமம் ரயில் நிலையங்களுக்குச் சென்றே பயணிக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# எமது குடிதண்ணீரையும் நாசமாக்கி விடாதீர்கள்

## இந்திய எரிபொருள் நிலையத்தை சுண்டிக்குளியில் அமைக்க அயலவர்கள் கடும் எதிர்ப்பு



யாழ்ப்பாணம், ஒக்.17

"சுன்னாகத்தில் உள்ள குடிதண்ணீர் கிணறுகளுக்குள் எண்ணெய் கசிவு ஏற்பட்டதைப்போல எமது கிணறுகளுக்குள்ளும் எண்ணெய் கசிவு ஏற்பட்டு அவை நாசமாகிப் போவதைநாம்விரும்பவில்லை; அனுமதிக்கப் போவதுமில்லை" என்று கூறி, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் காணியில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் அயலவர்கள்.

யாழ்ப்பாணம், 73 கண்டி வீதியில் அமைந்துள்ள செஞ்சிலுவைச் சங்க காணியில் இந்திய எரிபொருள் நிறுவனம் (ஐ.ஓ.சி) தனது கிளை ஒன்றை அமைக்க உள்ளது. குடிமனைகள் அதிகம் உள்ள இந்த இடத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கு தொடர்ச்சி யாகக் கடும் எதிர்ப்புத் தெரி விக்கப்பட்டிருந்தது.

மக்களின் எதிர்ப்பை அடுத்து இது தொடர்பில் ஏற்கனவே யாழ். மாநகர முதல்வர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரையும் மாவட்டச் செய லரையும் (அரச அதிபர்) உள் ளடக்கிய கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. ஆனாலும் அந்த இடத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதைத் தடை செய்வ தற்கு அமைச்சரோ அதிகாரி களோ உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார்கள் என்று அயலவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள். இந்திய எரிபொருள் நிலையத்தை அந்த இடத்தில் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அயல வர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பஸ்ரியன் விடுதியில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார்கள்.

"16,000 லீற்றர் பெற்றோல் விற்கும்போது 30 லீற்றர் பெற்றோல் காற்றில் கலக்கும் என்பது ஆய்வறிக்கை. அநேக பாடசாலைகளும் குழந்தைகள் பூங்காக்களும் உள்ள இந்த இடத்தில் - சன நெரிசல் மிக்க இடத்தில் காற்றை இப்படி மாசுபடுத் துவது உடல் நலத்துக்கு கேடானது. எமது குழந்தை களும் முதியோரும் பெற் றோல் கலந்த காற்றைச் சுவா சிப்பதை நாம் விரும்பவில்லை" என்றார் அயலவர் ஒருவர். ஐ.ஓ.சி போன்ற பெரிய நிறுவனங்கள் இதில் தொடர்பு பட்டிருப்பதால் பாதுகாப்புக் கருதித் தனது பெயரை அவர் குறிப்பிட விரும்பவில்லை.

புதிய எரிபொருள் நிரப்பு நிலையம் அமையவுள்ள இடத்தில் இருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் மற்றொரு எரிபொருள் நிலையம் இருக்கும் போது சன நெரிசல் மிக்க குறிப்பிட்ட இடத்தில் இந்திய நிறுவனம் தனது கிளையை அமைக்க வேண்டும் என்று விடாப் பிடியாக நிற்பதன் பின்னணி - நோக்கம் - என்ன என்பது கூர்ந்து கவனிக்கப் படவேண் டும் என்றும் இது தொடர்பில் அக்கறை உள்ளவர்கள் சுட் டிக்காட்டுகிறார்கள்.

இந்தப் பிரச்சினை தொடர்பாகத் தாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வட மாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோருக்கு தெரியப்படுத்தியுள்ள போதிலும் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கும் பணிகள் நிறுத்தப்படவில்லை என்று அயலவர்கள் குறைப் படுகிறார்கள்.

எரிபொருள் தாங்கிகளில் ஏதாவது கசிவுகள் ஏற்பட்டால் அது அயலிலுள்ள குடிதண்ணீர் கிணறுகளைப் பாதிக்கும் என்றும் அயலவர்கள் அச்சமடைகின்றனர். எனவே சன நெரிசல் மிக்க அந்த இடத்தில் எரிபொருள் நிலையத்தை அமைப்பதை உடன் நிறுத்த வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்க இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அலுவலகக் காணியை வழங்கியது சங்கத்தின் நோக்கத்திற்கு முறைகேடானது என்று தெரிவித்து சங்கத்தின் உறுப்பினர்கள் நால்வர் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அந்த வழக்கு மீதான விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன. (உ-14-ரி)

## வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு பயணப்படி வழங்குவதில் குழப்பம்

### அரசு வழங்கிய மோட்டார் சைக்கிள்களால் உள்ளூராட்சிச் சபைகளுக்கு சிக்கல் நிலை

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு அரசினால் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளதை அடுத்து இந்த உத்தியோகத்தர்கள் கடமையின் நிமித்தம் அதனைப் பயன்படுத்துவதற்கான பயணப் படியை வழங்குவது தொடர்பாக உள்ளூராட்சிச் சபைகள் குழப்பமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமது கடமை நிமிர்த்தம் தமது சொந்த மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்த மாதாந்தம் ஆயிரத்து 750 ரூபா மாதாந்தப் பயணப்படியாக வழங்க வேண்டுமென 2006 ஆம் ஆண்டளவில் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. அதனை இன்று வரை பல உள்ளூராட்சிச் சபைகள் செயற்படுத்தவில்லை.

மத்திய அரசினால் கடந்த 1984 ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட சுற்றறிக்கை அரச வெளிக்கள உத்தியோகத்தர் தமது கடமைக்காகத் தமது சொந்தச் சைக்கிள்களைப் பயன்படுத்துவதற்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு 35 சதம் வீதம் பயணப்படி வழங்குமாறு குறிப்பிடப் பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டு வரை அனைத்து உள்ளூராட்சிச் சபைகளும் இந்தக் கொடுப்பனவைச் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தூரத்திற்கு (200 கிலோ மீற்றர் தொடக்கம் 500 கிலோ மீற்றர் தூரம் வரை) பயன்படுத்துவதற்கு மாதாந்தம் பயணப் படி வழங்கப் பட்டது. அதன் பின்னர் சைக்கிளுக்கான பயணப்படி வழங்குவதைப் பல உள்ளூராட்சிச் சபைகள் நிறுத்தியிருந்தன. ஆயிரம் ரூபாவுக்கு மேல் சைக்கிளின் ரயர், ரியூப் விற்பனை செய்யப்படும் நிலையில் மாதாந்தம் 100 ரூபா பயணப்படியாக வழங்க உள்ளூராட்சிச் சபைகள் பல்வேறு வினாக்கள் எழுப்பியதால் பல உத்தியோகத்தர்கள் கடந்த மூன்று வருடங்களாகப் பயணப்படிக்கு மாதாந்தம் விண்ணப்பிக்காமல் விட்டுள்ளனர்.

இந்த நிலையில் அரசினால் இப்போது இந்த உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வில் உத்தியோகத்தர்களிடமிருந்து நிறைவான சேவையை எதிர்பார்ப்பதாக மாவட்ட அரச அதிபர் உரையாற்றியிருந்தார். அரச கடமைகளுக்காகத் தமது மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் செலவுகளை ஈடு செய்ய உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள் பயணப் படியைச் சபைகளிடமிருந்து எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் பயணப் படியைச் சபைகள் வழங்க மறுக்கும் பட்சத்தில் முன்னரைப் போன்று சைக்கிளில் தமது கடமைகளுக்குச் செல்ல வேண்டியிருக்குமென உத்தியோகத்தர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டது. (த-9)



மத்திய அரசின் நிதி மானியத்தின் மூலம் யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகத்தால் புதுப்பிக்கப்பட்ட யாழ். வீரசிங்கம் மண்டபம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு வழங்கப்படுகின்றது என அங்கு நினைவுக்கல் ஒன்று மும்மொழிகளிலும் பதிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் யாழ். வருகைக்காக வீரசிங்கம் மண்டபத்தை மெருகூட்டும் பணிகள் மும்முரமாக இடம்பெற்றன. இதில் படையினரே ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில் இந்த நினைவுக் கல் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## நீரினாலும், உணவினாலும் தொற்றி வரும் நோய்களில் யாழ். மாவட்டம் முதலிடம்

இலங்கையிலேயே நீரினாலும், உணவினாலும் பரவும் நோய்களில் யாழ்.மாவட்டம் முதலாவது இடத்தில் உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மலசல கூடங்கள் இதற்கான முக்கிய காரணமாக இருக்கின்றது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவித்தார். வடக்கு மாகாண நீரியல் ஆய்வு மையம் நேற்று முன் தினம் தொண்டமானாறு பகுதியில் திறந்து வைக்கப்பட்டபோது அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் மலசல கூட அமைப்பு முறை மற்றும் கழிவகற்றல் முறை இல்லாத காரணத்தால் நிலத்தடி நீர் மாசடைந்துள்ளது. 60 வீதத்துக்கும் மேற்பட்ட கிணற்று நீரில் ஈக்கோளா என்ற பக்ரீரியா காணப்படுகின்றமை கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இதனால் நோய் ஏற்படுகிறது. நீரைக் கொதிக்க வைப்பதன் ஊடாகவும் குளோரின் இடுவதன் ஊடாகவும் பக்ரீரியாவை இல்லாது செய்யலாம். எனவே பொதுமக்கள் குடிதண்ணீரைக் கொதிக்க வைத்து அருந்துவதன் ஊடாக உங்களைப் பாதுகாத்து கொள்வதுடன் பிரதேசத்தின் சுகாதாரத்தை பேணுவதற்கும் ஒத்துழைக்க வேண் டும்-என் றார். (த-14)

## புற்றுநோய்க் கதிர் சிகிச்சைப் பிரிவின் ஒரு பகுதி புனரமைக்கப்பட்டுத் திறப்பு

அளவெட்டி, ஒக். 17

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய்க் கதிர்ச் சிகிச்சைப் பிரிவின் ஒரு பகுதி புனரமைப்புச் செய்யப்பட்டு கடந்த 13 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு புற்று நோய் சிகிச்சைப் பிரிவில் உள்ள மாநாட்டு மண்டபத்தில் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி திவாகரன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் புற்றுநோய்ச் சிகிச்சை வைத்திய நிபுணர் கவிதா இந்திரநாத், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி டி.பி.குமாரகே, கிளை இயக்குநர் எம். ரணில் பெரேரா, கிளை இயக்குநரும் சிரேஷ்ட முகாமையாளருமான சாமில் ஹேரத், யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் ரி.கே. ஆனந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பீப்பிள் லீசிங் பினான்ஸ் கம்பனியால் புனரமைப்புச் செய்யப்பட்ட கோபோல்ற் பிரிவு பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனியின் பிரதம நிறைவேற்று இயக்குநர் டி.பி. குமாரகேயினால் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி விடுதிக்கான மருந்து உபகரணங்களையும் அவர் புற்று நோய் வைத்திய நிபுணர் கவிதா இந்திரநாத்திடம் கையளித்தார். (த-36)

# ஓலைக் கொட்டகைகளில் எமது பிள்ளைகளின் கல்வி

## அக்கராயன் வித்தியாலய மாணவர்களின் பெற்றோர் மஹிந்தவுக்கு மனு

கிளிநொச்சி, ஒக்.17

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலய மாணவர்கள் நிரந்தர கட்டடம் இல்லாமையால் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இது குறித்து கடந்த 12ஆம் திகதி கிளிநொச்சிக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்தவுக்கு மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் மகாவித்தியாலயம் 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இந்தப் பாடசாலையின் ஆரம்பப் பிரிவு அக்கராயன் ஆரம்ப வித்தியாலயமாக 2011 இல் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் இந்தப் பாடசாலைக்கென ஒதுக்கப்பட்ட 5 ஏக்கர் காணி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் காணியின் காடழிக்கப்பட்டு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சேவாலங்காவின் உதவியுடன் அதிபர் அறை, இரு வகுப்புக்கள் நடத்தக் கூடிய நிரந்தரக் கட்டடம், யுனிசெப் பின் உதவியுடன் ஒரு தற்காலிகக் கொட்டகை அமைக்கப்பட்டு இது இயங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலைக்கு விரைவாக நிரந்தரக் கட்டடம் அமைத்து தருவோம் என்று உறுதியளிக்கப்பட்டு இரு ஆண்டுகள் கடந்த நிலையில் இந்தப் பாடசாலையின் தற்காலிகக் கொட்டகைகளில் உள்ள மாணவர்கள் மழை நேரங்களில் வகுப்பில் இருந்து கற்கமுடியாத பெரும் அவலம் காணப்படுகின்றது.



அக்கராயன் ஆரம்ப வித்தியாலய கொட்டகை இதுதான்...

கல்வி அதிகாரிகள் இந்தப் பாடசாலையின் அவலம் தொடர்பாகக் கண்டுகொள்ளவில்லை. மாணவர்கள் மழையில் நனைந்து கல்வி பயிலும் அவலம் காணப்படுகின்றது.

160 வரையான மாணவர்கள் கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில் 40 மாணவர்கள் மட்டும் நிரந்தரக் கட்டடத்தில் கல்வி பயில்கின்றனர்.

பாடசாலையின் நிலைவரம் தொடர்பாக பெற்றோர்கள் கடந்த 12 திகதி அக்கராயனுக்குப் பயணம் செய்த ஜனாதிபதியிடம் மனு கையளித்துள்ளனர்.

பாடசாலைக்கு விரைவாக நிரந்தரக் கட்டடம் வேண்டும் என்பதே பெற்றோர்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது. (த-18)

## மன்னார் மாவட்ட செயலரின் தமிழ்ப் பேச்சால் சலசலப்பு

மன்னார், ஒக் 17

தானறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம் என்பார்கள் தமிழர்கள். ஆனால் தான் அறியாத் தமிழ் மன்னார் மாவட்ட செயலாளருக்குச் சிக்கலை ஏற்படுத்திவிட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த செவ்வாய்கிழமை மன் னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற புதிய மாவட்ட செயலகத்துக்கான 4 மாடிகட்டடத்துககு அடிக்கல் நடும் நிகழ்வில் அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் செனிவிரத்ன மற்றும் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் விஜய தகநாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இதன்போது உரையாற்றிய மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தனது உரையில்,

"கூட்டத்திலே நான் சொல்லிற்ரா எங்கட அதி மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒத்துழைப்பு இல்லாம இந்தப் புதிய கட்டடம் செய்ய வேண்டும். எங்களுடைய நிர்வாக அமைச்சர் செனிவிரத்ன அவர்களும் மற்றும் பிரதி அமைச்சர் விஜய தகநாயக்க அவர்களுடைய் ஒத்துழைப்பு இல்லாமல்தான் இந்தக் கச்சேரி கட்டடம் இங்கு வரும்" என்றார். இதன்போது மாவட்ட செயலகப் பணியாளர்கள் மத்தியில் பெரும் சலசலப்பு ஏற்பட்டது.

இவை எதனையும் அறியாதவராக அரச அதிபர் தனது பேச்சைத் தொடர்ந்தார். (த)

# கால்நடைகளால் பயிர்கள் சேதம்

## உடன் கட்டுப்படுப்படுத்துமாறு செய்கையாளர்கள் கோரிக்கை

இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள பன்னாங் கண்டி, முரசு மோட்டை, மருதநகர், வட்டக் கச்சி போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர் செய்கைகளை இவ்வாறு கால்நடைகள் அழித்து வருகின்றன.

கிளிநொச்சி, ஒக் 17

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோகச் செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கால்நடைகளை கட்டுப்படுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாண்டு காலபோகச் செய்கைகளில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போது 50 வீதமான செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் பயிர்செய்கைகளைக் கால்நடைகள் அழித்து வருகின்றன.

இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள பன்னாங்கண்டி, முரசு மோட்டை, மருதநகர், வட்டக் கச்சி போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர் செய்கைகளை இவ்வாறு கால்நடைகள் அழித்து வருகின்றன.

எனவே கால்நடைகளைக் கட்டுப்படுத்தி தமது பயிர் செய்கைகளைப் பாதுகாத்துக் கொள்ள உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என காலபோகச் செய்கைகளை மேற்கொண்டுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவித்த கமநல சேவை நிலைய நிர்வாகம், கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தின் தீர்மானத் துக்கு அமைவாகக் கால்நடைகளைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது. (த-55)

## முல்லைத்தீவு டிப்போவின் பஸ் சேவைகள் விஸ்தரிப்பு

முல்லைத்தீவு, ஒக் 17

முல்லைத்தீவு இ.போ.ச. டிப்போவுக்கு புதிதாக 10 பஸ்கள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மற்றும் தெற்கு, கிழக்குப் பகுதிகளுக்கான புதிய பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போதிய பஸ்கள் இன்றி சீரான பஸ் சேவையை நடத்த முடியாமல் இருந்த முல்லைத்தீவு இ.போ.ச. டிப்போவுக்கு 10 புதிய பஸ்கள் கிடைத்தமை பெரும் வரப்பிரசாதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உடப்பில் இருந்து முல்லைத்தீவுக்கும் கொழும்பில் இருந்து முல்லைத் தீவுக்கும் புதிய பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சேவைகளை முறையே புத்தளம், கலன்னப்புவ டிப்போக்கள் ஆரம்பித்துள்ளன. (த-173)

## புதுக்குடியிருப்பு பிரதான தபாலகம் தொடர்ந்தும் தனியார் வீடொன்றில்

முல்லைத்தீவு, ஒக் 17

புதுக்குடியிருப்பு பிரதான தபாலகம் தொடர்ந்தும் தனியார் வீடொன்றில் பெரும் சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகின்றது.

இந்தத் தபாலகம் கோம்பாவில் பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் மிக நீண்ட காலமாக இயங்கி வருகின்றது.

குறித்த தபாலகம் போதிய அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருவதனால் இங்குச் சேவை பெறச் செல்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

போர் முடிவுற்று 4 ஆண்டுகள் கடந்தும் இவ்வாறு குறித்த தபாலகம் தனியார் வீடொன்றில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றமை குறித்து விசனம் வெளியிடப்பட்டுள்ளது. (த-55)

# இரணைமடுக் குள வாய்க்கால்கள் ரூ.800 மில்லியனில் புனரமைப்பு

கிளிநொச்சி, ஒக் 17

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான கழிவு வாய்க்கால்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள் என்பவற்றைப் புனரமைப்பு செய்வதற்கான இபாட் திட்டத்தின் கீழ் கடந்த ஜூலை மாதம் 800 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட 18 வேலைத் திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள நீர்ப்பாசன வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால்கள் என்பவற்றைப் புனரமைப்பு செய்வதற்கான வேலைத் திட்டங்கள் கடந்த ஆண்டு முதல் இபாட் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் கடந்த 2013ஆம் ஆண்டு சுமார் 543 மில்லியன் ரூபா செலவில் 10 வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவுறுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் சுமார் 799 மில்லியன் ரூபா செலவில் 18 வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

பரந்தன், குஞ்சுப்பரந்தன், இராமநாதபுரம், பெரியபரந்தன், முரசு மோட்டை, ஊரியான் உள்ளிட்ட பகுதிகளில் இந்தக் கட்டுமானப் பணிகள் இபாட் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (த-55)

# தற்காலிக வீடுகள் அமைக்க அமைச்சர் டெனீஸ்வரன் நிதி

மன்னார், ஒக் 17

மன்னார் மாவட்ட முசலிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தில் ஒழுங்கான வசிப்பிடம் இன்றி அங்குள்ள மரங்களின் கீழ் குடிசைகள் அமைத்து மழை காலத்தில் மழைநீர் உட்செல்லும் அளவு பாதிக்கப்பட்டு நிரந்தரமாக அங்கு வாழ்ந்து வருகின்ற மக்களின் அவல நிலையை தனது களப் பயணம் மூலம் நேரில் கண்டறிந்தார் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனிஸ்வரன்.



தனது அமைச்சின் கீழ் வருகின்ற கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தினூடாக சுமார் 81 குடும்பங்களுக்கு தமது அத்தியாவசிய தேவைக்கான தற்காலிக வீடுகள் அமைப்பதற்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கும் திட்டத்தை எதிர்வரும் வாரம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்க உள்ளதாகவும், அத்தோடு எதிர்வரும் ஆண்டுகளில் நிரந்தரமான வீடுகள் அமைத்து தருவதற்கான திட்டமும் தற்போது கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அந்த வேளையில் அந்தக் கிராமத்து மக்கள் அனைவரும் கருத்தில் கொள்ளப்படுவார்கள் என்றும், நேற்று முன் தினம் புதன்கிழமை காலை முசலி பிரதேச செயலகத்தில் பிரேதேச செயலாளரைச் சந்தித்து அக்கிராம மக்களுக்கான காணி அனுமதி பத்திரம் வழங்குதல் தொடர்பாக நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு தெரிவித்ததோடு, அக்கிராமத்துக்கு பயணம் செய்து பயனாளிகளைச் சந்தித்து கலந்துரையாடினார். (த)



ஊவா மாகாண சபை அமைச்சர்களாக மேலும் நால்வர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று வியாழக் கிழமை, ஜனாதிபதி செயலகத்தில் பதவியேற்றுக் கொண்டனர். (ற)

## கைதிகளுக்கான தொலைபேசி வசதி ஆரம்பித்து வைக்கப்பட்டது



கொழும்பு, ஒக்.17

சிறைக்கைதிகளின் அத்தியாவசிய தேவைகளின் நிமித்தம் தமது உறவினர்களைத் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி வசதி நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

அதன் முதல் கட்டம் வெலிக்கடை சிறைச்சாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இங்கு கைதிகளின் பாவனைக்காக எட்டு பொதுத் தொலைபேசிக் கூண்டுகள் நிறுவப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இதன் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கைதிகள் பயன்படுத்தும் பொதுத் தொலைபேசிக் கூண்டின் அருகே பொருத்தப்பட்டுள்ள சீசீடிவி கமரா மூலம் அவர்களைகண்காணிப் பதற்கு பொலிஸ் குழுவொன்றும் ஈடுபடுத்தப்படவுள்ளது.

மேலும் கைதிகளின் உரையாடலும் ஒலிப்பதிவு செய்யப்படவுள்ளது. இந்த நடவடிக்கை மூலம் சிறைச்சாலைகளுக்குள் சட்டவிரோதமாக கைத் தொலைபேசிகள் எடுத்து வருவது குறையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறையில் கைதிகளுக்கான தொலைபேசி வசதி திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திரரத்ன பல்லேகம ஆகியோருடன் மேலும் பல உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். இலங்கை வரலாற்றில் சிறைக் கைதிகளுக்குத் தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். (ற)

## ஐ.தே.க. தேர்தல் ஒருங்கிணைப்பு குழு கூடுகின்றது இன்று

கொழும்பு, ஒக்.17

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு இன்று விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற் கொள்ளவுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை, ஊடக பயன்பாடு தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்படவுள்ளது. கலந்துரையாடலுக்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கவுள்ளார்.

மேலும் எதிர்க்கட்சியில் ஏனைய சிறுகட்சிகளை ஒருங்கிணைப்பது தொடர்பிலும் நாளைய கலந்துரையாடலின் போது குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

ஐ.தே.க. வின் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழுவில் கட்சியின் முக்கிய அங்கத்தவர்கள் 20 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். குழுவின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவும், பிரதித் தலைவராக கரு ஜயசூரியவும் செயற்படுகின்றனர். (ற)

# வெளியேறி வாருங்கள் சேர்ந்து பயணிப்போம்

## அத்துரலிய ரத்ன தேரரை அழைக்கின்றார் ஜனநாயகக் கட்சியின் தலைவர் பொன்சேகா



கொழும்பு, ஒக்.17

"நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், அரசிலிருந்து வெளியேறி அரசை விமர்சனம் செய்தால் அந்த தேரருடன் இணைந்து பயணிப்பதற்கு என்னுடைய கட்சி தயாராக இருக்கின்றது." - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான சரத் பொன்சேகா.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"2017ஆம் ஆண்டு நான் நாட்டிலிருந்து வெளியேறப் போகின்றேன் என்று சிலர் கூறுகின்றனர். நான் நாட்டை விட்டு வெளியேற மாட்டேன். என்றோ ஒருநாள் நான் இறந்தால் இந்த நாட்டிலேயே இறப்பேன். நான் இன்னும் 10 வருடங்களுக்கு அரசியல் செய்வேன். ஆகையால் நான் நாட்டை விட்டுவெளியேறமாட்டேன்.

நாட்டு மக்களின் நலனுக்காக எனது கடைசி வியர்வைத்துளி, இரத்தத் துளி இருக்கும் வரை அர்ப்பணிப்புடன் கடமையாற்றுவேன் என்று உங்களுக்கு உறுதியளிக்கின்றேன்.

அத்துரலிய ரத்ன தேரரால் 19ஆவது அரசியல்திருத்தநகல் வெளியிட்டு வைக்கப்பட்ட வைபவத்தில் எங்களுடைய பிரதிநிதியொருவரும் பங்கேற்றார். எங்களுடைய கொள்கைக்கும் ரத்ன தேரரின் யோசனைகளுக்கும் இடையில் நிறையவே ஒற்றுமை இருக்கின்றன. ரத்ன தேரர், அரசிலிருந்து வெளியேறி, அரசை விமர்சித்தால் அவருடைய பயணத்தில் இணைந்து கொண்டு எம்மால் பயணிக்க முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## தேசிய சுதந்திர முன்னணிக்கும் ஜனாதிபதிக்கும் இடையே பேச்சு

தேசிய சுதந்திர முன்னணிக்கும் ஜனர்திபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே இன்று பேச்சு நடத்தப்பட உள்ளது. தேசிய சுதந்திர முன்னணியின் சார்பில் கட்சியின் தலைவர் விமல் வீரவன்ஸ தலைமையிலான பிரதிநிதிகள், ஜனாதிபதியை சந்திக்க உள்ளனர்.

இந்தச் சந்திப்பில் நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை, ஜனாதிபதி தேர்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பேசப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய சுதந்திர முன்னணி 12 அம்ச கோரிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ள நிலையில் இந்தக் பேச்சு நடக்கவுள்ளது.

இந்தக் கோரிக்கைகளில் அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் கட்சியை விட்டு வெளியேறப் போவதாக விமல் வீரவன்ஸ முன்னதாக எச்சரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், இன்று நடைபெறவுள்ள சந்திப்பில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## யால சரணாலயம் திறப்பு



கொழும்பு, ஒக்.17

வறட்சியினால் மூடப்பட்டிருந்த யால சரணாலயம் சுற்றுலா பயணிகளுக்காக நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தினந்தோறும் 6 மணித்தியாலங்கள் சரணாலயம் திறக்கப்பட்டிருக்கும் என வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகம் எச்.டி ரத்நாயக்க குறிப்பிட்டார். (ற)

## சப்ரகமுவ பிரச்சினைக்குத் தீர்வு காண பல்கலை ஆசிரியர் சங்கம் முயற்சி

கொழும்பு, ஒக்.17

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மத்தியஸ்த முயற்சிகளுக்கு பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் முன்வந்துள்ளது. சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைப் போராட்டம் தற்போது நாட்டில் சூடுபிடித்துள்ள ஒரு விவகாரமாக மாறி வருகின்றது. இதன் காரணமாக அரசுக்கும் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இதன் எதிரொலியாக அண்மையில் அவர்களின் போராட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்கள் அரச குண்டர்களின் தாக்குதலுக்கும் இலக்காகியிருந்தன.

இந்த நிலையில் எதிர்வரும் தேர்தல்களின் போது இந்த விவகாரம் சூடுபிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால்,



பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மூலம் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதைய நிலையில் மாணவர் தரப்பு மற்றும் பல்கலைக்கழக நிர்வாகம் ஆகியவற்றுடன் தொடர் பேச்சுகளில் ஈடுபட்டுவரும் ஆசிரியர் சங்கம், மாணவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கைவிடுவது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தின் இணக்கப்பாட்டை பெற்றுள்ளது. அதனையடுத்து மிக விரைவில் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படுவதற் கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் பின்னர் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகளைக் காண்பதற்கு பேச்சு தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கான மத்தியஸ்தத்தில் ஆசிரியர் சங்கம் தொடர்ந்து ஈடுபடுவது என்று தீர்மானித்துள்ளது என்று அதன் பேச்சாளர் கலாநிதி ஹினிதும சுனில் தெரிவித்துள்ளார். (ற)

# ஜனாதிபதிக்கு சித்தசுவாதீனம் இல்லாது போனாலும் பதவி நீக்க முடியாது

## சாடுகின்றார் மாதுலுவே சோபித தேரர்



கொழும்பு, ஒக்.17

ஜனாதிபதிக்கு சித்த சுவாதீனமில்லாமல் போனாலும் பதவியிலிருந்துநீக்கமுடியாது என்று சாடியுள்ளார் சமூக நீதிக்கான அமைப்பின் அழைப்பாளர் மாதுலுவே சோபித தேரர்.


தற்போதைய அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஜனாதிபதி சித்த சுவாதீனமற்றுப் போனாலும் அவரை பதவியிலிருந்து நீக்க முடியாது. இலங்கை அரசியல் சாசனத்தைப் போன்று உலகில் வேறு எங்கும் தாம் பார்க்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இலங்கை அரசியல் சாசனத்துக்கு அமைய ஜனாதிபதிக்கு அதீதமான அதிகாரங்கள் வழங்கப்பட்டள்ளன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்வதாகத் வாக்குறுதி அளித்த போதிலும் அதனை அவர் நிறைவேற்றவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்யக் கூடிய சிறந்த சந்தர்ப்பம் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு காணப்பட்ட போதிலும் அவர் அதனை நிரந்தரமாக்கியுள்ளார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனவால் அறிமுகம் செய்யப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினால் பாதக விளைவுகளே அதிகம் ஏற்பட்டுள்ளன"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# வாத்து சுனாமி



ஒரே நேரத்தில் ஆயிரக் கணக்கான வாத்துக்கள் ஒரு மைதானத்திற்கு பறந்து வந்து சிறிது நேரத்தில் அந்த வாத்துக்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் பறந்து சென்றால் எப்படி இருக்கும். அப்படி ஒரு காணக் கிடைக்காத அற்புத காட்சியை கனடாவில் உள்ள ஒருவர் தனது கைத் தொலைபேசி மூலம் படமெடுத்துள்ளார். இந்த ஒளிப்படங்களும், வீடியோக்களும், உலகம் முழுவதும் தற்போது மிக வேகமாக பரவி வருகின்றன.

கனடாவில் உள்ள ரிச்மண்ட் என்ற பகுதியில் உள்ள மைதானம் ஒன்றில் திடீரென எங்கிருந்தோ பறந்து வந்த ஆயிரக்கணக்கான வாத்துக்கள் இறங்கின. சிறிது நேரம் ஓய்வு எடுத்த அந்த வாத்துக்கள் திடீரென ஒரே நேரத்தில் மறுபடியும் பறந்து சென்றன. ஒரு சுனாமி போல பறவைகள் வந்ததையும், பறந்து சென்றதையும் அந்த பகுதியில் இருந்த ஒருவர் தனது கைத்தொலைபேசி மூலம் வீடியோ எடுத்துள்ளார்.

மைக்கல் பரேட்ஸ் என்ற அந்த நபர் இந்த அதிசயக் காட்சியை பார்த்து தான் இன்ப அதிர்ச்சி அடைந்ததாகவும், இப்படி ஓர் அற்புதமான காட்சியை தான் இதுவரை பார்த்ததில்லை என்றும் கூறினார். ஓர் ராட்சத அலைபோல பறவைகள் கிளம்பிச் சென்றதைப் பார்த்தபோது வெள்ளை நிறத்தில் ஒரு சுனாமி சென்றது போல் இருந்ததாகவும் அவர் கூறினார்.

பறவைகள் கூட்டமாக வாழும் தன்மையை இயற்கையிலேயே பெற்றுள்ளதால் அவை கூட்டம் கூட்டமாகச் செல்வது சாதாரணம்தான் என்றாலும் இந்த எண்ணிக்கை கொஞ்சம் அதிகமாகத்தான் உள்ளது என்று பறவை ஆராய்ச்சி நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

# தியாக தீபத்தின் திரைப்படம் விரைவில்



ஈழத்தில் உண்ணா விரதம் இருந்து இறந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளி திலீபன் வாழ்க்கை கதை திரைப்படமாக இயக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பில் 80 சதவீதம் பூர்த்தியடைந்துள்ளதாகவும், அடுத்த ஆண்டு திரைக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த படத்தை ஆனந்த மூர்த்தி இயக்குகிறார்.

இதில் திலீபன் கதாபாத்திரத்தில் நந்தா நடிக்கிறார். புலிகளின் தலைவர் பிரபாகரன் வேடத்தில் ஸ்ரீதர் நடிக்கிறார். கிட்டு கதாபாத்திரத்தில் வினோத் சாகரும், மில்லர் கதாபாத்திரத்தில் பரத்தும், மாத்தையாவாக முனுசாமியும் நடிக்கின்றனர். இந்தப் படத்துக்கு வேல்ராஜ் ஒளிப்பதிவு செய்கிறார். ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார்.

படம் பற்றி இயக்குநர் ஆனந்தமூர்த்தி கூறியதாவது:- இந்திய அமைதிப்படை ஈழத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்து இறந்த திலீபன் வீர வாழ்க்கை மகத்தானது. அந்த மாவீரனின் வாழ்க்கையை அவர் பெயரிலேயே படமாக எடுக்கிறேன்.

ஈழத்துக்குச் சென்று திலீபன் வாழ்ந்த வீடு அவருடன் பழகியவர்கள் மற்றும் உறவினர்கள் என்று ஆய்வு செய்து இந்த படத்தை எடுக்கிறேன். திலீபனை பிரபாகரன் சொந்த தம்பியாகவே கருதினார். உண்ணாவிரதம் இருக்க திலீபன் அனுமதி கேட்டபோதுகூட அவர் மறுத்தார். கிட்டுவுக்கும் திலீபனுக்கும் உள்ள நட்பு ஆழமானது.

ஈழத்து காந்தி என்று அழைக்கப்பட்ட திலீபன் உண்ணாவிரதம் இருந்து இறந்தபோது பிரபாகரன் கண்ணீர் விட்டு அழுதார். பிரபாகரன் அழுதது அந்த ஒருநாள் மட்டும்தான். இதையெல்லாம் படத்தில் கொண்டு வருகிறேன். படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது. 80 சதவீத படப்பிடிப்பு முடிந்துள்ளது - என்றார்.

# ரிலாக்ஸா வாசியுங்க




அமெரிக்கன் : எனக்கு ரென்னிஸ் விளையாட்டப் பற்றி எல்லா விடயமும் தெரியும். நீ வேண்டும் என்றால் எதையாவது கேட்டுப்பாரு ?

தமிழன் : சொல்லு, ரென்னிஸ் வலையில எத்தன ஓட்டை இருக்கும் ?

அமெரிக்கன் : உங்களுக்கெல்லாம், நல்ல சாவே வராதுடா !

# 33 ஆண்டுகளின் பின்னர் கண் பார்வை



அமெரிக்காவைச் சேர்ந்தவர் லாா்ரி ஹெஸ்டர் (வயது - 63). இவர் தனது 30 ஆவது வயதில் கண்பார்வையை இழந்தார். அப்போது அவரைத் தாக்கிய நோய் கண்பார்வையைப் பறித்தது. அன்று முதல் அவர் இருளிலேயே தனது வாழ்நாளைக் கழித்து வந்தார். இந்த நிலையில் அவருக்கு வொஷிங்டன் டியூக் கண் மையத்தில் 'பயோனிக் ஐ' என்ற செயற்கை கண் பொருத்தப்பட்டது. அதில் வயர்லெஸ் தொழில் நுட்பம் மூலம் கண்களில் உணர்வுகள் ஏற்படுத்தப்பட்டன. கண் கண்ணாடிகள் வழியாக கமரா மூலம் வெளியான வெளிச்சம் மூளைக்குச் சென்று பார்வையாக வெளிப்பட்டது.

அதன் மூலம் அவர் 33 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த முதலாம் திகதி தனது பார்வையை மீண்டும் பெற்றார். போல் ஹான் என்ற நிபுணர் இந்தத் தீவிர முயற்சியை கடந்த செப்ரெம்பரில் தொடங்கியிருந்தார்.

அமெரிக்காவில் இவரை போன்று மேலும் 6 பேர் 'பயோனிக் ஐ' என்ற செயற்கை கண் மூலம் பார்வை பெற்றுள்ளனர்.

# கூகுளின் அடுத்த புரட்சி

உலகின் அதிகளவான பயனர்களை கவர்ந்துள்ள கூகுள் நிறுவனம் அதனைத் தாண்டியும் பல்வேறு துறைகளில் வியாபித்து நிற்கின்றது. இதன் மற்றுமொரு அங்கமாக மருத்துவத்துறையில் புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்ளுகின்றது. நோய்கள் தொடர்பாக பயனர்கள் கூகுள் தளத்தில் தேடும் போது அந்த நோய் தொடர்பாக சந்தேகங்களை தீர்ப்பதற்கு வைத்தியர் ஒருவருடன் வீடியோ அழைப்பின் ஊடாக உரையாடக்கூடிய வசதியை ஏற்படுத்தவுள்ளது.

கூகுள் ஹாங்அவுட்ஸ் இனூடாக குறித்த வீடியோ அழைப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். மேலும் இந்த முயற்சிக்கான சோதனைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## தோழன் உன் தர்மம்

மனிதன் தன் உடலை விட்டதும் அவனுடைய பணம் அவனுடைய இரும்புப் பெட்டியில் தங்கிவிடுகிறது. அவனுடைய பசுக்கள் கொட்டகைகளிலே தங்கிவிடுகின்றன. அவனுடைய அருமை மனைவியோ வீதி வரை வருகிறாள். உற்றார், உறவினரோ சுடுகாடுவரை வருகிறார்கள். அவன் போஷித்து வளர்த்த உடலோ அக்னியோடு ஐக்கியமாகிவிடுகிறது. ஆனால் அவனுடனேயே வரப்போகும் தோழன் அவன் செய்த தர்மம் ஒன்றுதான்.

ஞானக்கதிர்

# புதுத் தடம் பதிக்கும் ராணி



சின்னத்திரை, வெள்ளித் திரை இரண்டிலும் அறிந்த முகம் நீலிமா ராணி. சினிமாவில் குழந்தை நட்சத்திரமாக நடிக்க ஆரம்பித்து அதன் பிறகு சின்னத்திரை, வெள்ளித் திரை என்று மாறி மாறி பயணித்துக் கொண்டிருப்பவர். இப்போதும் பல படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார், வாணி ராணி தொடரில் நடிக்கிறார். ஒரு நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கிறார்.

நீலிமாவின் தந்தை விஸ்வமோகன் தமிழில் ராஜேஷ்குமார் மாதிரி தெலுங்கில் துப்பறியும் எழுத்தாளர் என்பது பலருக்குத் தெரியாது. 300 இற்கும் மேற்பட்ட கதைகளும், 100 இற்கும் மேற்பட்ட நாவல்களும் எழுதியிருக்கிறார்.

எழுத்தாளர் மகள் எழுத்தாளராகாமல் இருப்பாரா ? நீலிமாவும் நிறையக் கதைகள் எழுதிக் கொண்டிருக்கிறார். அதைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடவும் முடிவு செய்திருக்கிறார். நீலிமா எழுதுவது தெலுங்கு கதையல்ல தமிழ் கதைகள். இது தவிர சில ஆங்கில இதழ்களில் தன்னம்பிக்கைக் கட்டுரைகளையும் எழுதி வருகிறார்.

# நட்புறவுகள் பரிமாறப்படும் நலமானதோர் தரிப்பிடம் நாட்டிற்கு அளிக்கப்படுகிறது.






மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் யாழ்ப்பாணப் புகையிரத நிலைய வருகை.



மேன்மைதங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இலங்கை வங்கியின் அனுசரணையுடன் அமைத்த யாழ்ப்பாண புகையிரத நிலைய ஞாபகார்த்த பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்கிறார்.




மேன்மைதங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இலங்கை வங்கித் தலைவர் எயார் சீஃப் மார்ஷல் அபேவிக்கிரம மற்றும் பொது முகாமையாளர் திரு.டி.எம்.குணசேகர ஆகியோருடன் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் இலங்கை வங்கியின் **ATM** ஊடாக முதலாவது பரிமாற்றத்தை மேற்கொள்கிறார்.

**யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தை மீள் நிர்மாணப்படுத்தியது இலங்கை வங்கியின் மேலுமொரு சமூக சேவை வேலைத்திட்டம்.**

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

www.boc.lk | தலைமைக் காரியாலயம், 'இலங்கை வங்கிச் சதுக்கம்' இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 | அழைப்பு நிலையம் (+94) 011 220 4444 | fitch Rating AA+ (lka)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசுக்குள் குழப்பம்

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பங்காளிக் கட்சிகள் மத்தியில் முரண்பாடுகள் சமீப நாட்களாக அதிகரித்து வருகின்றன. அரசமைப்பில் திருத்தம் தேவை என்று சில கட்சிகள் கோருகின்றன. ஜனாதிபதித் தேர்தலை அடுத்த வருடம் நடத்துவதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

அரசுடன் முரண்படும் பங்காளிக் கட்சிகளில் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணியும் ஒன்று. 12 அம்சக் கோரிக்கையொன்றை முன்வைத்துவிட்டு இந்தக் கட்சி அவ்வப்போது அரசுக்கு நெருக்கடி கொடுத்து வருகிறது. அரசைப் பலப்படுத்தவேண்டிய பங்காளிக் கட்சிகளே ஜனாதிபதியை எதிர்க்க ஆரம்பித்திருப்பது ஜனாதிபதி ராஜபக்ஷ தனது இரண்டாவது தவணையின் இறுதிக்காலத்தில் எதிர்நோக்கும் பெரும் சவாலாகும். இதற்கு மஹிந்த ராஜபக்ஷ என்ற தனிமனிதனின் அதிகாரக் குவிப்பு ஆட்சியே காரணம் என்பதில் சந்தேகமில்லை. இதனைக் கவனத்தில் கொண்டே அரசின் மற்றொரு பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, புதிய அரசமைப்பொன்றை இரு தினங்களுக்கு முன்னர் வெளியிட்டு அரச கூட்டணிக்குள் சலசலப்பைத் தோற்றுவித்திருந்தது.

இப்படியான சூழ்நிலையில் தேசிய சுதந்திர முன்னணியுடன் ஜனாதிபதி இன்று முக்கிய பேச்சுகளை நடத்துகிறார். விமல் வீரவன்ஸவும், மஹிந்த ராஜபக்ஷவும் தத்தமது குழுக்களுடன் பேச்சில் கலந்துகொள்வது மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வாகும். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் வேளையில், தேசிய சுதந்திர முன்னணியைக் கைவிட அரசு தயாரில்லை என்பது தெரிகிறது.

எதிரணிகள், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்ற பொதுக் கோரிக்கையை முன்வைக்கத் தீர்மானித்திருப்பதால், இதே கோரிக்கைக்கு அரசில் அங்கம் வகிக்கும் சில பங்காளிக் கட்சிகளும் ஆதரவு வழங்குவது ஜனாதிபதியை இக்கட்டான நிலைக்குள் தள்ளிவிட்டுள்ளது. ஜாதிக ஹெல உறுமயவின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று நிறை வேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

ஜாதிக ஹெல உறுமய பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்திய மாநாட்டில் பொருளாதார விவகார அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் கலந்துகொண்டார். ஜாதிக ஹெல உறுமய வெளியிட்ட புதிய அரசமைப்புத் திட்ட நகலை அரசின் சார்பில் பஸில் ராஜபக்ஷதான் பெற்றுக்கொண்டார். அரசமைப்பில் திருத்தம் செய்யாது ஜனாதிபதி ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டால் அவரைத் தோற்கடிப்போம் என்று அக்கட்சியின் தவிசாளர் அத்துரெலியரத்தன தேரர் சூளுரைத்ததும் இந்த மாநாட்டில் தான். பஸில் ராஜபக்ஷவுடன் அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரி அமைச்சர்களும் இந்த மாநாட்டில் பங்குபற்றினர். ஜனாதிபதிக்கு சவால் விடும் ஒரு கட்சியின் மாநாட்டில் பஸில் ராஜபக்ஷ உட்பட அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் கலந்து கொண்டமை குறித்து அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு இன்று மூன்று விடயங்கள் குறித்து கட்சிக்குள்ளும் வெளியிலும் நெருக்கடி கொடுக்கப்பட்டு வருகிறது. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கம், தேர்தல் சீர்திருத்தம், 17ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு மீண்டும் உயிரூட்டி சுதந்திர ஆணைக்குழுக்களைச் செயற்படுத்தல் ஆகியவையே இவை. விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி இதற்கு ஆதரவு தெரிவிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்த வேளையிலேயே இன்றைய ஜனாதிபதி - விமல் சந்திப்பு இடம்பெறுகிறது.

விமல் வீரவன்ஸவை ஜனாதிபதி ஒருசமயம் வளைத்துப் போடலாம். ஆனால், ஜாதிக ஹெல உறுமய தனது கொள்கைத் திட்டங்களை விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லை. அரசுக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தவிர, தொழிற் சங்கப் போராட்டங்கள், பல்கலைக்கழக மாணவர் போராட்டங்கள் என்று உள்நாட்டிலும் சர்வதேச விசாரணை, ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகள் மீதான தடை நீக்கம் என்று சர்வதேசத்திலும் பல பிரச்சினைகள் ஜனாதிபதி முன் உள்ளன. இவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் தீர்வுத்திட்டம் எதுவும் ஜனாதிபதியிடம் கிடையாது. ஆகவே, உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் அரசுக்கு அச்சுறுத்தலாக மாற்றமடையும் சாத்தியமே அதிகமாக உள்ளது.

# காலத்தின் தேவை அறிந்து வழங்கப்பட்ட நோபல் பரிசு

ராஜ்




இந்தியாவைச் சேர்ந்த சமூக ஆர்வலர் கைலாஷ் சத்யார்த்தி மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த சிறுமி மலாலா ஆகியோருக்கு 2014ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இளம் வயதில் தன்னை சிறுவர்களின் கல்வி உரிமைக்காக அர்ப்பணித்துள்ள மலாலாவுக்கு இந்த நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளமை மிகப் பொருத்தமானது என்று சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இது அவர் தனது பணியை மேலும் பன்மடங்கு அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

உண்மையில் பொருத்தமான ஓர் அறிவிப்புத் தான். இதுவரை காலமும் சமாதானத்துக்கான நோபல் பரிசு என்பது குறித்த நபர் செய்த சேவையைக் கருத்தில்கொண்டு முதிர்ந்த வயதிலேயே வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆயினும் இம்முறை அவ்வாறு இல்லாமல் அவரது சேவையை இளம் வயதில் மேலும் ஊக்குவிப்பதற்காக மலாலாவுக்கு இந்தப் பரிசு கிடைத்துள்ளமை பலராலும் பாராட்டப்பட்டுள்ளது.

### கைலாஷ் சத்யார்த்தி

கைலாஷ் சத்யார்த்தி மத்தியப் பிரதேச மாநிலம் விதிஷாவில் 1954ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் திகதி பிறந்தார். 1990ஆம் ஆண்டு பச்பன் பச்சாவோ ஆந்தோலன் (குழந்தையைப் பாதுகாப்போம் இயக்கம்) என்ற அமைப்பை நிறுவிய இவர், நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கப் பாடுபட்டு வருகிறார். இந்த அமைப்பு மூலம் இதுவரை இந்தியாவில் 80 ஆயிரம் குழந்தைகளை பல்வேறு சுரண்டல்களில் இருந்து மீட்டு, அவர்கள் கல்வி கற்க உதவியுள்ளார். தற்போது கைலாஷ் சத்யார்த்தி டெல்லியில் வசித்து வருகிறார். கைலாஷ் சத்யார்த்தி இந்தியாவில் மட்டுமின்றி, உலக அளவில் பல்வேறு நாடுகளில் குழந்தைகள் சந்திக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்த நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு செயல்பாடுகள் தவிர, வறுமை, வேலைவாய்ப்பின்மை, கல்வியறிவின்மை, மக்கள் தொகைப் பெருக்கம் உள்ளிட்ட சமூகப் பிரச்சினைகளுக்காகவும் குரல் கொடுத்து வருகிறார். யுனெஸ்கோ அமைப்பின் உறுப்பினராக உள்ள கைலாஷ் சத்யார்த்தி அனைத்துக்குழந்தைகளுக்கும் கல்வி உரிமை என்பதை வலியுறுத்தி வருகிறார்.

### மலாலா

கைலாஷ் சத்யார்த்தியுடன், 2014ஆம்ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசை பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் குழந்தைகள் கல்வி உரிமைப் போராளி சிறுமி மலாலா யூசுப்சாய் (வயது-17) பகிர்ந்து கொள்கிறார்.

பாகிஸ்தானில் ஸ்வாட் பள்ளத்தாக்கில் மிங்கோரா பகுதியில் 1997ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் திகதி பிறந்தவர் மலாலா யூசுப் சாய்.

பாகிஸ்தானில் பெண் குழந்தைகளுக்கான கல்வி உரிமைக்காகப் போராடியதால், தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். பெண் கல்வியின் முக்கியத்துவத்தை தொடர்ந்து வலியுறுத்தி வரும் மலாலா தற்போது பிரிட்டனில் வசித்து வருகிறார்.

மலாலா தனது 11ஆவது வயது முதல் பெண் குழந்தைகளின் கல்விக்காகக் குரல் கொடுத்து வருபவர். 2 ஆண்டுகளுக்கு முன்பு மின்கோரா நகரில் அவர் வசித்தபோது தலிபான் தீவிரவாதிகள் பெண் குழந்தைகள் கல்வி பெறுவதைத் தடுக்கிறார்கள் என்று பி.பி.சி. வானொலியின் உருது சேவை நிகழ்ச்சிக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டு இருந்தார். ஒரு சிறுமி தனது நாட்டின் தீவிரவாதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தமை உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது. இதனால் ஆத்திரமடைந்த தலிபான் தீவிரவாதிகள் 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் 9ஆம் திகதி பள்ளிக்கூடத்துக்கு மலாலா பஸ்சில் சென்றபோது அவரைத் துப்பாக்கியால் சுட்டனர்.

தலையில் படுகாயமடைந்து உயிருக்குப்போராடிய அவர் இங்கிலாந்தின் பேர்மிங்காம் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டுச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அறுவைச் சிகிச்சைக்கு பின்பு உயிர் பிழைத்த மலாலா தற்போது இங்கிலாந்தில் இருந்தவாறே மலாலா அறக்கட்டளை என்னும் ஒரு தொண்டு நிறுவனத்தை உருவாக்கி, அதன் மூலம் பாகிஸ்தான், நைஜீரியா, ஜோர்தான், சிரியா, கென்யா நாடுகளில் வாழும் பெண் குழந்தைகளின் கல்விக்காகச் சேவை செய்து வருகிறார். தற்போது இங்கிலாந்தின் பேர்மிங்காம் நகரில் வசித்து வருகிறார். 17 வயதில் நோபல் பரிசு பெற்று இருப்பதன் மூலம், மிகக் குறைந்த வயதில் இப்பரிசை பெற்றவர் என்ற சாதனைக்கும் சொந்தக்காரர் ஆகி இருக்கிறார்.

### தீவிரவாதிகள் கடும் எதிர்ப்பு

மலாலாவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்குவதற்கு, தலிபான் தீவிரவாத இயக்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

மலாலாவை விமர்சித்துள்ள தலிபான் தீவிரவாத இயக்கம் நம்பிக்கை இல்லாதவர்களின் ஒரு முகவர் என்று தெரிவித்துள்ளது. டுவிட்டரில் கருத்து பதிவு செய்துள்ள தலிபான் தீவிரவாத அமைப்பின், துணை அமைப்பான ஜமாத் உல் அஹ்ரார், மலாலா துப்பாக்கி மற்றும் ஆயுதமோதல்களுக்கு எதிராகப் பேசிவருகிறார். நோபல் பரிசின் நிறுவுநர் வெடிப்பொருள்கள் தயாரிப்பாளர் என்பதை அவர், அறிந்திருக்கவாய்ப்பில்லை என்று கூறியுள்ளது.

### ஒபாமா வாழ்த்து

மலாலாவுக்கு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

மலாலாவையும், கைலாஷ் சத்யார்த்தியையும் நானும், அமெரிக்க மக்கள் அனைவரும் வாழ்த்துகிறோம். மானுடத்தின் மதிப்பை உயர்த்தப் பாடுபடும் ஒவ்வொருவருக்கும் இந்த விருது வெற்றியைத் தேடிக் கொடுத்துள்ளது. இளம் வயதினரின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் காக்க வேண்டிய அவசர தேவை இருப்பதை உணர்ந்து நோபல் பரிசுக்குழு, இந்த விருதை மலாலாவுக்கும், கைலாஷுக்கும் அளித்துள்ளது. சிறுவர்களுக்கு கடவுள் கொடுத்த திறமையை முழுமையாகச் பயன்படுத்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மலாலாவும், கைலாஷும் இந்த விருதுக்கு முற்றிலும் தகுதியானவர்கள். வெறும் 17 வயதில், உலகிலுள்ள மக்களை தன்பக்கம் திருப்பியவர் மலாலா. தாலிபான்கள் அவரது குரலை ஒடுக்க முற்பட்ட போது, தனது வலிமையால், அவர்களின் கொடுமைகளுக்குப் பதிலடி கொடுத்தவர் மலாலா. கைலாஷ் சத்யார்த்தியை பொறுத்தளவில், தனது மொத்த வாழ்நாளையும், குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்புக்கு எதிராக பயன்படுத்தியுள்ளார். அவருக்கு இது வரை எந்த விருதும் கிடைக்கவில்லை என்பதை வைத்து அவரது பணியை மதிப்பிடக் கூடாது. ஆனால் கைலாஷால் விடுதலையும், மரியாதையும் பெற்று வாழும்பல ஆயிரம்பேரின் நன்றியைத் தான், இவருக்கான அளவுகோலாக பார்க்க வேண்டும். மலாலாவும், கைலாஷும், தங்களது உயிரைப் பணயம் வைத்து வருங்கால சந்ததிக்காக உழைத்துள்ளனர். இருவருமே வெவ்வேறு நாடுகளில் இருந்தும், வெவ்வேறு மதங்களில் இருந்தும், வெவ்வேறு தலைமுறையிலும் இருந்து வந்தவர்கள். ஒருவர் இந்து, ஒருவர் முஸ்லிம், ஒருவர் இந்தியன், ஒருவர் பாகிஸ்தானி. ஆனால் இருவருமே மனிதர்களுக்கான குறைந்த பட்ச மரியாதை, நீதியின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள் என்று ஒபாமா கூறியுள்ளார்.

### ஈழத் தமிழர் விடயத்தால் உடைந்த மூனின் கனவு

இந்த வருடத்தின் சமாதானத்துக்கான நோபல் பரிசை பெறும் பான் கீ மூனின் கனவு ஈழத் தமிழர்களின் விடயத்தினால் கனவாகிப் போய் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச ஊடகத் தகவல்கள் இதனைத் தெரிவிக்கின்றன. சமாதானத்துக்கான நோபல் பரிசு இந்த வருடம் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு வழங்கப்படும் என்று முன்னதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

எனினும் இலங்கையில் இடம்பெற்ற போரில் ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு கண்ட தோல்வி, ஹெய்ட்டியில் கொலராவை தடுக்க நடவடிக்கை எடுக்காமை, வடகொரியா மற்றும் தென் கொரியாக்களுக்கு இடையிலான பிரச்சினையில் தென்கொரியாவுக்குச் சார்பாக செயற்பட்டமை போன்ற காரணங்களால் அவருக்கு இந்த விருதை வழங்கக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நோபல் பரிசின் ஆலோசகர்கள் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளனர்.

எனவே அவருக்கு அடுத்த வருடம் சமாதானத்துக்காக அன்றி, வேறொரு துறையில் நோபல் பரிசை வழங்குவதற்கு திட்டமிடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.


### இன்றைய இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டு

மலாலாவுக்கான நோபல் பரிசு இன்றைய இளைஞர்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. பல்வேறு வகையான சீரழிவுகளால் சிதைக்கப்படும் இளம் சமூகம் தமது வாழ்வை அர்த்தமுள்ள வகையில் அர்ப்பணிக்க மலாலாவின் முன்மாதிரி செயற்பாடு உதவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

உலக வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# வறுமையை ஒழிக்க உறுதி பூணுவோம்

■ கலாபூஷணம் பீ.ஏ அந்தோனி மார்க்



உலகில் 40 சதவீதமானோரும் இலங்கையில் 55 சதவீதமானோரும் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர். 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி 189 நாடுகள் ஒன்று சேர்ந்து நியூயோர்க் நகரில் வறுமையைக் குறைக்க வேண்டுமென்று ஐ.நா. மிலேனியம் அபிவிருத்தி இலக்கை பிரகடனப்படுத்தின. இலங்கையின் அப் போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், இந்த மாநாட்டில் பங்குபற்றி அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்.

உலக சனத்தொகை 700 கோடியையும் தாண்டியுள்ளது. 2012 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களின்படி இலங்கையின் குடிசனத் தொகை 2 கோடிக்கு சற்று அதிகமாகும். அதாவது 2 கோடியே 27.7597 பேர் ஆகும். இவற்றில் கிராமவாசிகள் தொகை 1.7 கோடிக்கு அதிகமாகும். ஆனாலும் 2008 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1.3 கோடிக்கும் அதிகமான மக்கள் மிகவும் வறிய கிராம வாசிகளாவர். இதன்படி 55 சதவீதமான மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர். ஐ.நா மிலேனியம் அபிவிருத்தி இலக்கின்படி வருடாவருடம் 2 கோடி 60 லட்சம் மக்களின் வறுமையை அகற்ற முடியுமென அறிவிக்கப்பட்டது. ஆனாலும் வருடாவருடம் 21லட்சம் மக்களின் வறுமையை மட்டுமே போக்க முடிந்ததாக அறியவந்துள்ளது. எனவே. உலகில் வறுமையைக் குறைக்க இன்னமும் பல ஆண்டுகள் செல்லும்.

1948 ஆம் ஆண்டு மனித உரிமைச் சட்டங்களின் பரிணாம வளர்ச்சியாக, உணவுப் பாதுகாப்பு, அடிப்படை உரிமைகளில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி குடிமக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியது அந்தந்த நாட்டு அரசின் கடமை யாகும். நமது நாட்டின் தேவையை நிறைவு செய்வதற்கு புதுமையான நவீன செயற்பாடுகள் தேவை. நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடிதான கொள்கை அடிப்படையிலான விவசாய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தேவையான உணவுகளை உற்பத்தி செய்ய முடியும். இந்த நோக்கங்களைப்பற்றி ஒரு திட்டவட்டமான தெளிவும் இருக்கவேண்டும்.

அப்படி இல்லாவிட்டால் குறைந்த உற்பத்தியைத்தான் பெறமுடியும். கொள்கைத்திட்டங்களை உருவாக்கும்போது மிலேனிய அபிவிருத்தியின் இலக்குகளை உள்வாங்க வேண்டும். இவை வறுமையை ஒழிப்பதற்குப் பெரும் பங்களிப்பைச் செய்யும்.

அவை பின்வருமாறு :

1. வறுமையை அடியோடு அகற்றுதல்.

2. சர்வதேச தர அடிப்படையில் கல்வியைப் பெறுதல். நாட்டில் இடம்பெற்ற போரினால் சிறுவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. வன்னிப் பிரதேசத்தில் 72,000 க்கு மேற்பட்ட சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. 14 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதை கட்டாயமாக்க கண்டிப்பான சட்டங்கள் கீழ் கொண்டு வரல் வேண்டும்.

3. பாலியல் சமத்துவத்தை மேம்படுத்தி பெண்களுக்கு அதிகாரமளித்தலைப் பலப்படுத்தல். ஆரம்பக் கல்வி இரண்டாந்தரக் கல்வியை வழங்குவதுடன் பெண்களுக்குரிய சட்டபூர்வமான உரிமைகள், தொழில் வாய்ப்புகள், அரசியல் உரிமைகளை வழங்குதல்.

4. சிசு மரணத்தைக் குறைத்தல்.

5. தாய்மாரின் ஆரோக்கியத்தை மேம்படுத்தல். பிரசவத்தின்போது தாய் அல்லது பிள்ளையின் இறப்புக்களைக் குறைத்தல். குடும்பக் கட்டுப்பாட்டுச் சேவைகளை மேம்படுத்தல். பிரசவத்துக்கு முன்னதான மற்றும் பின்னதான காலங் களில் தாய்மாருக்கும் சிசுக்களுக்கும் உரிய தரம் வாய்ந்த பராமரிப்புக்களை வழங்குதல். தாய்மாரின் போஷாக்குக் குறைவை நிவர்த்தி செய்தல்.

6. எச்.ஐ.வி. எயிட்ஸ், மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவாது தடுத்தல்.

7. பாதுகாப்பான சுற்றாடலை ஏற்படுத்தல். கொள்கைத்திட்டங்களில் சுற்றாடல் பாது காப்பை உள்வாங்கல், சுற்றாடலைப் பாதுகாப்பதுடன் சுற்றாடல் சம்பந்தமான வளங்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்தல். சுத்தமான குடிதண்ணீரை வழங்குதல். நல்ல சுகாதார சேவையை வழங்குதல். வசதியான வீடுகளைக் கட்டிக்கொடுத்தல். சாதி, சமய, இன, பால் பேதமற்ற சூழ்நிலையை உருவாக்கல்.

8. அபிவிருத்திக்கு சர்வதேசத்தின் பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல். கடன்வசதி அளித்தல். வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல். நல்ல சந்தை வாய்ப்பைப் பெற உதவி செய்தல். தொழில்நுட்ப உதவிகளையும். இயந்திர சாதனங்களையும் வழங்குதல். அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுத்தல். சுகாதார வசதி, மருத்துவ வசதி, இலவசக்கல்வி, இலவச உணவு முத்திரை போன்றவற்றை வழங்குதல். ஆனால் இன்று பிரதேசவாரியாகப் பார்க்கும்போது சமவளப் பகிர்வு இல்லாத காரணத்தால் வருமானத்தில் பெரும் வித்தியாசங்கள் காணப்படுகின்றன.



வறுமை, நோய்த்தடுப்பு, சிறுவர்களின் போஷாக்கின்மை, கர்ப்பிணித்தாய்மாருக்கு இரத்தக் குறைவால் ஏற்படும் நோய்கள், பெண் களின் வேலைவாய்ப்பின்மை, தொழில் நிலை யங்களில் வழங்கப்படும் குறைவான ஊதியம், தரக் குறைவான கல்வி போன்றவை பிரதேசவாரியான சமத்துவம் இல்லாது வித்தியாசமாகக் காணப்படுகின்றன. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சகல தொழில் வளங்களை இழந்து தலை நிமிர முடியாத நிலையில், தொழில் வசதிகள் இன்றி பலர் நடைப்பிணமாக வாழ்கின்றார்கள்.

போரினால் கணவன் மனைவி, பிள்ளைகளைப் பறிகொடுத்து உளநோய்க்கு உட்பட்டு வாழ்கின்றார்கள். இவர்களின் தொழில் முயற்சியான சொந்த வீடு கள், வயல் காணிகள், மீன்பிடிக்கும் கடல் பிர தேசங்கள் இராணுவத்தினாலும், பெரும் பான்மை சிங்களவர்களாலும் பலாத்காரமான முறையில் ஆக்கிரமிக்கப்பட்டு தமிழர்களின் வருமானங்கள் சூறையாடப்படுகின்றன. ஜனநாயக முறைப்படி இவை நிறுத்தப்பட்டு தமிழ் மக்கள் தங்கள் வாழ்விடங்களில் குடியேறி கடற்றொழிலையும், விவசாயத்தையும் சுதந் திரத்துடன் செய்வதற்கு இலங்கை அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும். சகல பிரதேசங்களிலும் வருமானம் சமத்துவமாக இல்லை. முன்னேற்றங்களை அவதானிக்கும்போது, வருமானங்களற்ற கிராமங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் இலங்கையின் தேசிய வருமானத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் உண்டு. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியான போரினாலும், இடப்பெயர்வு, கண்ணிவெடிகளாலும், சுனாமியாலும், தொற்று நோயின் பெருக்கத்தாலும், வறுமை மேலும் மேலும் அதிகரித்துள்ளது. ஆனாலும் 75 வீதமான மக்கள் தண்ணீர் வசதியுடைய மக்களாக வாழ்ந்தாலும், சில மாவட்டங்களில் குடிதண்ணீர் வசதியுற்ற ஏழை மக்கள் பலர் வாழ்கின்றார்கள்.

வட மாகாணத்தில் கிணறுகள் பாழடைந்து இருப்பதனால், அங்கு குடி தண்ணீருக்கு பஞ்சம் நிலவுகின்றது. இது அம்பாறையில் 25 வீதமும், நுவரெலியாவில் 20 வீதமும், புத்தளத்தில் 19 வீதமும், அநுராதபுரத்தில் 17 வீதமும் ஆகும். நிறைகுறைவான 5 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களின் வீதம் தேசியரீதியில் இலங்கையில் சராசரி 29 வீதமாகும். நுவரெலியா, பதுள்ள, அம்பாந்தோட்டை, புத்தளம் போன்ற மாவட்டங்களில் இது 40 வீதம் ஆகும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் போர்ப் பிரதேசங்களில் நிறை குறைந்த சிறுவர்களின் தொகை மிகவும் அதிகமாகும். பிறக்கும் குழந்தைகளின் இறப்பு வீதம் 2001 ஆம் ஆண்டு புள்ளி விவரங்களின்படி ஒரு லட்சம் பேருக்கு 41பேர் ஆகும்.

இலங்கை ஓர் விவசாய நாடு. நமக்குத் தேவையான உணவுகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யமுடியும். நாம் உற்பத்தி செய்யும் உணவு தமது தேவைக்கே போதுமானதல்ல. எனவே உணவுப் பொருள்களை வெளிநாடுகளில் இருந்து பெரும்தொகைப் பணத்தைச் செலவு செய்து இறக்குமதி செய்கின்றோம். காரணம் உணவு உற்பத்திக்கு ஏற்படும் உயர் உற்பத்திச் செலவாகும். இதற்குக் காரணம் உரம், கிருமிநாசினி, விதைகள், உள்ளீடுகள் போன்றவற்றின் விலையேற்றம் ஆகும்.

நைதரசன் கலந்த உரங்களை இறக்குமதி செய்வதற்கு 40 கோடி ரூபா வருடாவருடம் செலவு செய்கின்றோம். நைதரசனை உற்பத்தி செய்யும் பயிர் வகைகளைப் பயிரிடுவதன் மூலம், நைதரசன் கலந்த உர வகைகளின் இறக்குமதியைக் குறைக்கலாம். விவசாயத்துக்கு நீர் பாய்ச்சும் குளங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளன. இவற்றை முறையாகப் பராமரித்தால், உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஒட்டு மொத்தமாக இலங்கையில் 25 வீதமான மக்கள் அதிகூடிய வறுமையில் வாடுகிறார்கள். 5 வயதுக்குக் குறைந்த சிறுவர்களில் 20 வீதமானோர் நிறை குறைந்தவர்கள்.

எனவே வறுமையை ஒழிக்க வேண்டுமாயிருந்தால், அரசின் முக்கிய ஸ்தாபனமாகிய திட்டமிடல் அமைச்சு மிகவும் கவனமெடுத்து விஞ்ஞானத்தையும், தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி சிறந்த கொள்கைத்திட்டத்தை உருவாக்கி, உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். வட மாகாணத்தில் முன்னோடிச் சமூக ஊக்குவிப்புத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். கிராம மக்களை அணிதிரட்டி அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். உயர்நிலை விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் உச்ச விளைவைப் பெறல். சிறுகைத்தொழில் மயமாக்கி, கைதொழில் கிராமங்களை ஏற்படுத்துதல். மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக் குளம், வவுனியா மாவட்டத்திலுள்ள பாவற்குளம், கிளிநொச்சியிலுள்ள இரணைமடுக்குளம், முல்லைத்தீவிலுள்ள தண்ணி முறிப்புக்குளம் போன்றவற்றைப் புனரமைப்பதுடன், வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல குளங்களையும், திருத்தி அதற்குரிய சகல தண்ணீர் பாயும் வாய்க்கால்களையும் புனரமைப்புச் செய்ய வேண்டும்.

ஏனெனில் இலங்கையில் நெல் உற்பத்தியில் 40 வீதம், வட கிழக்கு மாகாணத்திலிருந்துதான் உற்பத்தி செய்யப்படுகின்றது. உலகில் சிறிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்கள் விலங்கிடப்பட்டு அடிமைகளாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் அவர் கள்து குடும்பங்கள் வறுமையில் வாடு கின்றது. அடுத்த காரணம் அரச உத்தியோகத்தர்கள், அரசியல் தலைவர்கள் இவர்களின் ஊழல் நிறைந்த நிர்வாகம் உணவு உற்பத்தியில் பெரிய பின் னடைவை ஏற்படுத்தியுள்ளது.

வேலையற்றோருக்கு, புதிய வேலைத்திட்டங்களை உருவாக்கல், பெண்களை ஊக்கப்படுத்தி நவீன வீட்டுத் தோட்டங்களை அதிகரித்தல். இயற்கை வளங்களை நீண்டகால பாவிப்புக்கான கட்டமைப்புகளை உருவாக்கல். நீதி நியாயமான வர்த்தகச் செயற்பாடுகளை ஊக்குவித்தல். உள்ளக விவசாயத்துக்குத் தேவையான உள்ளீடுகளை நேர காலத்துடன் வழங்குதல். புதிய நீர்ப்பாசன வாய்க்கால் முறைகளையும், குளங்களையும் அமைத்தல், புனரமைத்தல். சுத்தமான குடிதண்ணீரை வழங்கல் என்பன அவசிய தேவைகளாகும்.

# பின்லாந்து - இந்தியா இடையே 15 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

ஹெல்சிங்கி, ஒக்.17

நோர்வேக்கான தமது சுற்றுப் பயணத்தைமுடித்துக்கொண்டு. 2 நாள் சுற்றுப்பயணமாக பின்லாந்துக்குச் சென்ற இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கும் அந்த நாட்டு ஜனாதிபதிக்கும் இடையே 15 முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பின்லாந்து தலைநகர் ஹெல்சிங்கை செவ்வாய்க்கிழமை இரவு சென்றடைந்த பிரணாப் முகர்ஜியை, அந்த நாட்டு வெளியுறவுத்துறை செயலர் பீட்டர் ஸ்டென் லாண்ட் நேரில் சென்று வரவேற்றார்.

அதைத் தொடர்ந்து, பின்லாந்து ஜனாதிபதி சாலி நினிஸ்டோவை பிரணாப் முகர்ஜி சந்தித்துப் பேசினார்.

பின்லாந்து பிரதமர், வெளியுறவுத்துறை அமைச்சர், நாடாளுமன்றத் தலைவர் ஆகியோரையும் பிரணாப் முகர்ஜி சந்திக்கவுள்ளார்.

மேலும், அவரது பயணத்தின் போது, இந்தியா-பின்லாந்து நாடுகள் இடையே 15 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. மேலும், 4 ஒப்பந்தங்கள் செய்து கொள்வது தொடர்பான அறிவிப்பும் வெளியிடப்பட இருக்கிறது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகத்தின் மேற்கத்திய நாடுகளுக்கான செயலர் நவ்தேஜ் சர்ணா தெரிவித்ததாவது:

தனது பின்லாந்து பயணத்தின்போது, வர்த்தக பிரமுகர்கள், இந்திய சமூகத்தினரை பிரணாப் சந்திக்கவுள்ளார். பின்லாந்து நாடாளுமன்றத்துக்குச் சென்று, நாடாளுமன்றத் தலைவர், உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். ஹியிடானி மியில் போர்களில் உயிர் நீத்தோரின் நினைவிடத்துக்குச் சென்று பிரணாப் அஞ்சலி செலுத்தவுள்ளார். ஆர்க்டிக் பகுதியில் உள்ள ரோவ்நியமி நகரம் எனப்படும் சாந்தா கிளாஸ் கிராமத்துக்குப் பிரணாப் செல்கிறார்.

அணுசக்தி விநியோகஸ்தர்கள் குழு, அணுசக்தி முகாமை, ஐ.நா. பாதுகாப்புச்சபை, ஆர்க்டிக்சபை ஆகிய விவகாரங்களில் இந்தியாவை பின்லாந்து ஆதரித்தது. பிரணாப் பின் பயணத்தின்போது, கல்வி, எரிசக்தி, மீன்பிடித்தல் தொடர்பாக இரு அரசுகளுக்கு இடையேயும், இரு நாடுகளின் வர்த்தகர்களுக்கும் இடையேயும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று நம்புகிறோம் என்றார் அவர்.

மறைந்த முன்னாள் இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் 1988ஆம் ஆண்டு பின்லாந்துக்குச் சென்றிருந்தார். அதன்பின்னர், கடந்த 26 ஆண்டுகளில் பின்லாந்துக்குச் சென்றுள்ள முதல் இந்தியஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆவார்.

இதற்கு முன்பு, நிதி அமைச்சராக இருந்தபோது, பின்லாந்துக்கு 1993ஆம் ஆண்டு பிரணாப் முகர்ஜி சென்றுள்ளார். (வ)



## எல்லையில் பாகிஸ்தான் மீண்டும் அத்துமீறல்

இந்திய எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் மீண்டும் அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளது. நேற்றுமுன்தினம் புதன் கிழமை காலை காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டம் சவுஜெயின் பகுதியில் பாகிஸ்தான் படையினர் அத்துமீறி தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்புப்படை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்திய தரப்பில் தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டதாகவும், உயிர்ச் சேதம் ஏதுமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் நடத்தி வரும் தாக்குதல்களில் இந்திய தரப்பில் 8 பேர் உயிரிழந்தனர். 13 படையினர் உட்பட 90 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதுதவிர எல்லையோரத்தில் உள்ள 113 கிராமங்களில் இருந்து 30,000 மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். (வ)

## ஜெ. பிணை மனு இன்று விசாரணை

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிணை மனு உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வருகிறது.

பல்வேறு உடல் நலக் குறைபாடுகள், வயது ஆகியவற்றைக் காரணம் காட்டி பிணை கோரப்பட்டுள்ளது.

4 ஆண்டு சிறைத் தண்டனையையும் ரத்துச் செய்ய வேண்டும் என்றும் மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்துக் குவித்த வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு தலா 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து கடந்த 27ஆம்திகதி பெங்களூர்சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

## தமிழக மீனவர் 25 பேர் ஈரான் சிறையில்

நாகர்கோவில், ஒக்.17

சவூதி அரேபியாவில் இருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 20 பேர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக ஈரானில் 25 நாள்களாக சிறை வைக்கப்பட்டுள்ளனர்.


தமிழக மீனவர்கள் 20 பேர் சவூதி அரேபியாவில் தங்கி இருந்து மீன்பிடித் தொழில் செய்து வந்தனர். இவர்களில் 16 பேர் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. செப்ரெம்பர் 11 ஆம் திகதி அவர்கள் அரேபிய முதலாளிகளுக்குச் சொந்தமான 4 விசைப்படகுகளில் சவூதி அரேபியாவில் உள்ள கத்திப், தரின் ஆகிய பகுதிகளில் இருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

அவர்கள் சவூதி அரேபிய எல்லையைத் தாண்டியதாக கூறி ஈரான் கடலோரக் காவல் படை அவர்களைக் கைது செய்துள்ளது. தற்போது அவர்கள் இக்கிஸ்என்றதீவில்அவர்களது விசைப் படகிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (வ)

## மூன்றாவது செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணுக்கு

சென்னை, ஒக்.17

இந்தியாவின் 3வது நேவிகேஷன் ஐ.ஆர்.என். எஸ்.எஸ்-1சி செயற்கைக் கோளை சுமந்து செல்லும் பி.எஸ்.எல்.வி.சி26 ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.



இந்தியாவின் பிராந்திய நேவிகேஷன் செயற்கைக் கோள் திட்டத்தின்படிமொத்தம்7 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட உள்ளன. ஏற்கனவே 2 செயற்கைக்கோள்கள் விண்ணில் ஏவப்பட்டுள்ள நிலையில்,மூன்றாவதாக ஐ.ஆர். என். எஸ்.எஸ்-1சிநேவிகேஷன் செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது. இந்தச் செயற்கைக் கோள் கடல்வழிப்பாதை, பேரிடர் மேலாண்மை, வாகனங்கள் கண்காணிப்பு உள்ளிட்ட பணிகளைக் கண்காணிப்பதற்காக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது. இறுதிக் கட்டப் பணிகள் முடிவடைந்த நிலையில், கடந்த 13 ஆம் திகதி காலை 6.32 மணிக்கு 67 மணி நேர கவுன்ட் டவுன் ஆரம்பித்தது. இந்தச் செயற்கைக்கோள் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீஹரி கோட்டா முதலாவது தளத்தில் இருந்து ஏவப்பட்டுள்ளது.

பி.எஸ். எல்வி - சி26 செயற்கைக்கோள் எக்ஸ். எல். வகையைச் சேர்ந்ததாகும். ஏற்கனவே எக்ஸ் எல் வகையில் சந்திராயன் உட்பட 6 செயற்கைக் கோள்களை இஸ்ரோ விண்ணில்செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (வ)



ஹூட் ஹூட் புயலின் சீற்றத்துக்குப் பின்னர் துறைமுக நகரான விசாகப்பட்டினம் மெல்ல மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறது. நேற்றுக் காலை பொதுப் போக்குவரத்து சேவை ஆரம்பமாகியது. மூன்று தினங்களுக்குப் பின்னர் வீதிகளில் நேற்றுக் காலைதான் கணிசமான அளவு மக்கள் நடமாட்டம், வாகனப் போக்குவரத்து காணப்பட்டன.

# மனித வெடிகுண்டு மூலம் மோடியைக் கொல்லச் சதி

வாரணாசி, ஒக்.17

பிரதமர் நரேந்திர மோடியை மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்திக் கொல்ல சதித் திட்டம் தீட்டப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நரேந்திர மோடி, ஹரியானா, மராட்டிய மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல் பரப்புரையை முடித்த நிலையில், உடனடியாக அவரது சொந்தத் தொகுதியான வாரணாசி செல்வதாக இருந்தது.

ஆனால், அவரது உடல் நிலை சீரியில்லை என்று மோடியின் வாரணாசி பயணம் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது.



அதே நாளில் ஆந்திர மாநிலத்துக்குச் சென்று அங்கு புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மிக சுறுசுறுப்புடன் மோடி பார்வையிட்டார்.

இந்தநிலையில்தான் வாரணாசியில் மோடியை மனித வெடிகுண்டுத்தாக்குதல்மூலம் படுகொலை செய்யத் தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியிருந்தனர் என்று திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

மோடி வாரணாசி சென்றால் அங்கு கட்டுக்கடங்காமல் கூட்டம் கூடும் என்பதால், இதை வாய்ப்பாகப் பயன்படுத்தி மனித வெடி குண்டு மூலம் தீவிரவாதிகள் மோடியைக் கொல்ல சதித் திட்டம் தீட்டி இருந்தனர் என்ற தகவல்உளவுத்துறைக்கு கிடைத் திருந்தது என்றும், அவர்களின் அறிவுறுத்தலின் பேரிலேயே கடைசி நேரத்தில் மோடியின்வாரணாசிபயணம் ரத்தானது என்றும் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

கட்டுக்கடங்காத கூட்டத்தில் மோடிக்குப் பாதுகாப்பு கொடுப்பது என்பது மிகவும் சிரமம் என்று பொலிஸ்தரப்பும் மோடியின் பயண ரத்துக்குப் பரிந்துரை செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## இலங்கை - இந்தியா இடையே கடல்பாதை

டில்லி, ஒக்.17

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான புதிய கடல் வழிப் பாதை ஒன்றை அமைப்பது தொடர்பில் இந்தியா கவனம் செலுத்தியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான கடற்பரப்பில் மேற்கொள்ளப்படவிருந்த சேது சமுத்திரத் திட்டம் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

இதற்கமைய இராமர் பாலத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் புதிய கடல் வழிப் பாதையை அமைப்பதற்கு இந்தியா உத்தேசித்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பான பத்திரம் விரைவில் இந்தியாவின் மத்திய அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (வ)

## செவ்வாய் துணைக்கோளை படம் பிடித்தது மங்கள்யான்

செவ்வாய்க் கிரகத்தின் துணைக் கோளான போபாஸை மங்கள்யான் படம் பிடித்து அனுப்பியுள்ளது.

இஸ்ரோ, மங்கள்யானின் பேஸ்புக், டுவிட்டர் சமூக வலைதளங்களில் இந்தச் சிறிய காணொலி படம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

6,779 கிலோமீற்றர் விட்டம் கொண்ட செவ்வாய்க் கிரகத்தின் முன்னால் 22 கிலோமீற்றர் மட்டுமே விட்டம் கொண்ட இந்த துணைக்கோள் சிறிய புள்ளியைப் போல் தெரிகிறது.

இந்தத் துணைக்கோள் செவ்வாய்க் கிரகத்தைச் சராசரியாக 6000 கிலோமீற்றர் தொலைவில் சுற்றி வருகிறது. சூரிய மண்டலத்தில் ஒரு கிரகத்தை மிக அருகில் சுற்றிவரும் துணைக்கோள் இதுதான். நாளொன்றுக்கு 3 முறைசெவ்வாய்க் கிரகத்தை இது சுற்றி வருகிறது. இந்தத் துணைக்கோள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் போது செவ்வாய் கிரகத்திலிருந்து 66,275 கிலோமீற்றர் உயரத்தில் படம் பிடிக்கப்பட்டுள்ளது. செவ்வாய்க் கிரகத்தின் துணைக்கோள்களான போபாஸ், டெய்மாஸ் ஆகியவை 1877 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டன. இது ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் செவ்வாய்க் கிரகத்தை நோக்கி 1.8 மீற்றர் தூரம் நகர்கிறது. இதனால், அடுத்த 5 கோடி ஆண்டுகளில் இந்த துணைக்கோள் செவ்வாய்க்கிரகத்தில் மோதி வெடிக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

போபாஸ் என்ற பெயரில் செவ்வாய்க்கிரகத்துக்கு விண்கலங்களும் அனுப்பப்பட்டுள்ளன. (வ)

## எபோலாவைக் கட்டுப்படுத்த பேஸ்புக் நிறுவுநர் ரூ.150 கோடி




கொடிய உயிர்க்கொல்லி நோயான எபோலாவைக் கட்டுப்படுத்தப் போராடும் நாடுகளுக்கு பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஷுக்கர் பெர்க் 150 கோடி ரூபா நிதி உதவி அளிக்கப் போவதாக அறிவித் துள்ளார்.
எபோலா நோய் தாக்கி மேற்கு ஆபிரிக்க நாடுகளில் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 9,000 பேர் அந்நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். எபோலா பரவாமல் தடுக்க உலக சுகாதார நிறுவனம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.
இந்தநிலையில் எபோலா நோய் தாக்கி மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளான கினியா, லைபேரியா, சியரால், லியோன் உள்ளிட்ட நாடுகளுக்கு உதவும் வகையில் பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஷுக்கர் பெர்க்கும் அவரது மனைவியும் இணைந்து 150 கோடி ரூபா நிதி உதவி அளிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். (வ)

## மலேசியர்கள் 13பேர் கைது

'இஸ்லாமிய அரசு தீவிரவாதக் குழுவுடன் தொடர்புகள் வைத்திருப்பதாக சந்தேகிக்கப்படும் 13 பேரை மலேசிய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.
இதுகுறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை. ஆனால் கைது செய்யப்பட்டவர்களில் மாணவர்கள் மற்றும் தொழிற்சாலைப் பணியாளர்கள் அடங்குகிறார்கள் என்று உள்ளூர் செய்தி நிறுவனம் ஒன்று கூறியது.
இந்த ஆண்டு ஏப்ரலில் இருந்து தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 36 பேரைக் கைது செய்திருப்பதாக மலேசியா கூறுகிறது. (வ)

# நேபாளத்தில் பனிச் சரிவு

## 29 பேர் சாவு



காத்மாண்டு, ஒக்.17
நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் பனிச் சரிவில் சிக்கி இந்தியர்கள் உள்ளிட்ட 29 மலையேறும் வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.
தென் இந்தியாவைத் தாக்கிய ஹீட் ஹீட் புயல் காரணமாக நேபாளத்தில் செவ்வாய்க்கிழமை கடும் பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளது. மேலும் அங்கு ஆலங்கட்டி மழையுடன் சேர்த்து கன மழை பெய்துள்ளது. இதன் காரணமாக முஷ்தாக் மற்றும் முன்னாக் மாவட்டங்களில் எல்லையில் அமைந்துள்ள தோராங்பாஸ் பகுதியில் கடும் பனிச் சரிவு ஏற்பட்டது.
இதில் சிக்கிய மலையேறும் குழுவினரில் இந்தியர்கள் உள்ளிட்ட 29 பேர் உயிரிழந்துள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த நேபாள ராணுவத்தினர் இதுவரை 4 சடலங்களைக் கைப்பற்றி உள்ளனர்.
மேலும் காயம் அடைந் தவர்களை மீட்டு ஹெலிகள் மூலம் அவர்களை மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். இதனிடையே இதுவரை 85 பேர் காணாமல் போயுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மோசமான வானிலை காரணமாக காணாமல் போனவர்களுடன் தொடர்பு கொள்வது கடினம் என்றாலும் அங்கு அந்தநாட்டு இராணுவத்தினர் தொடர்ந்து மீட்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (வ)

## மனிதவெடிகுண்டு வெடிப்பு பாகிஸ்தானில் 5 பேர் சாவு



இஸ்லாமாபாத், ஒக்.17
ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பாகிஸ்தானின் கைபெர் மாவட்டத்தில் அமைதிக்குழுக் கூட்டத்தில் இடம் பெற்ற மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர்.
திராக் பள்ளத்தாக்கு பகுதியில் பிர் மெலா பகுதியில் அமைதிக் குழுவினரைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கூட்டத்தில் மர்ம நபரொருவர் தான் வைத்திருந்த வெடி குண்டை வெடிக்கச் செய்ததில் 5 பழங்குடியின மக்கள் உயிரிழந்தனர். 7 பேர் காயம் அடைந்தனர் என்று பாதுகாப்புத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சம்பவம் குறித்து தகவல் அறிந்த மீட்புக் குழுவினர் விரைந்து சென்று காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.
தொடர்ந்து அவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.
இந்தத் தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை. இருப்பினும், அந்தப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான் தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடைய லஷ்கர்-இ-இஸ்லாம் தீவிரவாத இயக்கத்துக்கு தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. திராக் பள்ளத்தாக்குப் பகுதியில் தீவிரவாதிகளின் கொட்டத்தை அடக்க ராணுவம் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனாலும் மலைப் பகுதிகளில் தீவிரவாதிகள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். (வ)

## 96 வருடங்களாக பாதுகாக்கப்படும் அறை

முதலாம் உலகப் போரில் இறந்துபோன பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரின் படுக்கை அறை 96 ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.
பிரான்ஸை சேர்ந்த ஹூமர்ட் என்ற ராணுவ வீரர் முதல் உலகப்போரின் போது பெல்ஜியத்தில் 1918 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். அதையடுத்து அந்த வீரரின் பெற்றோர் அவருடைய படுக்கை அறையை கோவில் போல் பாதுகாத்து வந்துள்ளனர். அதன்பின்னர் 1936 ஆம் ஆண்டில் தங்கள் வீட்டை விற்ற போது கூட தங்கள் மகனின் படுக்கை அறையை இன்னும் 500 ஆண்டுகளுக்கு எந்தவித மாற்றமும் செய்யாமல் பாதுகாக்க வேண்டும் என்று நிர்ணயித்திருந்தனர்.
இந்தநிலையில், அந்த படுக்கையறை 96 வருடங் களாக அதேநிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.
அந்த அறையின் மேசையில் இருக்கும் பொருள்கள் மற்றும் கறைகள் படிந்த ஆடைகள் வரை எதுவும் இருந்த இடத்தை விட்டு மாற்றப்படவில்லை என்பது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.
இதுகுறித்து வீட்டின் தற்போதைய உரிமையாளர் கூறுகையில், இது உயிரிழந்த அந்த ராணுவ வீரருக்கு செய்யும் மரியாதை என்றும், இதனை அருங்காட்சியகம் போல் பாதுகாக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (வ)



# ஆஸி. எழுத்தாளருக்கு மேன் புக்கர் விருது

இந்த ஆண்டின் மேன் புக்கர் விருது ஆஸ்திரேலிய எழுத்தாளரான ரிச்சர்ட் ஃப்ளானகனுக்கு வழங்கப்பட்டுள்ளது.
இரண்டாவது உலகப்போர் பின்னணியில் அமைந்த தி நேரோ ரோட் டு த டீப் நார்த் என்ற அவரது நாவலுக்கு இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
அவருக்கு பரிசுத் தொகையாக 50 ஆயிரம் பவுண்கள் வழங்கப்பட்டது.




மூன்று மணி நேர விவாதத்துக்குப் பின்னர் பெரும்பான்மையோரின் ஒப்புதலுடன் இந்த நாவலுக்கு விருது வழங்கப்பட்டதாகத் தேர்வுக் குழுவின் தலைவரான க்ரேலிங் தெரிவித்துள்ளார்.
இரண்டாம் உலகப் போர் காலகட்டத்தில், தாய்லாந்துக்கும் பர்மாவுக்கும் இடையில், அமைக்கப்பட்ட மரண ரயில் பாதை என்ற ரயில்பாதை அமைக்கப்பட்ட காலகட்டத்தின் பின்னணியில் இந்த நாவல் அமைந்துள்ளது.
லண்டனின் கில்ட் ஹாலில் நடந்த விழாவில் கார்ன்வால் சீமாட்டி காமிலா இந்த விருதை ஃப்ளானகனுக்கு வழங்கினார்.
ஃப்ளானகனின் தந்தை, இரண்டாவது உலகப் போர் காலகட்டத்தில் ஜப்பானில் போர்க் கைதியாக இருந்தார்.
இந்த ரயில் பாதை அமைக்கும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டார். அந்தத் தாக்கத்தில்தான் ஃப்ளா னகன் இந்த நாவலை எழுதினார்98 வயதான ஃப்ளானகனின் தந்தை நாவல் வெளிவந்த தினத்தன்று உயிரிழந்தார்.
தனது படையினருக்கு பொருள்களையும் ஆட்களையும் கொண்டுசெல்லும் வகையில் 1943ல் பர்மாவின் ராங்கூனுக்கும் தாய்லாந்தின் பாங்காக்குக்கும் இடையில் ஜப்பான் ரயில் பாதையை அமைத்தது. போர்க் கைதிகள் இதில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டனர். இந்த ரயில் பாதையின் கட்டுமானப் பணியின் போது ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.
ஜப்பானிய யுத்தக் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் முகாமில் கதை நடக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன்பாக தனது உறவினர் ஒருவரின் இளம் மனைவி மீது காதல் வயப்பட்டிருந்த அறுவைச் சிகிச்சை மருத்துவர் டோரிகோ இவான்ஸின் அனுபவங்கள்தான் இந்த நாவலின் மையக் கரு.
இது ஃப்ளானகனின் ஆறாவது நாவல். இந்த நாவலை எழுதி முடிக்க அவருக்கு பன்னிரெண்டு ஆண்டுகள் எடுத்தன.
இந்த வருடம்தான் முதல் முறையாக மேன் புக்கர் விருது எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதை கருத்தில்கொள்ளாமல், ஆங்கிலத்தில் எழுதும் அனைவருக்குமான விருதாக மாற்றப்பட்டது. இதனால், அமெரிக்காவைச் சேர்ந்த எழுத்தாளர்களின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும் என பல எழுத்தாளர்கள் அச்சம் தெரிவித்திருந்தனர்.
இறுதிப் பட்டியலில் இரண்டு அமெரிக்க எழுத்தாளர்கள், மூன்று பிரிட்டிஷ் எழுத்தாளர்கள், ஒரு ஆஸ்திரேலிய எழுத்தாளர் இடம்பெற்றிருந்தனர்.
கடந்த ஆண்டு புக்கர் விருது நியூஸிலாந்தின் எலனோர் காட்டன் என்பவருக்கு வழங்கப் பட்டது. 'தி லூமினரீஸ்' என்ற நாவலுக்காக தனது 28 ஆவது வயதில் புக்கர் விருதைப் பெற்ற எலனோர், இந்த விருதைப் பெற்றவர்களிலேயே மிகவும் இளையவராவார். (வ)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். நண்பர்கள் உறவினர்கள் மூலம் நல்ல செய்திகள் உங்களை வந்தடையும். பயணங்களால் பயன் கிடைக்கும். வங்கிகளில் சேமிப்புகள் உயரும்.

**இடபம்**: தெய்வ காரியங்களில் கவனத்தைச் செலுத்துவீர்கள். உறவினர்களிடம் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும். புதிய வேலை கிடைக்கும். வேலையில் உள்ளவர்களுக்கு வேலை நிரந்தர மாகும். வியாபாரம் சிறப்பாக நடைபெறும்.

**மிதுனம்**:உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தங்களது திற மைகளை வெளிக் காட்ட வாய்ப்புகள் வந்து சேரும். அரசியலில் உள்ள வர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். எதையும் தைரி யத்துடன் எதிர்கொள்வீர்கள்.

**கடகம்**: மனதில் அமைதி குறையும். எல்லா விதத்திலும் பரபரப்பு தொற்றிக் கொள்ளும். அரசியல்வாதிகளுக்கு பெண்கள் உதவியால் உயர் பதவி கிடைக்கும். பிள்ளைகளால் அனுகூலமும் லாபமும் உண்டு.

**சிங்கம்**:அனைத்து விதங்களிலும் நன்மைகளையே பெறும் கிரக காலகட்டத்தில் இருக்கிறீர்கள். கொடுக்கல் வாங்கலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கண் சம்பந்தப்பட்ட உபாதைகள் வரலாம். கவனம் தேவை. வெளிவட்டாரப் பழக்கங்கள் நன்மையைத் தரும்.

**கன்னி**: நற்செய்திகள் உங்களைத் தேடி வரும். உடன்பிறப்புகள் அனைவரும் சந்தோஷமாக இருப்பார்கள். அவர்களுக்காக சில தியாகங்களையும் செய்வீர்கள். பொன் பொருள் ஆபரண சேர்க்கை உண்டு. வியாபாரிகள் வெளிநாட்டுப் பயணம் செல்வார்கள்.

**துலாம்**: சொத்து தொடர்பான விடயங்களில் நேரடியாகக் கவனம் செலுத்துவது நல்லது. பொருளாதார சந்தேகங்களை உடனுக்குடன் போக்கிக் கொள்ள தகுந்த ஆலோசகரிடம் ஆலோசனை கேட்கலாம். புதிய முயற்சிகளை தள்ளி போடுவது நல்லது.

**விருச்சிகம்**: துணிச்சலாக எதையும் செய்து வெற்றி பெறுவீர்கள். அலைச்சல் ஏற்பட்டாலும் எடுத்த முயற்சி கைகூடும். தேவையான வசதிகள் உண்டாகும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும்.

**தனுசு**: உடல் சோர்வு மனக் குழப்பம் ஏற்பட்டாலும், அது நீங்கும். செலவு கட்டுக்குள் இருக்கும். தொழில், வியாபாரம் எதிர்பார்த்தபடி நடக்கும். கூட்டுத் தொழிலில் இருப்பவர்கள் கவனமாக எதையும் செய்வது நன்மையைத் தரும்.

**மகரம்**: பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். தாயாரின் உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். திறமைகள் வெளிப்படும்.

**கும்பம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம். முடிவில் எதிர்பார்த்தபடி காரியம் முடியும். சக ஊழி யர்கள் ஆதரவும் இருக்கும். குடும்ப விடயங்களை அடுத்தவரிடம் கூறி ஆலோசனை கேட்பதைத் தவிர்ப்பது நன்மை தரும்.

**மீனம்**: எதிர்பாராத பண உதவிகளும் கிடைக்கும். பேச்சில் நிதானத்தைக் கடைபிடிக்கவும். யாருடைய தூண்டுதலுக்கும் செவி சாய்க்காதீர்கள். வியாபாரிகளுக்கு நல்ல விதமாக பண வசதிகள் அனைத்தும் வேண்டியபடி கிடைக்கும்.

## நாளை

**ஐப்பசி-01 சனிக்கிழமை | 18.10.2014**

திதி: தசமி மு.இ. 08.05 வரை
நட்சத்திரம்: ஆயிலியம், மா.6.43 வரை

சுபநேரம்:03.02-04.32 வரை
இராகுகாலம்:09.02-10.32 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### ஒரே குறிக்கோள்

வெவ்வேறு பாதைகள் மூலம் நாம் ஒரே குறிக் கோளை அடைய முடியும் என்பது வேதாந்த மதத்தின் மகத்தான கருத்தாகும். இந் தப் பாதைகளை நான் பொதுவாக கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்று நான்காகப் பிரித்திருக்கிறேன். ஆனால் இந்தப் பிரி வுகள்துல்லியமாகக் கோடிட் டுப் பிரிக்கப்படாதவை.

ஒவ் வொன்றும் முற்றிலும் தனியானவை அல்ல, ஒன் றோடொன்று கலந்தவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தக் கலப்பில் எந்த அடை யாளம்முக்கியமாகத்தென்ப டுகிறதோ, அதை வைத்து அந்தப் பிரிவை அழைக்கி றோம். கர்மத்தைத் தவிர வேறெதுவும் செய்ய முடி யாதவர்கள். பக்தியுடன் வழிபடுவதைத்தவிர வேறெ தையும் செய்ய முடியாத வர்கள், வெறும் ஞானத் தைத் தவிர வேறெதுவும் அற்றவர்கள் என்று தனித் தனியாக யாரையும்நீங்கள் காண முடியாது.


எத்தகைய மனப்போக்கு, எந்த அடையாளம் ஒருவரி டம் சிறந்து விளங்குகிறதோ, அதற்கு ஏற்ப இந்தப் பிரிவு கள் வகுக்கப்பட்டுள்ளன.

கடைசியில் இந்த நான்கு பாதைகளும் சேர்ந்து ஒன் றாகி விடுவதை நாம் கண் டோம். எல்லா மதங்களும், எல்லா செயல்முறைகளும், எல்லா வழிபாட்டு முறை களும் ஒரே குறிக்கோளை நோக்கியே நம்மை அழைத் துச் செல்கின்றன அந்த லட் சியம் எது என்பதைக் காட்ட நான் முயன்றுள்ளேன்.

நான் புரிந்து கொண்ட படி அந்த லட்சியம் முக்தி தான். சுதந்திரம்தான் நம்மைச் சுற்றி நாம் காண்கின்ற ஒவ் வொன்றும், அணுவிலி ருந்து மனிதர் வரையில், உயிரற்ற ஜடப் பொருளணு விலிருந்து உலகின் மிகச் சிறந்த உணர்வுப் பொரு ளான மானிடஆன்மா வரை யில் எல்லாமே சுதந்திரத் துக்காகவே போராடிக் கொண்டிருக்கின்றன.

சொல்லப்போனால் பிர பஞ்சம் முழுவதுமே சுதந் திரத்துக்கான இந்தப் போராட் டத்தின் விளைவுதான்.

## மனிதர் செல்ல முடியாத இடத்துக்கும் போகக் கூடிய பாம்பு வடிவ ரோபோ



இந்த ரோபோ மணல் மேடுகள் மற்றும் மனிதர்கள் செல்ல முடியாத மலை முகடுகளில் ஏறும் திறன் படைத்தது.

உலகம் முழுவதும் இதுவரையில் பல வடிவிலான ரோபோ இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தற்போது பாம்பு போன்று வளைந்து நெளிந்து செல்லும் ரோபோவை அமெ ரிக்காவின் கார்னகில் மெலான் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டு பிடித் துள்ளனர். இந்த ரோபோ மணல் மேடுகள் மற்றும் மனிதர்கள் செல்ல முடியாத மலை முகடுகளிலும் ஏறும் திறன் படைத்தது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 2 | | | 4 | | | 6 |
| 9 | 5 | | 6 | 2 | | 7 | | |
| 6 | | | | 8 | | 9 | 2 | 4 |
| 3 | 9 | | | | | | 7 | |
| | | 8 | | | | 1 | | |
| | 7 | | | | | | 5 | 8 |
| 2 | 1 | 9 | | 4 | | | | 5 |
| | | 7 | | 5 | 6 | | 9 | 1 |
| 5 | | | 2 | | | 8 | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 7 | 4 | 2 | 3 | 5 | 9 | 1 |
| 2 | 5 | 1 | 9 | 8 | 6 | 3 | 7 | 4 |
| 3 | 9 | 4 | 5 | 1 | 7 | 6 | 2 | 8 |
| 4 | 1 | 9 | 3 | 7 | 2 | 8 | 5 | 6 |
| 5 | 8 | 3 | 6 | 4 | 9 | 7 | 1 | 2 |
| 7 | 2 | 6 | 8 | 5 | 1 | 4 | 3 | 9 |
| 1 | 3 | 2 | 7 | 6 | 4 | 9 | 8 | 5 |
| 6 | 7 | 5 | 1 | 9 | 8 | 2 | 4 | 3 |
| 9 | 4 | 8 | 2 | 3 | 5 | 1 | 6 | 7 |

# சமனிலை தவிர்ப்பு உதையில் வெற்றி சம்பியனானது முல்லை. சென்ஜூட்

அமரர் முருகுப்பிள்ளை நிர்மலன் அவர்களின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் சமனிலை தவிர்ப்பு உதையில் வெற்றி பெற்று முல்லைத்தீவு சென்ஜூட் அணி சம்பியனானது.

வவுனியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையே அணிக்கு 9 பேரைக் கொண்ட விலகல் முறையில் நடத்தப்பட்ட போட்டிகளில் சம்பியனாக யங்ஸ்டார் அணியும் இரண்டாவது இடத்தினை அல்மதா அணியும் பெற்றன. அதேவேளை முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் நடத்தப்பட்ட அணிக்கு 9 பேரைக் கொண்ட விலகல்முறையிலான போட்டியில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு சென்ஜூட் அணியும், இரண்டாம் இடத்தை முள்ளியவளை வளர்மதி அணியும் பெற்றன.




கடந்த புதன்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் சம்பியனைத் தெரிவு செய்வதற்காக இரண்டு மாவட்டங்களிலும் முதல் நிலைகளைப் பெற்றுக் கொண்ட அணிகளான முல்லைத்தீவு சென்ஜூட் அணிக்கும் வவுனியா யங்ஸ்டார்அணிக்கும்இடையே போட்டி நடத்தப்பட்டது. ஆட்டம் ஆரம்பம் முதலே பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் அமைந்திருந்தது. சென்ஜூட் அணியினரின் பக்கமே ஆதிக்கம் அதிகமாக இருந்தபோதும் முன்னணி வீரர்களான தீபன், ஸ்ரீ ஆகியோர் தமக்குக் கிடைத்த கோல் போடும் சந்தர்ப்பங்களை தவறவிட்டிருந்தனர். போட்டி நிறைவடையும் வரை இரு அணிகளும் கோல் எதனையும் பெறாத நிலையில் வெற்றியை தீர்மானிப்பதற்காகச் சமனிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் சென்ஜூட் அணியினர் 4 சந்தர்ப்பங்களை கோலாக்கினர். ஆனால் யங்ஸ்டார் அணியினர் 3 பந்துகளை மட்டும் கோலாக்கினர். இதன் மூலம் முல்லைத்தீவு சென்ஜூட் அணி இறுதியாட்டத்தில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. இரண்டாம் இடத்தினை யங்ஸ்டார்அணி பெற்றுக்கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக சென்ஜூட் அணியின் தீபனும் சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் கோல்காப்பாளரும் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

முன்னதாக நடைபெற்ற மூன்றாம் நிலைக்கான போட்டியில் இரண்டு மாவட்டங்களிலும் இரண்டாம்நிலையைஅடைந்த முள்ளியவளை வளர்மதி அணிக்கும், வவுனியா அல்மதா அணிக்குமிடையே நடத்தப்பட்டது.

போட்டி ஆரம்பமாகி 15 ஆவது நிமிடத்தில் வளர்மதி அணியின் ஆரணியன் கோல் கம்பத்தினை நோக்கி அடித்த பந்தை சுஜிபவன் கோலாக்கினார். 17 ஆவது நிமிடத்தில் அதே அணியின் கிதர்சன் வழங்கிய பந்தினை மீண்டும் சுஜிபவன்கோலாக்கினார். தொடர்ந்து போட்டியின் 23 ஆவது நிமிடத்தில் சுஜிபவன் தனக்குக் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்தி மீண்டும் அணிக்கான மூன்றாவது கோலையும் அடித்தார். இரண்டாவது பாதியிலும் வளர்மதி அணியின் பக்கமே ஆதிக்கம் அதிகமாகவிருந்தது. இருந்தபோதும் அவர்கள் தொடர்ந்து கோல் எதனையும் பெற்றுக் கொள்ளாத வகையில் அல்மதா அணியினர் வியூகத்தை அமைத்து தற்காத்துக் கொண்டனர். இறுதியில் 3:0 என்ற ரீதியில் வளர்மதி அணி வெற்றியீட்டி மூன்றாவது இடத்தைக் கைப்பற்றியது. (ரி- 102)

## செபஸ்தியான், சென்.மோரிஸ் அணிகள் அடுத்த சுற்றில்

கரணவாய்.ஒக்.17

எதிரணிகளை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறின வெற் றிலைக் கேணி சென் செபஸ் தியான் விளையாட்டுக்கழகம், கட்டைக்காடு சென். மோரிஸ் விளையாட்டுக்கழகம் என்பன.

தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் கழக மைதானத் தில் இடம்பெற்று வருகின்றது. அதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தின் முற்பாதியின் 14 ஆவது நிமிடத்தில் வெற்றிலைக் கேணி சென். செபஸ்தியான் அணி வீரர்களான அலக்ஸும், பிற்பாதியில் 25 ஆவது நிமிடத்தில் வினித்தும் கோல்போட அந்த அணியின் வெற்றி உறுதியானது. தொடர்ந்தும் இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதியபோதும் கோல்களைத் தொடர்ந்து அடிக்க முடியாத சூழ்நிலையில் 2:0 என்ற கோல் கணக்கில் சென். செபஸ் தியான் அணி வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் கட்டைக்காடு சென். மோரிஸ் விளையாட்டுக்கழகமும், செம்பியன்பற்று சென் பிலிப் நேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் ஆட்டத்தின் பெரும் பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சென். மோரிஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அவ்வணி சார்பாக அருமை ரஜனி மற்றும் சதீஸ்குமார் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் ராஜ்குமார் 2 கோல்கள்ளையும் அடித்தனர்.

சென்.பிலிப் நேரிஸ் அணி சார்பாக யஹல்ரன் ஒரு கோல் போட்டார். (ரி- 108)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஒக்.17

வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலனந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இரு பாலாருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம் பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா மத்திய மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. (ரி- 23)

## மத்திய கல்லூரி வெற்றி



யாழ்ப்பாணம்.ஒக்.17

வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலனந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம்புதன்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 76:41 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ரி- 23)

## பளுதூக்கலில் இரண்டு வெள்ளிப் பதக்கங்கள்



*விளையாட்டு அமைச்சினால் மாகாணங்களுக்கு இடையில் நடத்தப்படும் தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியில் வடமாகாணம் சார்பில் இரண்டு வெள்ளிப்பதக்கங்கள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. கடந்த திங்கட்கிழமை கொழும்பு களனி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பளுதூக்கும் போட்டியில் பெண்களுக்கான 58 கிலோ எடைப்பிரிவு பளுதூக்கும் போட்டியில் வி. ஆசிகா 115 கிலோ எடையை தூக்கி 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், பெண்களுக்கான 69 கிலோ எடைப்பிரிவு பளுதூக்கும் போட்டியில் ஜே. ஜே. பி. டினோஜா 118 கிலோ எடையை தூக்கி 2ஆம் இடத்தைப்பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் வென்றுள்ளனர். (ரி- 23)*

## கனியூட் ஹற்றிக் கோல் சென்சேவியர் வெற்றி

கனியூட் ஹற்றிக் கோல் போட சென்சேவியர் விளையாட்டுக் கழகம் 5:1 கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

தாளையடி சென்அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.



அதில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் அல்வாய் நண்பர் கள் விளையாட்டுக்கழகமும் மோதின. முதற்பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் சம பலத்துடன் மோதியதில் ஆட்டத்தில் விறுவிறுப்புத் தன்மை காணப்பட்டது. இச் சூழ்நிலையில் ஆட்டத்தின் 18 ஆவது நிமிடத்தில் சென்சேவியர் அணி சார்பாக இருதயராஜ் கோல் போட ஆட்டம் சூடு பிடித்தது. இதற்குப் பதில் கோல் போடுவதற்காக எதிரணியின் கோல் பிரதேசத்தை ஆக்கிரமித்த அல்வாய் நண்பர்கள் அணி 27 ஆவது நிமிடத்தில் சுரேனின் உதவி யுடன் கோல் போட்டுச் சமப்படுத்தியது. ஆனால் அடுத்த நிமிடமே சென். சேவியர் அணியின் நிரோசன் கோல்போட 2:1 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் இரு அணியினரும் அணியில் சில மாற்றங்களுடன் களமிறங்க ஆட்டம் மேலும் சூடு பிடிக்க பார்வையாளர்களும் பரவசமடைந்தனர்.

ஆனாலும் புயல் வேகம் கொண்ட கனியூட் பிற்பாதி ஆட்டத்தில் அடுத்தடுத்து மூன்று கோல்கள் அடித்து ஹற்றிக் கோல் போட 5:1 என்ற கோல்கணக்கில் சென். சேவியர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.



# வெற்றியுடன் தொடங்கியது சென்னை

இந்தியன் சுப்பர் லீக் உதைபந்தாட்டப் போட்டியை வெற்றியுடன் தொடங்கியிருக்கிறது சென்னையின் எப்.சி. அணி

கோவாவின் படோர்டாவில் உள்ள நேரு விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடந்த 4ஆவது லீக் ஆட்டத்தில் சென்னையின் எப்.சி. அணியும் எப்.சி.கோவா அணியும் பலப்பரீட்சை நடத்தின.

விறுவிறுப்பாக தொடங்கிய ஆட்டத்தில் ஆக்ரோஷத்துடன், அவ்வப்போது உரசல்களும் தலைதூக்கின. பந்து உள்ளூர் அணியான கோவா வசமே அதிகமாக சுற்றிக் கொண்டிருந்தாலும், அதிர்ஷ்டம் சென்னை அணிக்கு தான் அடித்தது. 32ஆவது நிமிடத்தில் கோல் கம்பத்தில் இருந்து சற்று தொலைவில் தனது காலுக்குள் வந்த பந்தை சென்னையின் வீரர் பல்வந்த் சிங் கோல்கம்பத்தை நோக்கி உதைத்தார். பந்து கோவாவின் கோல் காப்பாளர் ஜான் செடாவின் கையில் பட்ட போதிலும் கோல் வலைக்கு முத்தமிட்டது. இதன் மூலம் இந்த ஐ.எஸ்.எல். உதைபந்து திருவிழாவில் கோல் அடித்த முதல் இந்தியர் என்ற சிறப்பை பல்விந்த் சிங் பெற்றார். அடுத்து 42ஆவது நிமிடத்தில் சென்னையின் நட்சத்திர வீரரும், பிரேசிலைச் சேர்ந்தவருமான இலனோ புளுமர் கோல் அடித்தார். இதனால் சென்னை அணி 2:0 என்ற கோல் கணக்கில் வலுவான முன்னிலை பெற்றது.

இதன் பின்னர் 65ஆவது நிமிடத்தில் கோவாவின் கிரேகோரி பதில் கோல் அடித்தார். மேலும் ஆட்டத்தை சமனுக்கு கொண்டு வர கோவா வீரர்கள் அலைஅலையாக முற்றுகையிட்டு தாக்குதல் நடத்திய போதிலும் முயற்சிக்கு பலன் கிட்டவில்லை. கோவா வீரர்கள் இலக்கை நோக்கி மொத்தம் 9 முறை அடித்த உதைகளில் ஒன்று மட்டுமே கோலாக மாறியது. மேலும் 11 முறை மூலைஉதை வாய்ப்பு கிடைத்த போதிலும் அதையும் வீணாக்கி விட்டனர்.

முடிவில் சென்னையின் எப்.சி. அணி 2:1 என்ற கோல் கணக்கில் கோவாவை வென்றது. ஐ.எஸ்.எல். தொடரில் எதிரணியை அவர்களது சொந்த மைதானத்திலேயே சாய்த்த முதல் அணி சென்னையின் எப்.சி. என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

# நிறைவேறிய நெய்மரின் கனவு




ஒரு போட்டியில் 4 கோல்கள் அடிக்க வேண்டும் என்ற தனது கனவு நிறைவேறிவிட்டதாக பிரேஸில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற நட்பு ரீதியிலான உதைபந்து போட்டியில் பிரேஸில் அணி 4:0 என்ற கோல் கணக்கில் ஜப்பானை தோற்கடித்தது. இதில் பிரேஸிலின் 4 கோல்களையும் நெய்மர்தான் அடித்தார். இதன்மூலம் பிரேஸிலுக்காக ஒரு போட்டியில் 4 கோல்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் நெய்மரும் இடம் பிடித்துள்ளார். 58போட்டிகளில் விளையாடி 40 கோல்களுடன் அதிக கோல் அடித்த பிரேஸில் வீரர்கள் வரிசையில் 5ஆவது இடத்தில் உள்ளார்.

ஜப்பான் அணிக்கு எதிராக அசத்திய நெய்மர் அவரது ஆட்டம் பற்றி கூறுகையில், ஜப்பான் அணிக்கு எதிராக 4 கோல்களை அடித்தபோது வியந்துபோனேன். இதன் மூலம் 4 கோல் அடிக்க வேண்டும் என்ற எனது கனவு நனவான போது மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். முன்னதாக 2000ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் தகுதிச்சுற்றில் 4 கோல் அடித்த பிரேஸில் வீரர் ரொமாரியோ தான் எப்போதுமே எனது முன்மாதிரி. இதனாலேயே அவர் அணிந்த 11ஆம் இலக்க ஆடையை நானும் அணிகிறேன் என்றார். (ரி)

# முச்சதம் அடித்து சாதனை

ஆஸ்திரேலிய கழக அணி வீரரான ஜேம்ஸ் டுல் என்பவர் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட ஆட்டத்தில் முச்சதம் அடித்து சாதனை படைத்துள்ளார்.

ஒருநாள் ஆட்டங்களில் சதம் என்பதே கடினம் என்ற நிலையில் முதன் முறையாக 1997ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற மகளிர் உலகக்கிண்ண தொடரில் பிளிண்டா என்ற ஆஸ்திரேலிய வீராங்கனை டென்மார்க் அணிக்கு எதிராக 229 ஓட்டங்கள் குவித்து தனது முதல் இரட்டை சதத்தை பதிவு செய்தார். பின்னர் 13 வருடங்கள் கழித்து இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் ஆட்டமிழக்காமல் 200 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்தார். அவரைத் தொடர்ந்து அந்த அணியின் தொடக்க வீரர் சேவாக், ரோகித் சர்மா ஆகியோரும் இந்த மைல் கல்லை எட்டினர். ஆனால் யாரும் இதுவரை ஒருநாள் ஆட்டத்தில் முச்சதம் அடித்ததில்லை.



இந்த நிலையில் ஆஸ்திரேலிய கழக அணியின் வீரர் ஜேம்ஸ் டுல் 44 ஓவர்கள் கொண்ட போட்டியில் 341 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்துள்ளார். இவர் இந்த சாதனையை 42ஆவது ஓவரிலேயே எட்டினார். இதன் மூலம் இவரது அணி 44 ஓவ[illegible] 457 ஓட்டங்கள் குவித்தது. எதிரணியால் இந்த இமாலய இலக்கை எட்ட முடியாமல் போனதால் ஜேம்ஸின் சைலண்ட் அஸஸ் சன்ஸ் அணி 225 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ரி)




# சென்னை ஓபனில் லோப்ஸ்

உலகப் புகழ் பெற்ற ஸ்பெயின் வீரரான பெலிசியனோ லோப்ஸ் சென்னை ஓபன் ரெனிஸ் தொடரில் பங்கேற்கவுள்ளார்.

20ஆவது சென்னை ஓபன் ரென்னிஸ் போட்டி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திக்தி முதல் 11ஆம் திகதி வரை சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி. விளையாட்டரங்கில் நடக்கவுள்ளது. இந்தப் போட்டியில் ஸ்பெயின் வீரர் பெலிசியனோ லோப்ஸ் பங்கேற்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார். உலக தரவரிசையில் 14ஆவது இடம் வகிக்கும் 33 வயதான லோப்ஸ் சென்னை ஓபனில் களம் காண இருப்பது இதுவே முதல்முன்றயாகும். (ரி)

# இந்தியாவை அழைக்கும் பாகிஸ்தான்






கிரிக்கெட்டுக்கு புத்துணர்ச்சி கொடுக்க சச்சின், டிராவிட் உள்ளிட்டோர் அடங்கிய இந்திய பதினொருவர் அணி, பாகிஸ்தான் வந்து விளையாட வேண்டும் என, ஷாரியார் கான் தெரிவித்துள்ளார்.

கடந்த 2008 மும்பை பயங்கரவாத தாக்குதலுக்குப்பின், இந்திய அணி, பாகிஸ்தான் செல்வதை நிறுத்திக் கொண்டது. அதன் பின்னர் கடந்த 2009இல் லாகூரில் போட்டியில் பங்கேற்க பஸ்ஸில் சென்ற இலங்கை அணியினர் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில், சில வீரர்கள் காயமடைந்தனர். இதன் பின், பாகிஸ்தானுக்கு எந்த அணியும் சுற்றுப்பயணம் மேற்கொள்வதில்லை. பாகிஸ்தான் பங்கேற்கும் ஆட்டங்கள், அருகிலுள்ள ஐக்கிய அரபு இராச்சியத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 2011இல் பாகிஸ்தானில் நடக்க இருந்த உலகக்கிண்ண ஆட்டங்கள் இலங்கைக்கு மாற்றப்பட்டன. இதனிடையே, பாகிஸ்தானில் மீண்டும் சர்வதேச கிரிக்கெட்ஆட்டங்களை நடத்த தீவிர முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதன் ஒரு பகுதியாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாரியார் கான், இந்திய துணைக்கண்டத்து நாடுகளுக்கு சென்று, அந்த நாட்டு அணிகளை அனுப்புமாறு கேட்டு வருகிறார்.

சமீபத்தில் இந்தியாவின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் பிஷன் சிங் பேடியை சந்தித்தார். இதுகுறித்து ஷாரியார் கான் கூறுகையில், சச்சின், டிராவிட்டுடன் கூடிய ஓய்வு பெற்ற வீரர்கள் அடங்கிய இந்திய அணியை பாகிஸ்தான் அழைத்து வர முடியும் என, என்னிடம் பேடி தெரிவித்தார் என்றார். (ரி)



# தூய்மை இந்தியா திட்டம் மோடியுடன் பேசிய சச்சின்

மோடியை நேரில் சந்தித்த சச்சின், மோடி தொடங்கி வைத்த தூய்மை இந்தியா திட்டம் பற்றி கலந்துரையாடியுள்ளார்.

கடந்த ஒக்டோபர் 2ஆம் திகதி காந்தியின் பிறந்த தினத்தன்று நாடு முழுவதும் தூய்மை இந்தியா திட்டம் தொடங்கப்பட்டது. தலைநகர் டில்லியில் இத்திட்டத்தை தொடங்கிவைத்து பேசிய பிரதமர் மோடி, கிரிக்கெட் வீரர் சச்சின், நடிகர் கமல் உள்ளிட்ட பிரபலங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். மோடியின் அழைப்பை ஏற்றுக்கொண்ட சச்சின் தனது நண்பர்களுடன் சேர்ந்து சில நாட்களுக்கு முன் கையில் துடைப்பத்தை எடுத்துக்கொண்டு மும்பையிலுள்ள ஒரு பகுதியை சுத்தப்படுத்தினார். அது பற்றிய வீடியோ மற்றும் புகைப்படக்காட்சிகள் ஊடகங்களில் வெளிவந்தன. சச்சினின் இம்முயற்சிக்கு பிரதமர் மோடி தனது டுவிட்டரில் வாழ்த்து தெரிவித்திருந்தார்.

இதையடுத்து பிரதமர் மோடியை சச்சின் நேற்று நேரில் சந்தித்துப் பேசியுள்ளார். அப்போது அவரது மனைவி அஞ்சலியும் உடனிருந்தார். மோடியை சந்தித்த சச்சின், தூய்மை இந்தியா திட்டத்தில் இணையுமாறு பலருக்கும் அழைப்பு அனுப்பியிருப்பதாக தெரிவித்தார். மேலும் இத்திட்டத்தை எந்த வகையில் தான் முன்னெடுத்து செல்லப்போகிறார் என்ற விவரத்தையும் மோடியிடம் பகிர்ந்துகொண்டார். ஏற்கனவே சச்சின் தனது டுவிட்டர் மூலம் கிரிக்கெட் வீரர் சாகிர்கான், பூப்பந்தாட்ட வீராங்கனை சாய்னா நேவால் மற்றும் ஹாக்கி அணியின் தலைவர் சர்தார் சிங் ஆகியோரை இத்திட்டத்தில் இணையுமாறு அழைப்பு விடுத்ததுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# மும்பைக்கு பின்னடைவு


மும்பை எப்.சி அணித்தலைவர் காயத்தினால் தொடரிலிருந்து விலகியமை அந்த அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியன் சுப்பர் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் பங்கேற்றுள்ள மும்பை சிட்டி எப்.சி. அணியின் அணித்தலைவர் சையது ரம் நபி, அட்லெடிகோ டீ கொல்கத்தா அணிக்கு எதிரான தொடரின் முதலாவது ஆட்டத்தின் போது இடது கணுக்காலில் காயம் அடைந்து வெளியேறினார்.

காயம் அடைந்த இடத்தை ஸ்கான் பரிசோதனை செய்து பார்த்ததில் தசை நார் கிழிந்து இருப்பது தெரிய வந்துள்ளது. தற்போது அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் நபி அடுத்த 3 வாரத்துக்கு போட்டிகளில் விளையாட முடியாது. இது மும்பை அணிக்கு பின்னடைவாக கருதப்படுகிறது. (ரி)



# இந்தியாவுக்கு காத்திருக்கிறது சவால்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இந்திய கிரிக்கெட் அணி கடும் சவால்களைச் சந்திக்கும் என்று ஷேன் வட்சன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய ஊடகத்திற்கு அவர் அளித்துள்ள பேட்டியில் கூறும் போது, ஆஸ்திரேலியாவில் ஆடுகளத் தயாரிப்பாளர்கள் நிச்சயம் எங்க ளுக்குச் சாதகமான ஆடுகளத்தையே தயாரிப்பார்கள் என்று நம்ப லாம். ஆகவே இந்திய அணிக்குக் கடும் சவால்கள் காத்திருக்கின் றன. இந்திய அணியில், குறிப்பாக துடுப்பாட்டத்தில் உலகத் தரம் வாய்ந்த வீரர்கள் உள்ளனர். ஆனால் இங்கு அவர்களுக்கு வித்தியாசமான சவால் காத்திருக்கிறது என்று கூறியுள்ளார்.

மேலும், தனக்கு தொடக்க வீரராகக் களமிறங்குவதே சிறப் பாக அமைகிறது என்று கூறிய வட்சன், அனைத்து கிரிக் கெட் ஆட்ட வடிவங்களிலும் தொடக்கத்தில் களமிறங்கு வதையே நான் விரும்புகிறேன். அதாவது ஆட்டத் தின் சூழ்நிலைகள் எனது துடுப்பாட்ட பாணியைத் தீர்மானிக்காத ஒரு நிலை தொடக்க வீரர் நிலை எனவே அப்போதுதான் நான் சுதந்திரமாக விளையாடி வந்திருக்கிறேன். மாறாக தொடக்க வீரராக அல்லாமல் சற்றே பின்னால் களமிறங்கினால் சூழ்நிலையின் தாக்கம் எனது மனதை எதிர்மறை அணுகுமுறைக்கு இட்டுச் செல்கிறது. அது எனது ஆட்டத்தைப் பாதிக்கிறது என்றார். (ரி)

## தொடர்ச்சிகள்

### நீதிமன்றில்

னார் பொலிசார் சென்றுள்ளனர். கஞ்சா எங்கே இருக்கிறது என்றுகேட்டுவிசாரித்துள்ளனர். பின்னர் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றனர்.

நேற்றைய தினம் சந்தேக நபரை மன்னார் நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர். கைது செய்யப்படும் போதுவீட்டிலும்பின்னர்பொலிஸ் நிலையத்திலும் வைத்து சந்தேகநபர் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்று அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். அது தொடர்பிலான, சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு கூறி வழக்கை பின்னர் எடுப்பதாக அறிவித்தார் நீதிபதி.

சட்டமருத்துவ அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் சந்தேகநபர் தாக்கப்பட்டிருக்கிறார் என்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அப்போது நீதிமன்றில் நிற்கமுடியாமல் தள்ளாடிய சந்தேகநபர் மயங்கிச் சரிந்தார். இதனால் அங்கு பரபரப்புஏற்பட்டது. சந்தேகநபரை உடனடியாக வைத்தியசாலையில் சேர்ப்பிக்குமாறு நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார். எனினும் சந்தேகநபரை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு தலைமன்னார் பொலிஸார் முன்வரவில்லை. சிறைச்சாலைஅதிகாரிகளும் சந்தேகநபரை பாரமெடுக்க முன்வரவில்லை. இதனால் பரபரப்பு அதிகமானது. வழக்கு நடவடிக்கைக்கு வந்திருந்த சந்தேக நபரின் தாயார் நீதிமன்றத்திலேயே கதறி அழுதார். இதனால், வழக்குகளுக்காகவந்திருந்தோர் திகைத்தனர்.

இதையடுத்து தன்னுடைய காரில் சந்தேகநபரை வைத்தியசாலையில் சேர்க்குமாறு நீதிமன்றப் பொலிசாருக்கு உத்தரவிட்டார் நீதிவான். மன்னார் பொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சந்தேகநபர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிற்குக் கொண்டுசெல்லப்பட்டார். பின்னர் அவர் சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து தலைமன்னார் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரியை நீதிமன்றுக்கு அழைத்த நீதிவான் கடுமையாக எச்சரிக்கை செய்தார். பொதுமக்களின்அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது பொலிசாரின் கடமை என கடுந்தொனியில் அறிவுறுத்தினார். அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் பொலிஸார் செயற்படுவது சட்டத்திற்கு முரணானதுடன் அரசமைப்புக்கும் விரோதமானது என தெரிவித்து நீதிவான் இந்தச் சம்பவம் தொடர்பாக விளக்கமளிக்குமாறும் சம்பவம் தொடர்பாக மன்னார் மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்தல் அனுப்புமாறும் கட்டளையிட்டார். (உ-4,103)

### முதியவர்களுக்கு

பில் பலதரப்புக்கள் பரிந் துரைத்துள்ளன. எதிர்காலத் தில் அவ்வாறான வைத்தியசாலை அமைக் கப்பட்டால் முதியவர்களின் நலன் பாதுகாக்கப்படும்"- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பவாணி பசுபதிராஜா.

முதியவர்களுக்கான சங்கம் ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மனித ஆணைக்குழுவின் பிராந்தியக் காரியாலயத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"முதியவர்களின் தொகை அதிகரிப்பதைப் போன்று அவர்களுக்கான நோய்களும் அதிகரித்த வண்ணமே உள்ளன. வைத்தியசாலைகளில் முதியவர்கள் சிகிச்சை பெறச் செல்லும் போது அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது சாத்தியம் அற்றது. அவர்களுக்கான சிகிச்சை நிலையங்களில் முதியவர்கள் தான் அதிகம் இருப்பர். அங்கு யாருக்கு முன்னுரிமை வழங்குவது என்பது கடினம்."- என்றும்அவர் அங்குசுட்டிக்காட்டினார்.

"சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் சிறுவர்களுடன் வருகை தரும் தாய்மார்கள், கர்ப்பிணிப்பெண்கள், பாதுகாப்பு படையினர் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். என்று கூறப்பட்டுள்ளது. இவற்றை நடைமுறைப்படுத்தும் போது உத்தியோகத்தர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

இலங்கையில் முதியவர்களுக்கு தனியாக ஒரு வைத்திசாலை எங்கும் அமைக்கப்படவில்லை. ஆனாலும் இருக்கக்கூடிய வைத்திசாலைகளில் குறிப்பிட்ட ஒரு வைத்திசாலையில் முதியவர்களுக்கு தனியாக சிகிச்சை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம். இதனை உயர் மட்டத்தில் உள்ளவர்கள்தான் முடிவெடுக்க முடியும்"- என்றும் அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய யாழ். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் அதிகாரி எஸ்.செல்வரஞ்சன் கூறுகையில்,

"எல்லாவற்றுக்கும் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் முதியவர்களுக்கு என ஒரு சங்கம் இது வரை அமைக்கப்பட வில்லை. முதியவர்களது நலன்களில் குடும்ப உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களுடை பராமரிப்பு மிக அவசியமாகவுள்ளது. முதியவர்களை எவ்வாறு பராமரிப்பது என்பது தொடர்பாகவும் அவர்களுக்கான முதலுதவிகளை வழங்குவது தொடர்பாகவும் பயிற்சிகளை வழங்குவதற்கு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிறுவனம் தயாராகவுள்ளது."-என்றுதெரிவித்தார்.

நிகழ்வில் முதியவர்களுக்கான சங்கத்தை அமைப்பதற்கு தற்காலிக குழு நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. அந்தக் குழுவால் யாப்புகள் தயாரிக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நடைபெறும் இரண்டாவது கூட்டத்தில் சங்கத்துக்கான உறுப்பினர்கள் தெரிவு இடம்பெறவுள்ளது. (ந-14)

### கஞ்சா

யில், 18 கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன என்றும், அவை சுமார் 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என்றும் தெரிவித்த பொலிஸார் [illegible] சந்தேக நப[illegible] குறித்த [illegible] இன்று யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர்.

அதேவேளை, குருநகர், இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த ஒருவர் 1 கிராம் கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் நேற்று வியாழக்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அதன்போது, குறித்த நபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ந-106)

### இருண்ட

எதிராக தீர்ப்பளித்தது. சர்வதேச சட்டங்களின்படி, அரசியல் உரிமைகளுக்காகப் போராடிய புலிகள் இயக்கத்தை, தீவிரவாத இயக்கமாக சித்தரிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்று நியூசிலாந்து உச்ச நீதிமன் றம் 2009 இல் தெளிவுபடுத்தியது.

இவற்றை எல்லாம் சுட்டிக் காட்டிதான், இந்தி யாவில் விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க சென்னை உயர் நீதிமன்றத்திலும், தீர்ப் பாயத்திலும் ரிட் மனு தாக்கல் செய்தேன். புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று தொடர்ந்து போராடி வருகிறேன். இந்தச் சூழ்நிலை யில், இருண்ட வானத்தில் ஒளிக்கீற்றாக ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம்வழங்கிய உத்தரவு மகிழ்ச்சியளிக்கின்றது. இனி உலக நா[illegible] இதனைப் பின்பற்றி தடையை நீக்கும் என்பது உறுதி. இந்தியாவும் புலிகள் இயக்கத்தை விடுதலைப் போராட்ட இயக்கமாக அங்கீகரித்து, அதன் மீதான தடையை நீக்க வேண்டும் என்[illegible] வலியுறுத்[illegible]கிறேன் - என்று தெரிவித்துள்ளார். (ந-5)

## மரண அறிவித்தல்

### தங்கவேல் சின்னப்பிள்ளை



பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் சந்தை வீதி -காங்கேசன்துறை, இல 111 இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் வசித்தவரும் [illegible] கொடிகாமம் [illegible] புலோலி தெற்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் சின்னப்பிள்ளை நேற்று(16.10.2014) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலம் தங்கவேல் அவர்களின் மனைவியும் புவனேஸ்வரி, சிறீசிவஞானசுந்தரம், [illegible]றஸ்கந்தராசா, சிறீரங்கநாதன் ஆகியோரின் சகோதரியும் கிரு[illegible]ணலதாவின்(ஆசிரியை, யா/அல்வாய் இ.த.க பாடசாலை) [illegible]யாரும் குலசங்கரின் மாமியாரும் அடல், அகில், அபில் ஆகியோ[illegible]யாரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.10.2014) வெள்ளிக் கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரம்பொன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொடிகாமம் வீதி,
புலோலி தெற்கு.

தகவல் :
குடும்பத்தினர்.

## வாழ்வின் எழுச்சித்திட்ட ஆறாம் கட்டம் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஒக். 17
நிறைவான இல்லம் வளமான தாயகம் எனும் வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் ஆறாம் கட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.
நாடு முழுவதிலுமுள்ள 14 ஆயிரத்து 22 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இது ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.
இதேவேளை - இந்த நிகழ்வு மட்டக்களப்பில் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முறக்கொட்டாஞ்சேனை கிராமத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸின் தலைமையில் நடைபெறவுள்ளதாக வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உத்தியோகத்தர் ஜே.ஏ. மனோகிதராஜ் தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் 345 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் குடும்ப பொருளாதார மற்றும் போஷாக்கை மேம்படுத்துவதற்கான 25 லட்சம் மனைப்பொருளாதார அலகுகளை வலுவூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், அன்றையதினம் மரக்கன்றுகள், பழமரக்கன்றுகள் மற்றும் கோழிக்குஞ்சுகள் வழங்கப்படவுள்ளன.
அத்துடன், அன்றையதினத்தில் சுபநேரமான மு.ப. 10.07 மணிக்கு ஆறாம் கட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் மனோகிதராஜ் தெரிவித்தார். (த-10)

# பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு சட்டம் கடுமையாக்கப்பட வேண்டும்

### காத்தான்குடி நகரசபை உறுப்பினர் சல்மா ஹம்சா தெரிவிப்பு

காத்தான்குடி, ஒக். 17
பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் மீது சட்டம் கடுமையாக்கப்பட வேண்டும் என காத்தான் குடி நகரசபை உறுப்பினரும் பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்கு மான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான சல்மா ஹம்சா தெரிவித்தார்.
காத்தான்குடி முதலாம் குறிச்சியில் பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாது செய்வதற்கான விழிப்புணர்வுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;
பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் மீது சட்டம் கடுமையாக்கப்பட வேண்டும். சாதாரண சட்ட நடவடிக்கையால், இவற்றில் ஈடுபடுபவர்கள் தப்பி விடுகின்றனர். இப்படியானவர்கள் மீது சட்டம் கடுமையாக்கப்படும்போது, இவ்வாறான சம்பவங்களை சமூகத்தில் குறைக்கமுடியும்.
சிறுவர்களை வெளியில் அனுப்பும்போது பெற்றோர், சிறுவர்கள் மீது கவனமாக இருக்க வேண்டும்.
தமது உறவு முறையானவர்களுடன் தமது சிறு பிள்ளைகளை அனுப்பும்போதும் கவனமாக நடந்துகொள்ள வேண்டும்.
இன்று உறவு முறையானவர்களும் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்வதை அன்றாடம் கேள்விப்படுகின்றோம்.
தமது பிள்ளை எங்கு செல்கின்றது? எதற்காக செல்கின்றது? யாருடன் செல்கின்றது? என்ற விடயங்களில் பெற்றோர் கவனமெடுக்க வேண்டும். எமது பெண் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும்.
கடந்த சில நாள்களுக்கு முன்னர் காத்தான்குடியில் சிறுமியொருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் அனைவரையும் வேதனைக்குள்ளாக்கியது.
அந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர் மீது சட்டம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான ஒரு சம்பவம் கடந்த 50 வருடங்களுக்கு முன்னர் காத்தான்குடியில் இடம்பெற்றதாக நாம் அறிகின்றோம்.
எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடந்துவிடாமல் நாம் சமூகச் சூழலில் அவதானமாக இருக்கவேண்டும்- என்றார்.
இந்தக் கூட்டத்தில் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஐ.பி.மங்களா, சிவில் பொறுப்பதிகாரி எஸ்.செல்வராசா, பெண் பொலிஸ் அதிகாரி திருமதி ஆர்.விமலேஸ்வரி, முன்னாள் மாநகரசபை உறுப்பினர் கே.எல்.எம்.பரீட் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர். (த-10)



கிண்ணியா இளைஞர் யுவதிகளின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கில் குறிஞ்சாக்கேணியில் அமைக்கப்பட்ட அறிவகம் (நெனசல) தகவல் தொழில்நுட்ப மையம் புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரதி அமைச்சர் பிரபா கணேசன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அறிவகத்தைத் திறந்து வைத்தார். ஓ-10)

## கடற்கரையில் பூங்காவா? தடைவிதிக்க வேண்டும்

### மருதமுனை மீனவர்கள் போர்க்கொடி

மருதமுனை, ஒக். 17
மருதமுனை கடற்கரைப் பிரதேசத்தில் கடற்கரைப் பூங்கா (பீச் பார்க்) அமைப்பதற்கு தடை விதிக்கக் கோரி மருதமுனைப் பிரதேசத்தைச் சேர்ந்த 273 மீனவர்கள் கையெழுத்திட்டு அம்பாறை மாவட்ட செயலாளர் நீல் அலவினுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.
அந்தக் கடிதத்தில்-
மருதமுனை மசூர் மௌலானா வீதிக்கும் ஸம்ஸம் வீதிக்கும் இடைப்பட்ட கடற்கரைப் பிரதேசத்தில் பூங்கா அமைப்பதற்காக அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.
நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் வேண்டுகோளின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்த பீச்பார்க் அமைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
மருதமுனைக் கிராமத்தில் முக்கியமாக 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் தமது ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.
இந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களின் இயந்திரங்கள், தளபாடங்கள், மீன்வகைகள் போன்றவற்றை பாதுகாக்கும் கட்டடங்களும் இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ளன.
இதனால் இந்த இடத்தில் பீச்பாக் அமைக்கப்படுகின்ற போது, மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்.
எனவே பீச்பாக் அமைப்பது நல்ல விடயமாக இருப்பதால் மருதமுனை பிரதேசத்தில் பொருத்தமான வேறொரு இடத்தை இனங்கண்டு அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
இந்தப் பிரச்சினைக்கு சிறந்த தீர்வைப் பெற்றுத் தருவீர்கள் என நம்புகின்றோம் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-10)




## பாடசாலை மாணவர்களுக்கு இடர் ஒத்திகை நிகழ்வு



மட்டக்களப்பு, ஒக். 17
மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் டிப்பிகோ - 7 இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட 16 பாடசாலைகளில் பாடசாலை மட்ட இடர் ஒத்திகை நிகழ்வை நடத்தி வருகின்றது.
அதனடிப்படையில் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு ஆனைகட்டியவெளி நாமகள் வித்தியாலயம், மட்டக்களப்பு வீரக்கட்டு மயிலவெட்டுவான் அரச தமிழ்க் கலவன் பாடசாலை, மட்டக்களப்பு பங்குடாவெளி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைகளில் இடர் ஒத்திகை இடம் பெற்றது.
இந்த நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையினதும், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உத்தியோகத்தர்களும் வளவாளர்களாகக் கலந்து கொண்டு இடர் ஒத்திகை நிகழ்வை நடத்தினர். இடர் ஒன்றின் போது எவ்வாறு நடந்து கொள்வது, என்பது தொடர்பாக செயன்முறைகளுடன் பாடசாலை மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டன. (த-10)

## மட்டக்களப்பு - பொத்துவில் ரயில் பாதை விஸ்தரிப்புக்கு முன்னுரிமை வழங்குக

### கோருகிறார் முன்னாள் அமைச்சர் மன்சூர்

பொத்துவில், ஒக். 17
கிழக்கு மக்களின் சமூக பொருளாதார மாற்றத்துக்கு வழிகோலும் முன்மொழிவான மட்டக்களப்பு முதல் பொத்துவில் வரையான ரயில் பாதை விஸ்தரிப்புத் திட்டத்துக்கு முன்னுரிமை வழங்குமாறு முன்னாள் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ.ஆர் மன்சூர் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கு புதன் கிழமை கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;
இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரையான ரயில் சேவையை பொத்துவில் வரை விஸ்தரிப்பு செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு அனுப்பிய ஜனாதிபதி கடிதம் தொடர்பிலும் அதற்கு ஜனாதிபதியிடமிருந்து கிடைக்கப்பெற்ற பதில் கடிதம் தொடர்பிலும் அந்தக் கடிதத்தின் பிரகாரம் நான் மேற்கொண்ட முயற்சிகளுக்கு இலங்கை ரயில் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற பிரதிபலன்கள் திருப்தியளிக்காதது குறித்தும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளேன்.
24 வருடங்களின் பின் யாழ்தேவி ரயில் சேவை யாழ்ப்பாணம் வரை சென்றமையானது யாழ்ப்பாண மக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட உன்னதமான சேவை. இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் நன்மையடைந்துள்ளனர்.
இது இந்திய அரசுக்கும் இலங்கைக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தியுள்ளது. தற்போது யாழ்ப்பாணம் வரை ஆரம்பிக்கப்பட்டுள்ள ரயில்சேவை காங்கேசன்துறை வரை நீடிக்கப்படும் என நம்புகிறேன்.
ஈரான் இஸ்லாமிய குடியரசு அரசின் நிதியுதவியின் கீழ் மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை ரயில் பாதையை விஸ்தரிப்புச் செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டவேளை - 1994ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.
அதன் பின்னர் இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை.
கிழக்குக் கரையில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கும் சுற்றுலா விருத்திக்கும் மிகவும் உதவக் கூடியதான மட்டக்களப்பு முதல் பொத்துவில் வரையான ரயில் பாதை விஸ்தரிப்புத் திட்டத்துக்கு முன்னுரிமை வழங்குமாறு அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளேன் எனத் தெரிவித்தார். (த-10)

## மரண அறிவித்தல்

### சுப்பையா நமசிவாயம்(J Pஐயா)



ஐயனார் கோயிலடி
கொக்குவில் மேற்கு
கொக்குவில்

(கோமதி விலாஸ் மனேச்சர்)

கொக்குவில் மேற்கு ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த சுப்பையா நமசிவாயம் கடந்த(15.10.2014) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சுப்பையா-சற்குணம்
சகோதரன்

திரு.சற்குணம்-0212226098
செல்விகோமதி-0775195428

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி உசனைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் எமது உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் நீண்ட கால உறுப்பினராகவும் இருந்து வந்த

### சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை

அவர்கள் 12.10.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துள்ளார். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உசன் ஐக்கிய நாணய சங்க அங்கத்தவர்கள்
உசன், மிருசுவில்.

(53289)(7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி அரியகுட்டி



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாக வும் இணுவில் மேற்கை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி பரமேஸ்வரி அரிய குட்டி நேற்று (16.10.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து- பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப் பிள்ளை-தங்கமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற அரியகுட்டி அவர் களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் குமாரசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஸ்ரீமதிதேவி, சிவநேசம், ரஞ்சினி, மதிவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும் நவரத்தினம், குமாரதாசன், ருசேந்திரன், இரத்தின கோபாலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவகரன், ஷர்மிலா, ஷாலினி, றஜித்தன், நிக்ஷன், சாருஜன், மாலதி, மயூரி, கவிசன், ராகுலன், நிஷாந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிரித்திகா, சறோன், அனிஷா, சகீனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(16.10.2014)வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவோடை வீதி
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சின்னப்பு யோசப் (செல்லக்கேஸ்)

பாஷையூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு யோசப் (செல்லக்கேஸ்) 14.10.2014 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற றோஸ்மலரின் அன்புக் கணவரும், ரூஸ்வெல்ட், டக்ளஸ், டினேஸ், யோறஸ், ரஞ்சலா, டைற்ரஸ், லக்சலா, ஜெகதிஸ், லதிஸ்ரெலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2014) வெள்ளிக்கிழமை, பி.ப.3.00 மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10, புதுக்குடியிருப்பு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

(53295)
(12.3.6)

தகவல்: தம்பி (சகோதரன்),
அருட்சகோதரர் செல்வதாஸ்,
டிலாசால் இல்லம் - மன்னார்.

## 31ஆம் நாள்நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டிக் கிரியையும்



மலர்வு
13.05.1950

உதிர்வு
17.09.2014

### அப்பையா செல்வரட்ணம்(செல்வம்)

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)

என்றும் இனிய முகத்துடன் வந்தோரை வரவேற்ற செல்வமே
பலபேர் போற்றிட மதிப்போடு வாழ்ந்த செல்வமே
பலபேர் வாழ்ந்திட தொழில் பல வழங்கி வாழ்ந்த செல்வமே
இன்று எம்மை விட்டு பல தூரம் பறந்து சென்ற செல்வம்
கண்ணீர் மல்கி உம்மை எண்ணி கலங்குகின்றோம் இன்று
இனி ஒரு பிறப்பு இருக்கும் என்றால் உமக்கு
எம்மிடம் ஓடி வந்திடு ஐயா செல்வமே

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்
உம் அன்பு உறவுகள்

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு பலவிதத்தில் உதவி செய்தவர்களுக்கும், வருத்தமுற்று இருக்கும் போது யாழ்.போதனா வைத்திய சாலையில் கடமையில் இருந்த வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் நண்பர்கள், உறவினர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அன்னாரின் இல்லத்தில் இன்று(17.10.2014) வெள்ளிக் கிழமை நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

"அருந்தவம் இல்லம்"
மாரியம்மன் லேன்
திருநெல்வேலி

குடும்பத்தினர்.

(53299)(08)

## விற்பனைக்கு

புத்தம்புதிய 2014 செப்டெம்பர் வகைகள் Honda Vezel Z Grade யாழ்ப்பாணத்தில் பல வர்ணங்களில் விசேட விலைகளில் பெற்றுக்கொள்ள லாம்.

தொடர்புகளுக்கு: (c/16979)
011 2698613/072 3984108

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## பரீட்சைத் திகதியில் மாற்றம்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் எதிர்வரும் 25ஆம் திகதி நடத்தப்படவிருந்த சைவ நெறித்தேர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் நவம்பர் முதலாம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என சபைச் செயலாளர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார்.

வினாத்தாள் மற்றும் பரீட்சைக் காகிதாதிகள் பொதியினை அறிவிக்கப்பட்ட இணைப்பு நிலையங்களில் எதிர்வரும் 30ஆம் திகதி பாடசாலையினர் பெற்றுக் கொள்ளலாம் என தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார். ரி)

## பட்டமளிப்பு வைபவம்

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவன 11 ஆவது பட்டமளிப்பு வைபவம் இன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மூன்று அமர்வுகளாக நடைபெறும் இந்த பட்டமளிப்பு விழாவில் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தைச் சேர்ந்த 227 மாணவர்கள் பட்டம் பெறவுள்ளனர். (ரி)

## விஞ்ஞான பீட மாணவருக்கு பட்டதாரி நியமனம்

இந்த வருடம் முதல் விஞ்ஞான பீடத்துக்கு இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கு பட்டதாரி நியமனங்களை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. விஞ்ஞான பீடத்தில் இருந்து உருவாகும் மாணவர்களுக்கு இதன் மூலம் மதிப்பு ஏற்படுவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். (ற)

## A/L 2014 மாணவருக்கு

வேலைவாய்ப்பு அதிகம் மிக்க திறன் விருத்தி கற்கை நெறிகளான இணைய வடிவமைப்பு, வலைப்பின்னல் பாதுகாப்பு ஆகிய பயிற்சி நெறிகள் மைக்ரோசொப்ற் கணினிப் பொறியியலாளர்களினால் யாழ் பல்கலைக் கழகத்திற்கு அருகில் உள்ள MCS தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்பிக்கப்படுகின்றது. சான்றிதழ்களும் பொறியியலாளருக்கான அங்கத்துவமும் ஐக்கிய அமெரிக்க மைக்ரோசொப்ற் நிறுவனத் தினால் வழங்கப்படுகின்றது. ஆர்வமுடைய வர்கள் தமது பெயர், பிறந்ததிகதி மாவட்டம் என்பவற்றை 0772395895 இலக்கத்திற்கு உடன் SMS செய்து கொள்ளவும் பயிற்சி நெறிகள் சனிக்கிழமை 18.10.2014 திகதி பகல் 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றது

## தவறிவிட்டது

இல.101, அகத்தியர் வீதி, தோணிக்கல், வவுனியாவில் வசிக்கும் **காளிமுத்து சிவலிங்கம்** என்பவரது தேசிய அடையாள அட்டை (740100947 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்

(53294)
(45.6.3)

தொடர்பு: 076 628 0350

## தவறிவிட்டது

பரராஜசேகரம் நந்தீஸ் ஆகிய எனது B538378 இலக்க சாரதி அனுமதிப்பத்திரம் 13.10.2014 யாழ் நகரப்பகுதியில் தவறவிடப்பட்டது. இதனைக் கண்டெடுப்பவர்கள் 0718486444 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## விற்பனைக்குண்டு

பாவித்த முதிரை நிலைகள், யன்னல்கள், ஜெனரேட்டர்ஸ். விற்பனைக் குண்டு.உடன் தொடர்பு கொள்க.

0774714636
கைலாசபிள்ளையார் கோவிலடி

## மருதாணி அலங்காரம்

பெண்களை அழகாக்கிடும் மருதாணி டிசைன் (Mahainth Design) போட்டு விடப்படும். அழகுக் கலை நிலையங்களுக்கும், மணப்பெண்களுக்கும் போட்டு விடப்படும்.

தொடர்பு : 021 222 7340, 077 977 3298

(53290) (7.6.3)

SILVER SHIELD
பாடசாலை மாணவர்களுக்கு
மாபெரும் விலைக்கழிவு



கடந்த 30 ஆண்டுகளாக
யாழ்.நகர் மக்களின்
தரச்சிறப்புமிக்க
காலுறைகள் (Socks)
SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும்,
அலுவலக ஊழியர்களுக்கும்,
சிறியோர் முதல்
பெரியோர் வரை,
சகல தரத்திலும்
சகல அளவுகளிலும்
பெற்றுக்கொள்ள

50% விலைக்கழிவு

ஸ்ரீமுருகன்
இல. 303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 5392
(7.6.3)

# தொடர்ச்சிகள்

## வட மாகாண

ருந்தது.

இதற்கமைய நிறைவேற்றப்பட்ட நியதிச் சட்டங்களை வர்த்தமானியில் பிரசுரம் செய்ய வேண்டும். அவ்வாறு பிரசுரம் செய்வதனூடாகக் குறித்த சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

'நிறைவேற்றப்பட்ட இரண்டு நியதிச் சட்டங்களையும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வர்த்தமானியில் விரைவில் அவை பிரசுரமாகும்' என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வர்த்தமானியில் குறித்த நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், வடக்கு மாகாண வருமான வரித் திணைக்களம் ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்கு ஏற்கனவே அங்கீகரிக் கப்பட்ட வெற்றிடமாக 15 ஆளணி வெற்றிடம் உள்ளது. அத்துடன் வரி வசூலிப்பாளர்களுக்கான புதிய வெற்றிடம் உருவாக்கப்பட வேண்டும். நியதிச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் திணைக்களம் உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## வடக்கில் கொடூர

கள் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்குத் தடையாக அமையும். திட்டமிட்டே அரசு இந்த நடைமுறையை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

வெளிநாட்டவர்கள் இனிமேல் வடக்குக்குச் செல்லவேண்டுமாயின் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெற வேண்டும் என்று இராணுவப் பேச்சாளரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளருமான பிரிகேடியர் ருவான் வணிகசூரிய நேற்றுமுன்தினம் உத்தியோக பூர்வமாக அறிவித்திருந்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

வடக்குக்குப் பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டவர்கள் சிலர் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். எனவே, தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டே இந்த நடைமுறை அமுலுக்கு வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் இந்த உத்தரவு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவையிடம் நேற்று 'உதயன்' வினவியபோதே அவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாதுகாப்பு அமைச்சின் திட்டமிட்ட இந்த நடைமுறையால் வெளிநாட்டில் வசிப்போர், வடக்கில் உள்ள தமது உறவுகளை வந்து பார்வையிடுவதற்குப் பெரும் தடை ஏற்பட்டுள்ளது. அவர்கள் துன்ப நிகழ்வுகளிலோ அல்லது மகிழ்ச்சிகரமான நிகழ்வுகளிலோ பங்கேற்க வருவதற்கு முட்டுக்கட்டை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, வெளிநாட்டவர்கள் இனிமேல் வடக்குக்குச் செல்லவேண்டுமாயின் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெறவேண்டும் என்று அரசு கொண்டுவந்துள்ள இந்த நடைமுறையை உடனடியாக வாபஸ் பெறுமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம்" - என்றார்.

## ஐரோப்பிய

விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கப்பட்டமைக்கு மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். இது தொடர்பிலான பல்வேறு வாசகங்களையும் அவர்கள் எழுதியுள்ளனர். அத்துடன் பெரும்பாலானவர்கள் தமது முகநூலில் தமிழீழக் கொடி ஏற்றியிருப்பது போன்ற ஒளிப்படங்களையும் அதிகம் பகிர்ந்துள்ளனர்.

இலங்கையிலுள்ள தமிழர்கள் இவ்வாறு தமது மகிழ்ச்சியை முகநூல் வாயிலாக அதிகளவில் வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

## வடக்கில்

இந்த நிலையில் வடக்கு மாகாண சபையினூடாக மீள்குடியேற்றச் செயற்பாடுகளை எவ்வாறு ஒழுங்கமைக்கலாம் என்பது குறித்து சமூக ரீதியாகச் சிந்தித்தலும் கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்வதும் இன்றியமையாத செயற்பாடுகளாகக் கருதப்படுகின்றன.

இந்த நிலையில் மீள்குடியேற்றம் குறித்த கலந்துரையாடலொன்று நடத்தவுள்ளோம். இது ஒரு முக்கிய கலந்துரையாடல் என்பதாலும் தீர்க்கமான சில தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளன என்பதாலும் வடக்கு மாகாண மீள்குடியேற்றம் தொடர்பான ஆர்வமுள்ளோர் அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம்.

அத்துடன் தங்களது பிரதேச மற்றும் மாகாணத்தின் மீள்குடியேற்றம் தொடர்பான மேலான கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள முடியும்-என்றார்.

(த-10)

## 13 ஐ தாண்டி

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டுப் பல கட்சிகள் தமது கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றன. அந்த வகையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் ஆதரவுடன் 13ஆவது திருத்தத்தைச் செயற்படுத்தவும் அதனையும் தாண்டிய அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளவும் முயற்சிக்கின்றது.

இந்தத் தேர்தலில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள், வடக்கில் இருந்து இராணுவ வெளியேற்றம் போன்றன சர்வதேச சக்திகளின் எதிரொலியாக இருக்கும். இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க முன்வைக்கும் கோரிக்கைகள் தொடர்பில் நாம் ஆராய வேண்டும். அதில் சர்வதேச நிகழ்ச்சி நிரல் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

சர்வதேச சக்திகள் ஜனாதிபதித் தேர்தலை வன்முறையான பாதைக்கு இட்டுச் செல்ல முயற்சிக்கின்றன. அவை அரபு வசந்தத்தை உருவாக்கி லிபியாவை நிர்மூலமாக்கியது போல் இலங்கையிலும் அரபு வசந்தத்தை உருவாக்க முயற்சிக்கின்றன.

சர்வதேச சக்திகள் அமைதியான ஆட்சிமாற்றத்தை எதிர்பார்க்கவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 50 சதவீத மக்களின் ஆதரவு ஜனாதிபதிக்குக் கிடைத்தது. இந்த ஆதரவுடன் ஜனாதிபதி ஆட்சிப்பீடம் ஏறினார். இந்த 50 சதவீத ஆதரவை குறைக்கத்தான் சர்வதேச சக்திகள் திட்டம் தீட்டுகின்றன. அதற்காகத் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக்கூடாது என்ற சட்டப் பிரச்சினையை உருவாக்குகிறார்கள். இவற்றையும் மீறி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்டால்' மஹிந்த சட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இல்லை' என்ற கரும்புள்ளியை மக்கள் மத்தியில் விதைப்பார்கள். ஆறு வருட ஆட்சியில் ஒரு தளம்பல் நிலையை உருவாக்கவே சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன.

இந்த நிலையில் 50 சதவீத ஆதரவுடன் இம்முறையும் ஆட்சி அமைக்கப்பட்டால் ஆட்சி ஆரம்பிக்கும் தினத்தில் இருந்து சர்வதேச சக்திகள் தொடர் அழுத்தம் கொடுக்கும். ஆட்சியை ஆட்டம் காண வைக்கும். இதன் மூலம் அரபு வசந்தத்தை உருவாக்க முயற்சிக்கும்-என்றார்.

(த-10)

## தினமும்

நேரம் தொடர்பில் ரயில் திணைக்களத்தினால் உத்தியோக பூர்வமாகப் பத்திரிகைகளில் அறிவிக்கப்படாததால் மக்கள் நேரடியாக ரயில் நிலையத்துக்குச் சென்றே நேரங்களைப் பார்வையிட வேண்டியுள்ளது.

இதேவேளை, குறித்த ரயில் சேவைகளில் முற்பதிவுகள் அதிகமாக இருப்பதால் சாதாரணசீட்டுக்களைப் பெற்றே பொதுமக்கள் பயணிக்கின்றனர். அத்துடன் கடுகதி ரயில் சேவைகளில் நாளாந்தம் அரச உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதால் பொதுமக்களுக்கு ஆசனங்கள் கிடைக்கப்பெறாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

(த-14)

## வடக்கு

வரனை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கேட்டபோது, பிரிட்டன் தூதரகத்தினர் எங்களுக்கு எவ்வகையில் உதவிகளைச் செய்யலாம் என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக எங்களது வடக்கு மாகாண அரச அலுவலர்களுக்கு விசேட ஆங்கில வகுப்புக்கள் நடத்துவதன் ஊடாக அவர்களை மேம்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.

மேலும் தொழில்நுட்பம் தொடர்பிலான அறிவை எமது அரச ஊழியர்களுக்கு வழங்குவது மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்கள் தொடர்பிலேயே அதிகளவு கவனம் செலுத்தப்பட்டது - என்றார் முதலமைச்சர்.

(த-5)

## பொரித்த

இதனையடுத்து அந்தக் கடை உரிமையாளருக்கு எதிராகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழக்குத் தொடுக்கப்பட்டது.

யாழ்.நீதிமன்றில் அவர் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதனையடுத்து அவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் அவர் கடையில் உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கூறியதோடு அது தொடர்பான அறிக்கையைத் தாக்கல் செய்யுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

அது தொடர்பான அறிக்கை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு நிலைமை சீர்ப்படுத்தப்பட்டுள்ள தனை யடுத்து அந்தக் கடை தொடர்ந்து இயங்கி வருகிறது.

(த-4)

## ஆசிரியர்

இந்த நிகழ்வுக்கு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், ச.சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இதில் மாணவத் தலைவரினால் நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டது. இதில் மாணவர்களின் நிகழ்ச்சிக்கு முன்பாக விருந்தினர்களின் உரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் திருப்தி அடையாத அதிபர் மாலைகளுடன் நின்ற ஆசிரியர்களை அவதூறாகப் பேசினார். இதனால் சில ஆசிரியர்கள் கண்ணீர் மல்க நிகழ்விலிருந்து வெளியேறினர். மாணவர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு முன்பாக ஆசிரியர்களை அதிபர் கீழ்த்தரமான முறையில் நடத்தியமை தொடர்பாக நிகழ்ச்சி முடிந்த பின்னர் கேட்க முற்பட்டபோதும் தான் செய்தது தவறில்லை என அவர் அதிகாரப் போக்கில் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டது.

இதனால் ஆத்திரமுற்ற ஆசிரியர்கள் சிலர் சம்பவம் தொடர்பாகக் கையொப்பமிட்டுக் கடிதமென்றை வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

(த-422)

## மக்களை

சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடமாகாண சபையும் வவுனியா மாவட்ட செயலகமும் இணைந்து மக்களின் குறைகளை நிவர்த்திக்கும் நடமாடும் சேவையாக இது இடம்பெறும். வவுனியா வடக்கு கல்விப் பணிமனையில், மாகாண கல்வி, கலாசார, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் நடமாடும் சேவையும் மீன்பிடி, கைத்தொழில், கிராமிய அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சின் நடமாடும் சேவையும் நடைபெறும்.

புளியங்குளம் இந்துக் கல்லூரியில் உள்ளூராட்சி அமைச்சு தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, காவல்துறை, சமுர்த்தி, பிறப்பு இறப்பு பதிவாளர், காணி அமைச்சு ஆகியவற்றின் சேவைகளையும் புளியங்குளம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதாரத் திணைக்களம் மற்றும் சுதேச வைத்தியத் திணைக்களத்தின் சேவைகளையும் பெற முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த-402)

## சிறுமி

ஆசிரியர் உடனடியாக அந்தப் பகுதிக்கு பொறுப்பான சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கு இது பற்றி அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்றுப் பிற்பகல் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதாகவும், இது தொடர்பில் சிறுமியிடம் விசாரணை செய்த பொலிஸார் குறித்த சந்தேகநபரை அவரின் வீட்டில் வைத்துக் கைது செய்ததாகவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த நபர் நேற்றுப் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருக்கப்பட்டதுடன் இன்று மருத்துவப் பரிசோதனைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-109)

## யாழ்.

கல் வீசிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பஸ் சாரதி மற்றும் பயணிகள் தெரிவித்தனர்.

யாழ்.நகரிலிருந்து நேற்றிரவு 8 மணிக்குப் புறப்பட்டு அரியாலை செம்மணியில் பயணித்துக் கொண்டிருந்தபோதே சுமார் 8.10 அளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலால் பஸ் சிறிது தூரம் சென்று நின்றது. அருகில் பள்ளமான பகுதியாக இருந்த போதும் வாகனம் விபத்துக்குள்ளாகவில்லை. சாரதி சிறு காயத்துக்குள்ளானார். அதற்கு முன்பாக அவ்வழியே சைக்கிளில் லைற்றுடன் சென்ற முதியவரை நெருங்கிய மோட்டார் சைக்கிள் நபர்கள் லைற்றை அணைத்து விட்டுச் செல்லுமாறு கூறி மெதுவாக நகர்ந்தனர். சிறிது தூரம் சென்ற போது குறித்த பஸ் அவரை முந்திச் சென்றது. அடுத்த நிமிடமே குறித்த பஸ் வீதியோரம் நிறுத்தப்பட்டது. திரும்பிச் சென்று பார்த்தபோதே அதன் முன்பக்கம் மீது கல்லெறி நடத்தப்பட்டுள்ளது என்று அவ்வழியே சென்ற வயோதிபர் ஒருவர் அங்கு நின்றவர்களிடம் கூறினார்.

சம்பவம் நடந்தவுடன் அவசர அழைப்புக்கு தொடர்பு கொண்டு கூறியபோதும் 8.45 மணிக்குப் பிறகே பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தமையால் பயணிகள் விசனம் தெரிவித்தனர். அதன்பின்னர் அங்கு சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டு பஸ்ஸைப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். பயணிகள் பிறிதொரு பஸ்ஸில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். (த-4)

## புலிகள்

தொடர்ந்து நீடிக்கும் என்றும் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீது 2006 ஆம் ஆண்டு தடை விதிக்கப்பட்டது. வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் அந்த இயக்கத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் சேர்த்ததன் அடிப்படையில் தடை விதிக்கப்பட்டது. தற்போதும் அது தொடர்கிறது. இதனை எதிர்த்து 2011ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தின் சார்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நெதர்லாந்தைச் சேர்ந்த சட்டத்தரணி விக்டர் கோப் வாதாடினார். விசாரணை கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து இடம்பெற்று வந்தது. நேற்று அதன் தீர்ப்பு வழங்கப்பட்டது.

"ஐரோப்பாவின் பயங்கரவாதப் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்த்துக் கொள்வதற்கு ஐரோப்பியச் சபை கையாண்ட வழிமுறை தவறானது என்பதால் அதனை நீக்கி உத்தரவிடுகிறோம். ஆனாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீது ஏற்கனவே உள்ள நிதிமுடக்கக் கட்டுப்பாடுகள் அப்படியே இருப்பதுடன் எதிர்காலத்திலும் தற்காலிகமாகத் தொடர்ந்து வலுவில் இருக்கும்" என்று தீர்ப்புத் தொடர்பில் ஐரோப்பிய பொது நீதிமன்றம் விடுத்த செய்திக் குறிப்புக் கூறுகின்றது.

பயங்கரவாத அமைப்புகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் ஏற்படுத்திய பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஓர் அமைப்பைத் தனது சொந்த விசாரணையின் அடிப்படையில் அல்லது மற்றைய நாடுகள் எடுத்த முடிவின் அடிப்படையில் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்து அவற்றின் நிதி மூலங்களை முடக்கிவிட முடியும்.

இந்தியா புலிகள் மீது விதித்த தடையையும் ஒரு காரணமாகக் காட்டியே புலிகள் இயக்கத்தை பயங்கரவாதப் பட்டியலில் ஐரோப்பியச் சபை இணைத்தது. ஆனால் இந்தியாவின் முடிவை ஏற்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இது தொடர்பில் இந்திய அதிகாரிகள் எடுத்த முடிவுகளை ஐரோப்பிய பொது நீதிமன்றம் கேள்விக்குட்படுத்தியது. குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது தரப்பு நியாயத்தை எடுத்துச் சொல்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்கிற ஐரோப்பிய நியாயத் தரம், புலிகள் விடயத்தில் இந்தியாவால் பின்பற்றப்படவில்லை என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே ஐரோப்பிய தர நியமங்களுக்குரிய வகையில் எடுக்கப்படாத முடிவை, பயங்கரவாதம் குறித்த பொதுக் கொள்கைகளின் அடிப்படையில் "பொருத்தமான அதிகாரிகளின்" முடிவாகக் கொள்ள முடியாது என்று கூறி நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இந்த நடைமுறைத் தவறு காரணமாக மட்டுமே, ஐரோப்பியச் சபையின் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கும் முடிவு நீக்கப்படுகிறது என்று கூறியுள்ள நீதிமன்றம் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமா இல்லையா என்பது பற்றி நீதிமன்றம் இதன்போது ஆராயவில்லை என்றும் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளது.

புலிகள் மீதான தடை நீடிப்பது அவசியம் எனக் கருதினால் அது தொடர்பிலான யோசனைகளை 2 மாதங்களுக்குள் நீதிமன்றில் முன்வைக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தவறும் பட்சத்தில் 3 மாதங்களின் பின்னர் புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் முழுமையாக நடைமுறைக்கு வரும்.

அதற்கிடையில் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதப் பட்டியலில் தொடர்ந்தும் வைத்திருப்பதா இல்லையா என்பதை ஐரோப்பியச் சபை மீண்டும் ஆராய்ந்து புதிய முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, புலிகள் இயக்கம் மீதான தடையைத் தொடர்வதற்கு ஐரோப்பியச் சபை முன்வைத்த ஆதாரங்கள் ஏற்புடையவை அல்ல என்று நீதிமன்றம் நிராகரித்திருந்தது. (உ-5)

# திருடிய பொருள்களுடன் மாட்டினார்கள் ஏழு பேர்

யாழ்ப்பாணம், ஒக். 17
பல்வேறு இடங்களில் திருடப்பட்ட 32 பவுண் நகைகள், 6மடிகணினிகள், . 5க்கும் மேற் பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், ரப்லட்கள் 2, பெறுமதிமிக்க கைப்பேசிகள் உள்ளிட்ட பொருள்களைத் தாம் அதிரடியாகக் கைப்பற்றியுள்ளதோடு அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 7 பேரைக் கைது செய்துள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இளவாலை பனிப்புலம் பகுதியைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து இளவாலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் திருடப்பட்ட பொருள்களே அவை என்பது தெரிய வந்துள்ளது. அவற்றை பொலிஸார் மீட்டு பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர்.

குறித்த நபர்கள் ஏனைய பொலிஸ் பிரிவுகளில் திருடியிருப்பார்கள் என்று சந்தேகிப்பதால் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கும் அவர்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

குறித்த நபர்கள் இளவாலையில் வைத்தே திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர். (வ-4)

# 157 இலங்கை அகதிகளின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

## 'த கார்டியன்' பத்திரிகை தெரிவிப்பு

லண்டன், ஒக்.17
ஆஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 157 இலங்கை அகதிகளுக்கு, அகதி அந்தஸ்துக்கோரி விண்ணப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய மேல் நீதிமன்றத்தின் ஆவணங்களை மேற்கோள் காட்டி 'த கார்டியன்' பத்திரிகை இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

கடந்த ஜுன் மாதம் கைது செய்யப்பட்டிருந்த குறித்த அகதிகள் அனைவரும் கடலில் கப்பல் ஒன்றில் ஒரு மாத காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு ஒன்று அந்த நாட்டின் மேல் நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது. இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணம் ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குறித்த அகதிகளிடம் ஒரே மாதிரியான கேள்விகளைக் கேட்டு, குறித்த கப்பலில் அடைக்கப்பட்டனர். எனினும் அவர்கள் அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பம் செய்யஅனுமதிக்கப்படவில்லை. இது மிகப்பெரிய அகதி உரிமை மீறல் என்று குற்றஞ் சுமத்தப்பட்டிருக்கிறது. (ற)

# தமிழக மீனவரை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்குக

## ஓ.பன்னீர்செல்வம் பிரதமருக்கு கடிதம்

சென்னை, ஒக்.17
இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும், அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 75 படகுகளையும் விடுவிக்கக் கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கடிதம் எழுதியுள்ளார்.



அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைக்காலமாக தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பறிக்கும் வகையில் பறிமுதல் செய்யப்பட்ட அவர்களது படகுகளை திருப்பித்தராமல் பழிவாங்கும் போக்கில் செயற்படுகிறது இலங்கை அரசு.

இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தங்களுக்கு பலமுறை கடிதம் எழுதியிருக்கிறார்.

அந்தக் கடிதங்களில் எல்லாம், பாக்கு நீரிணை பகுதியில் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை மீட்டெடுக்க கச்சதீவை மீட்பதே ஒரேவழி என அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

எங்கள் கட்சித் தலைவியின் நிலைப்பாட்டை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். கச்சதீவை மீட்க- மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 8 ஆம் திகதி நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தில் தமிழக மீனவர்கள் 24 பேரையும், பல்வேறு கட்டங்களில் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் 75 படகுகளையும் விடுவிக்க தாங்கள் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியிருந்தேன்.

தமிழக மீனவர்கள் 24 பேரும் இன்னமும் சிறையில் வாடுகின்றனர். தமிழக மீனவர்களின் படகுகளை வேண்டுமென்றே திருப்பித்தர மறுக்கிறது இலங்கை அரசு. நீண்ட நாள்களாக படகுகள் இல்லாமல், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் தமிழக மீனவர்கள் தவித்து வருகின்றனர்.

இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் சரியான பராமரிப்பு இல்லாமல், போதிய பாதுகாப்பு இல்லாமல் கிடக்கின்றன.

வட கிழக்கு பருவ மழைக்கு முன்னர் தமிழக மீனவர்களின் படகுகளை மீட்கப்பட வேண்டும்.

எனவே இந்த விவகாரத்தில் பிரதமர் துறை சார்ந்த நடவடிக்கை எடுத்து தமிழக மீனவர்களையும், 75 படகுகளையும் மீட்க நடவ டிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு முதல்வர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (வ)

# டென்மார்க்கில் நடைபெற்ற தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்



தமிழீழ பெண்கள் எழுச்சி நாள், டென்மார்க்கில் ஸ்கேஜன் நகரில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இந்த நிகழ்வில் 2 ஆம் லெப் மாலதி, குமரப்பா, புலேந்திரன், உட்பட 12 வேங்கைகளையும் நினைவு கூர்ந்து அவர்களின் திருவுருவப் படங்களுக்கு சுடர் வணக்கம், அக வணக்கம், மலர் வணக்கம் என்பன செலுத்தப்பட்டன.

தொடர்ந்து எழுச்சிப் பாடலுக்கான நடனங்கள், பெண்கள் எழுச்சிக் கவிதைகள், பேச்சுக்கள், பாடல்கள் என நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. நிறைவாக நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் பாடலுடன் பெண்கள் எழுச்சிநாள் நிறைவுக்கு வந்தது. (வ)

# தேர்தலில் வெற்றியீட்ட ஐ.தே.கவின் 'ஜீ-20'

கொழும்பு, ஒக்.17
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சி, 'ஜீ-20' என்ற குழுவொன்றை நியமித்துள்ளது. ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டும் நோக்கிலேயே இந்த 20 பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் இந்தக் குழுவில் இணைக்கப்பட்டுள்ளனர். கரு ஜயசூரிய, ஜோசப் மைக்கல் பெரேரா, ஜோன் அமரதுங்க, பாலித ரங்கே பண்டார, தலதா அதுகோரள, அசோக அபயசிங்க, ரஞ்சித் மத்தும பண்டார, பீ.ஹரிசன், எரான் விக்ரமரட்ன, அஜித் பீ.பெரேரா, அகில விராஜ் காரியவசம், ரோசி சேனாநாயக்க, வசந்தஅலுவிஹார மற்றும் ஹரீன் பெர்னாண்டோ ஆகியோர் உள்ளிட்ட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழு ஏற்கனவே இரண்டு தடவைகள் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

## குற்றங்களும் கைதுகளும்

கிளிநொச்சி

### கசிப்புடன் இருவர் பொலிஸில்

இராமநாதபுரம், திருவையாறு ஆகிய பகுதிகளில் கசிப்புடன் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் 13 போத்தல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணம், கசிப்பு என்பவற்றை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்தனர்.

அவரை திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியதை அடுத்து குறித்த குற்ற வாளிக்கு ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று புதுக்காடு, இராமநாதபுரம் பகுதியில் மூன்று



போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண் ஒருவரை கிளிநொச்சி பொலிஸார் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து குறித்த பெண்ணுக்கு இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. [வ—55]

சங்கானை

### வங்கி அதிகாரியின் மோ.சை.திருட்டு

சங்கானை மக்கள் வங்கியில் இரண்டாம் தர அதிகாரியாகக் கடமையாற்றுபவரின் மோட்டார் சைக்கிள் செவ்வாய்க்கிழமை களவாடப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

வங்கியின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில், வழமைபோல், தனது மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு கடமையில் ஈடுபட்டுள்ளார். மதிய நேரம் வீட்டுக்குச் செல்வதற்காகச் சென்றபோது மோட்டார் சைக்கிளைக் காணாது இவர் அதிர்ச்சியடைந்துள்ளார். இதேவேளை— அராலியைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது சைக்கிளை வங்கியின் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்திவிட்டு, பி.ப. 3.30 மணிபோல் அதனை எடுத்துச் செல்வதற்கு வந்துள்ளார். அவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த மானிப்பாய் பொலிஸார், விசாரணைகளை மேற்கொள்வதற்காக பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றுள் ளனர். குறித்த வங்கியில் மாதாந்தம் ஒவ்வொரு சைக்கிள் களவு போவதும் குறிப்பிடத்தக்கது. [வ—29]

தென்மராட்சி

### சாரதிகள் இருவர் கைது

சாவகச்சேரி பகுதியில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பாக இரு வாகனங்களின் சாரதிகளையும் நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்குகளை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இருவரையும் தலா 50ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். [வ—9]

தென்மராட்சி

### போக்குவரத்து விதிகளை மீறினார் வாகனச் சாரதி

வீதியின் நடுவே தொடராக போடப்பட்டுள்ள வெள்ளைக் கோட்டுப் பகுதியைக் கடந்து வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வாகனச்சாரதியை போக்குவரத்துப் பொலிஸார் கைதுசெய்தனர். குறித்த சாரதிக்கு எதிராக பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நேற்றுமுன்தினம் விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை, சாரதிக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். வீதிப்போக்குவரத்து விதிமுறைகளின்படி வீதியின் நடுவே அமைக்கப்பட்டுள்ள வெள்ளைக் கோட்டில் இடைவெளி உள்ள பகுதியிலேயே ஒருவாகனத்தை மற்ற வாகனம் முந்த முடியுமென்பது குறிப்பிடத்தக்கது. [வ—9]

வலி.வடக்கு

### கசிப்பு பரல்களுடன் குப்பிளான் வாசி சிக்கினார்

குப்பிளான் தெற்கில் உள்ள வெளிநாட்டவரின் வீட்டில் இருந்து இரண்டு கசிப்பு பரல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை இரவு குப்பிளான் தெற்கு கன்னிமார் அம்மன்கோயிலுக்கு பின்புறமாகவுள்ள வீடொன்றில் கசிப்பு காய்ச்சப்படுவதாக சுன்னாகம் பொலிஸாருக்கு பொது மக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் சுற்றி வளைத்து கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் உபகரணங்கள், 2 பரல்களில்கோடா உட்பட மற்றும் சில கசிப்புக்கு பயன்படும் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிஸாரால் முன்னிலைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இரு வார காலத்துக்கு அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தால் கட்டளையிடப் பட்டுள்ளது. [வ—86]

கல்முனை

### பொலிஸ்காரருடன் பெண்ஒருவர் கல்முனை ஆலயத்தில் சில்மிஷம்

கல்முனை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் கல்முனை பொலிஸில் தொழில்புரியும் பொலிஸ் உத்தியோகத்தருடன் பெண் ஒருவர் தகாத முறையில் நடந்து கொண்டதாகவும் அதனை அறிந்த பொதுமக்கள் அந்த இடத்துக்கு விரைந்து இருவரையும் நேற்றுமுன்தினம் மாலை நேரடியாகப் பிடித்துள்ளனர்.

அதன்பின் தாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நேசிப்பதாகவும் கூறினார்கள். அந்தவேளை குறித்த இடத்துக்குச் சென்ற கல்முனை பொலிஸார் அங்கு என்ன சம்பவம்" நடைபெற்றது என்று விசாரிக்காமல் அங்கு நின்ற ஆலய பிரதம குருவையும் மற்றும் இரண்டு இளைஞர்களையும் பலவந்தமாகப் பிடித்து பொலிஸ் வாகனத்திலும் அம்புலன்ஸிலும் ஏற்றிச்சென்ற சம்பவத்தை அடுத்து கல்முனை மக்கள் பொலிஸ் நிலையம் நோக்கி படையெடுத்தனர்.

அதன்பின்னர் கல்முனை பொலிஸ் நிலை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி தென்னக்கோன் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் கைது செய்து சென்றவர்களை விடுவித்ததோடு பிரச்சினைக்குரிய பொலிஸாரை உடனடியாக இடமாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். [வ]

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# பாண்டியன்குளம், முத்தையன் கட்டு பஸ் சேவை இன்று முதல் ஆரம்பம்

அரச, தனியார் உத்தியோகத்தர்களினதும் மற்றும் பயணிகளினதும் வேண்டுகோளுக்கமைய யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து பாண்டியன்குளம், முத்தையன் கட்டுக்குமான பஸ் சேவை இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர்ச்சியாக இடம்பெறும் என இ.போ.ச வடக்கு பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து மாங்குளம்-துணுக்காய் ஊடாக பாண்டியன் குளத்துக்கான பஸ் சேவை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி மாங்குளம், துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேச செயலகம் ஊடாக நட்டாங்கண்டல் வரைக்கும்இடம்பெற்று பி.ப.3 மணிக்கு நட்டாங்கண்டலிருந்து புறப்பட்டுப் பாண்டியன்குளம், துணுக்காய்,மாங்குளம் ஊடாக யாழ்.மத்திய பஸ் நிலையம் வரை இடம்பெறும்.

முத்தையன்கட்டுக்கான பஸ் சேவை காலை 7 மணிக்கு யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு பரந்தன், புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான் ஊடாக முத்தையன் கட்டு வரைக்கும் இடம்பெற்றுப் பின்னர் பி.ப3.30மணிக்கு முத்தையன் கட்டியிலிருந்து புறப்பட்டு ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு பரந்தன் ஊடாக யாழ். மத்திய பஸ் நிலையம் வரைக்கும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## FURNITURE MEGA SALE

ARPICO | Nilkamal

வந்து பாருங்கள் விதர்யாசத்தை புரிவீர்கள்

தீபாவளி தள்ளுபடி
Steel Cupboard 6900/=
எங்கும் கிடைக்காத விலைக்கழிவு
7 days open 8A.M → 8 P.M

Glass dining Table Set 27000/= 17500/=

தளபாட அமோக மலிவு விற்பனை நிலையம்
204, Brown Road, Jaffna.
பிறவுண் றோட், மிருகவைத்திய சாலை அருகில்
T.P: 077 491 2805, 077 006 4651, 0777 286 069

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மித்த பகுதிக்குள் (5Km) சிறிய குடும்பம் ஒன்றிற்கு சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு தேவை.

T.P-077 1587186

## அமெரிக்க லொத்தர் விசா - V2 Travels & Tours

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு - உடனே விரையுங்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்

| கிளிநொச்சி | யாழ்ப்பாணம் | நெல்லியடி | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|
| 0771516537 | 0773867257 | 0776699892 | 0776697960 |

## 1,000 ரூபா கட்டணத்துடன் Desktop Publishing - DTP

CorelDRAW, PageMaker, PhotoShop, Scanning Technology, Type Setting

பதிவுக்கட்டணம் இல்லை

பதிவுகளுக்கு 775520940க்கு SMS அனுப்பவும்

கல்வியங்காட்டு சந்தியில் MCAI CAMPUS

Supported by Jaffna Computer Society www.mcai.edu.lk

## விற்பனைப் பிரதிநிதி(ஆண்கள்)

E-TEL கையடக்கத் தொலைபேசி நிறுவனத் திற்கு யாழ் மாவட்டத்தில் விற்பனைப் பிரதிநிதி யாகக் கடமையாற்ற அனுபவமும் தகுதியும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர் பார்க்கின்றோம்.

தகைமைகள் :
1) 30வயதிற்கு உட்பட்டோர்
2) சாரதி அனுமதிப்பத்திரம்
3) சொந்தமாக மோட்டார்சைக்கிள்
4) க.பொ.த உயர்தர சித்தி

காலம் : சனிக்கிழமை (18-10-2014) மு.ப 10.00 - 12.00 மணிவரை

இடம் : E-TEL இன் யாழ் மாவட்ட ஏக விநியோகத்தர்கள்

அம்பிகை களஞ்சியம்
306,ஆஸ்பத்திரி வீதி ,யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 1262

(சி17037) (08)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSYயின் கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள் (பிரெஞ் ஆசிரியர் உட்பட) சரியான உச்சரிப்பு, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம்.ஓரிரு மாதங்களும் படிக்கலாம்

உடன் பதிவுசெய்யுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டிப் பரீட்சை விசேட வகுப்புகள்

கமநல திணைக்கள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பரீட்சைக்கு சனி, ஞாயிறு, புதன் காலை 9.00-4.00 மணி வரை

SLAS மட்டுப்படுத் தப்பட்ட பரீட்சைக்கு ஒவ்வொரு ஞாயிறும் 9.00-3.00 மணிவரை

முகாமைத்துவ உதவியாளர் பிரிவு I ஞாயிறு 1.30 மணி பிரிவு II புதன் 3.00 மணி

மட்டுப்படுத்தப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் சனி 1.00 மணி

அபிவிருத்தி உத்தியோத்தர் EB ஞாயிறு 9.00-12.00 மணி வரை

T.P : 0 54164564

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)

## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2014 சித்தியடைந்த மாணவர்களுக்கான

பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 19.10.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடி (ராஜா கிறீம் ஹவுஸ்) சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்

## விசேட கருத்தரங்கு

Oct. 25ஆம் திகதி நடைபெறவுள்ள கமநல அபிவிருத்தி திணைக்கள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் போட்டிப் பரீட்சை Sat. 10.00am-5.00pm

முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை ஒவ்வொரு சனிக்கிழமைகளில் மாலை 2.00pm - 5.00pm

SLAS (Limited) ஒவ்வொரு சனிக்கிழமைகளில் 8.30am - 2.30pm விரிவுரையாளர்: P.சாரங்கன், P.பாஸ்கரன்

நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 077 469 6695 (சி/17088) (7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இன்று நடைபெறும் இலங்கை உயர் தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு நிகழ்வில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம் பெறும் செல்வி கிருஜா ஸ்கந்தராஜா அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அண்ணா (விஜிதன்), மாமா (ஆனந்தன்), சித்திமார், அம்மம்மா, சித்தப்பா, செல்வி அக்கா குடும்பம் (சுவிஸ்), வினோ அக்கா குடும்பம் (லண்டன்).

(63277) (45.6.3)

## கட்டார் நாட்டின் தலைநகரத்தில் உள்ள Hamad சர்வதேச விமான நிலையத்தில் புதிய வசதி சேவைக்காக நிர்வாக கட்டக அமைப்பில் பணிபுரிவதற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளன உடன் முந்துங்கள்

| Categories | Salary | Categories | Salary |
|---|---|---|---|
| Maintenance Manager | 29000 | Sr.Technical Officer(Electrical) | 5000 |
| Precinct Manager | 29000 | Sr.Technical Officer(Electronics) | 5000 |
| Quality Control Manager | 29000 | Administrative Officer | 3500 |
| Training Manager | 29000 | Sr.Technical Officer (Civil/Electronics/HVAC/Mechanical) | 3229 |
| Administrative Manager | 29000 | Store Keeper | 3600 |
| Deputy Manager (Electrical/Electronic/Mechanical) | 22000 | Supervisor (Cleaning) | 2600 |
| | | Administrative Assistant | 2400 |
| Zone Manager | 22000 | Building Management System Operators | 2400 |
| Safety Manager | 22000 | | |
| Planner | 8000 | Fault Reporting Center Operators | 2400 |
| Procurement officer | 8000 | Help Desk Operators | 2400 |
| Accountant | 8000 | Heavy Driver | 2407 |
| Safety Officer | 7200 | HVAC Mechanic | 1446 |
| Sr.Administrative Officer | 6600 | Locksmith | 1400 |
| Engineer (Civil) | 6000 | Locksmith Assistant | 1400 |
| Engineer (Machanical) | 6000 | Mechanic (Mechanical Technician) | 1400 |
| Engineer (Electrical) | 6000 | Technician (Mechanical, Electronics, Electrical, Civil) | 1320 |
| Engineer (Electronics) | 6000 | Plumber | 1200 |
| IT Support | 5000 | Light Driver | 1292 |
| Sr.Technical Officer (Civil) | 5000 | Carpenter | 1113 |
| Sr.Technical Officer (Mechanical) | 5000 | Cleaners | 900 |

(உணவு, தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்)

நேர்முக தேர்வு நடைபெறும் இடம் :

உதயன் விருந்தினர் விடுதி
இல. 20, கன்னாதிட்டி வீதி,
காளிகோயில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

காலம் : எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மு.ப. 9.00 - பி.ப. 2.00 மணி வரை

ஆவணங்கள் :
பாஸ்போட், சுயவிவரக்கோவை, Photo, கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

முக்கிய குறிப்பு :
பயணத்திற்கான வங்கிக் கடன் வசதியும் பெற்றுத் தரப்படும்.

உடன் தொடர்புகொள்ள :

Lanka Voice Adve (Jaffna) : 077 952 7575
Lanka Voice Adve (Vavuniya, Mannar) 076 669 7789
Capitalrecruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, Grandpass, Colombo-14.
LL No : 2248

(C/17022)(7.6.3)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

After A/L What Next???

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

### Spoken English With Grammar - Quick Learning Course

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

### Diploma In English

Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

### B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

### IELTS Acadamic/General

We do Official Online Registration for Exam Candidates

Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

We gurantee success rate 6.5 band and above

### A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Duration: (2 Months)

(C/16836)(7.6.3)

| 18.10.2014@8.00am | 19.10.2014@11.00am | 20.10.2014@3.00pm | 22.10.2014@9.00am |
|---|---|---|---|

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 021 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.